DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

பஞ் சொக்கலிங்கம்
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1346 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 21, 2022

# மிசிசாகாவில் வாகனத்தால் மோதப்பட்டு உயிரிழந்த தமிழர் ஒருவரின் மரணம் தொடர்பாக பொலிசார் விசாரணை



மிசிசாகா நகரில் வாகனத்தால் மோதப்பட்டு உயிரிழந்த தமிழர் ஒருவரின் மரணம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

35 வயதுடையவரும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழரான இவரின் மரணத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை அடையாளம் காண உதவுமாறு, மிசிசாகா பிராந்திய பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


கடந்த டிசம்பர் 17ஆம் திகதி, மிசிசாகா நகரில் இடம்பெற்ற விபத்தில் 35 வயதுடைய சுரேஷ் தர்மகுலசிங்கம் என்பவர் உயிரிழந்தார். கனடாவின் மார்க்கம் நகரில் வசித்து வந்த சேர்ந்த இவர் வீதியை கடந்து தனது வாகனத்திற்கு சென்ற போது வாகனம் ஒன்றினால் மோதப்பட்டு,படுகாயமடைந்தார்.

விபத்தின் பின்னர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், சிகிச்சை பலனின்றி, டிசெம்பர் 24ஆம் திகதி மரணமானார். இந்நிலையில் அவரை மோதிய வாகனத்தின் சாரதி, அந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

*(தொடர்ச்சி உள்ளே 17ம் பக்கத்தில்)*

## ஒன்றாரியோவில் பாடசாலைகளை மீளத்திறப்பது தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழுவே தீர்மானித்தது

### -என்கிறார் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே



தற்போது ஒன்றாரியோவில் அமுல் செய்யப்பட்டுள்ள பாடசாலைகளை மீளத்திறப்பதும் வகுப்பறைகளில் மாணவர்கள் நேரடியாக கல்வி கற்பது தொடர்பாக எமது கல்வி அமைச்சு தனியாக முடிவுகளை எடுக்கவில்லை. சுகாதார அமைச்சு அதன் கீழ் வரும் மாகாண தலைமை சுகாதார அதிகாரி மற்றும் பல அறிஞர்கள் கொண்ட பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் அதிகாரிகள் கொண்ட குழுவே தீர்மானித்தது என்கிறார் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே நேற்று வியாழக்கிழமையன்று மதியம் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி ஊடகங்களின் ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்கள் ஆகியோரை இணையவழி ஊடாக சந்தித்து உரையாடியபோதே அமைச்சர் அவ்வாறு தெரிவித்தார். *(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*

**உங்கள் அபிமான கனடா உதயன் ஈழத்து படைப்பாளிகளுக்கு களம் கொடுக்கும் மற்றும் மதிப்பளிக்கும் வகையில் 2022 மே மாதத்தில் "ஈழத்துச் சிறப்பிதழை" வெளியிடவுள்ளது.**

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

வீடு வாங்க விற்க
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com





## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: 416-894-6244

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### சாஸ்திரம்

மதுரை மீனாட்சி துணை கடந்த 40 வருடத்திற்கு மேல் அனுபவமிக்க நந்தி வாக்கிய ஓலை சாஸ்திரம்

பிறந்த திகதி, வருடம், மாதம், நேரம் சொன்னால் போதும் நடக்கப்போவதை மிக துள்ளியமாக கணித்து சொல்லப்படும்.

தொடர்புகளுக்கு: கோ. காசிலிங்கம் 437-925-5643

### Basement for Rent

Mclevin and Sewells சந்திப்புக்கு அருகில் உள்ள Basment with separate entrance உடனடியாக வாடகைக்கு உண்டு.

Laundry, wifi, access to nearby stores and TTC.

விபரங்களுக்கு: 416-809-2280

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.



Our secure online application is easy to complete, just go to gopal@driveautogroup.ca

Or call Gopal Pillai at: (647) 763-0210

brimell

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Basement for Rent

Pharmacy / Lawrence சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.

2 washrooms. Separate entrance and parking available.

Newly renovated.

Washer+Dryer separate.

விபரங்களுக்கு: 416-302-9022

### HOUSE for RENT

மார்க்கம் நகரில் Markham / Denison சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீடு, basement தவிர்த்து உடனடியாக வாடகைக்கு உண்டு.

4 வாகனங்களுக்கான parking உண்டு. 407 பெருந்தெரு, கடைகள் பாடசாலைகள் மற்றும் அனைத்து வசதிகளும் அருகில் உள்ளன.

விபரங்களுக்கு: (647) 282-0643 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

### நேரலை வீடியோ ஒளிபரப்பு சேவை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திலும் கியுபெக் மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் சுப வைபவங்கள் மற்றும் இறுதிக்கிரிகைகள் ஆகியவற்றை நேரடியாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது மாத்திரமன்றி. அந்த நிகழ்வுகளை நேரடியாக முகநூல் மற்றும் இணையத் தளங்களில் நேரலையாக ஒளிபரப்பவும் எம்மை அழையுங்கள். குறைந்த கட்டணமே அறவிடப்படும் அழையுங்கள்

சிவா 647 891 7725

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# இலங்கை அரசிற்கு தாக்கங்களை ஏற்படுத்தும் விமர்சனங்கள் வடக்கு கிழக்கிலிருந்து வலுவிழந்து விட்டனவா?

இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர் பற்றிய வெறுப்பை விட ஒரு 'பீதி' யை ஏற்படுத்தும் நிலையே அந்த தீவின் நிலப்பரப்பில் மாத்திரமல்ல உலகின் பல நாடுகளிலிருந்தும் தோன்றியுள்ளதை நாம் அனைவரும் அவதானிக்கும் வகையில் தகவல்களும் செய்திகளும் பரவி வருகின்றன. இலங்கையில் தமிழ் மக்களை அடக்கி ஒழிப்பதில் கங்கணம் கட்டியிருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சி அமைந்திருந்த காலத்திலும் பார்க்க முழு இலங்கை மக்களையும் பாதாளத்தில் தள்ளும் ஆட்சி ஒன்றையே இந்த அரசாங்கம் தனது கைகளில் எடுத்துள்ளதாகவும் உள்நாட்டில் உள்ள தமிழ் சிங்கள விமர்சகர்கள் தங்கள் எழுத்துக்களில் வடித்து வருகின்றனர்.

ஆனாலும் தீவிரமாக விமர்சனங்களும் கண்டனங்களும் எழுந்து வர வேண்டிய வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து அழிவை நோக்கி ஆட்சி நடத்தும் தற்போதைய அரசு தொடர்பாக எதுவும் வரவில்லை என்ற வெற்றிடம் தொடர்பாகவும் அங்கு கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன.

இவ்வாறான ஆரோக்கியமற்ற ஆட்சி ஒன்று அங்கு தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதால் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் தொகையைக் கொண்ட முழுதான இலங்கைக்கே ஆபத்து வரவுள்ளதை, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான சந்திரிகா விஜயகுமாரணதுங்க தெரிவித்துள்ள செய்தியொன்று இவ்வாரத்தின் எமது பக்கங்களில் ஒன்றில் காணப்படுகின்றது.

இலங்கையில் ஆட்சியில் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் தவறுகள் செய்தாலும் நல்லவர்களாகவே சித்தரிக்க முயலுகின்றார்கள் என்று தெரிவித்துள்ள அவர்

இலங்கையில் தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் தவறுகள் செய்தாலும் தங்களை நல்லவர்களாகவே சித்தரிக்க முயலுகின்றார்கள். என்றும் அவர்கள் செய்யும் தவறுகளை விமர்சிப்பவர்களை தவறானவர்களாக காண்பிப்பதோடு. அவர்களை கைது செய்யவும் பொலிஸ் அதிகாரிகளை நிர்ப்பந்தம் செய்கின்றார்கள். என்றும் உண்மையாக விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸ் அதிகாரிகளையும் கைது செய்யும் படி தமது சகாக்களான சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றார்கள் என்றும் பல விடங்களை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

பொதுவாகவே இலங்கை அரசியலில் பழி தீர்க்கும் படலத்தில் கொலைகளைக் கூட செய்வதற்கு அஞ்சாத தற்போதைய ஆட்சித் தலைவர்கள் சந்திரிகாவின் கூற்றுக்கு என்ன பதிலைத் தரவுள்ளார்கள் என்பதோ அலலது எவ்வதையான பழிவாங்களை சந்திரிகாவின் மீது தொடுப்பார்களோ என்பதை பலர் கவனித்த வண்ணம் உள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் இலங்கை பற்றிய யதார்த்தமான ஒரு அறிக்கையை கனடிய வெளிநாட்டு அமைச்சு வெளியிட்டுள்ளதையும் அதற்கு தனது எதிர்ப்பை அரசியல் நாகரீகம் என்ற போர்வையில் அறிக்கை ஒன்றின் மூலம் இலங்கை அரசின் வெளிநாட்டு அலுவல்கள் வெளியிட்டுள்ள செய்தியும் இன்னொரு பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

மேற்படி செய்தியின் குறிப்பிட்டுள்ள வண்ணம் இலங்கையின் தற்போதைய நிலை பற்றி அண்மையில் கனடாவின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையானது தவறானது என்றும் அதில் உள்ள தகவல்கள் தவறான என்பதோடு மட்டுமல்லாது. காலாவதியான தகவல்களையும் உள்ளடக்கியுள்ளன என்றும் மற்றும் இலங்கையின் உண்மையான நிலைமையை பிரதிபலிக்காத வகையில் கனடாவின் 2022 ஜனவரி 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான கனேடிய பயண ஆலோசனை தொடர்பில் இலங்கை அரசும் அதன் வெளிநாட்டு அமைச்சும் கவனம் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய அரசின் அறிக்கையானது இலங்கைக்கு உல்லாசப் பயணிகளும் வர்த்தக முதலீட்டாளர்களும் வருவதற்கு அஞ்சுவார்கள் என்றும் இலங்கை தொடர்பாக ஏனைய நாடுகளும் இலங்கை பற்றிய பாதகமான விடயங்களை தங்கள் தங்கள் நாட்டுப் பிரஜைகளின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம் என்ற இலங்கையின் அச்சத்தை இந்த அறிக்கை வெளிப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இலங்கையின் வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற உரைகளின் நேரத்தில் மாத்திரமல்ல. பொதுவெளியிலும் இலங்கை அரசின் பாதகமான ஆட்சி பற்றிய தொடர்ச்சியான விமர்சனங்களை முன்வைக்க வேண்டும் என்பதே அவர்களுக்கு வாக்களித்தவர்களின் வேண்டுகோளாக உள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டிதொன்றாகும்.

*கடைசிப் பக்கத் தொடர்ச்சி...*

# இலங்கையில் ஆட்சியில் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் தவறுகள் செய்தாலும் ....



தவறிழைத்தவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் உலகில் எங்கும் இடம்பெறுவதில்லை.

தென் ஆபிரிக்காவைப் போன்ற அறியாமையுடைய, சர்வாதிகார நாடுகளைப் போன்று இலங்கையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக தற்போதைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவிற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 19 ஆம் திகதி புதன்கிழமை அழைக்கப்பட்டிருந்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் செயற்படுத்தப்பட்ட ஊழல் ஒழிப்பு குழு தொடர்பில் தகவல்களை அறிந்துகொள்வதற்காக தான் அழைக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

குறித்த பொலிஸ் பிரிவில் சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கிய அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இவர்கள் மீண்டும் மீண்டும் தவறு செய்து , நாட்டை சீரழித்து விட்டு அவர்கள் சிறந்தவர்களாக முயற்சிக்கின்றனர். அவர்களது தவறுகளைப் பற்றி கூறுபவர்களை தவறானவர்களாகக் காண்பிக்கின்றனர்.

உலகில் எந்தவொரு இடத்திலும் எவரேனும் தவறிழைத்தால், அது தொடர்பில் பொலிஸார் நியாயமான விசாரணைகளை முன்னெடுத்து அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ள அல்லது செய்ய தயாராகும் போது , அவ்வாறான நபர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்தவர்களை கைது செய்கின்றனர்.

உலகில் எங்கும் இது போன்று இடம்பெறவில்லை. தென் ஆபிரிக்கா போன்ற அறியாமையுடைய சர்வாதிகார நாடுகளைத் தவிர வேறு எங்கும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதில்லை.

சந்திரிக்கா என்ன செய்தார் என்று கேள்வியெழுப்பும் ராஜபக்ஷாக்களுக்கு நினைவுபடுத்துவதற்காக இதனைக் கூறுகின்றேன்.

1994 இல் நான் ஆட்சியை பொறுப்பேற்கும் போது உலகிலுள்ள மொத்த நாடுகளில் வறுமைக் கோட்டிலுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை 25 ஆவது இடத்தில் காணப்பட்டது. 11 ஆண்டுகள் எனது ஆட்சி நிறைவடைந்த போது , போசாக்குள்ள 72 நாடுகளுக்குள் இலங்கையையும் கொண்டு சென்றேன்.

அது மாத்திரமின்றி தனிநபர் வருமானத்தை மூன்று மடங்காக அதிகரித்து , தேசிய உற்பத்திகளையும் மூன்று மடங்காக அதிகரிக்க எனது ஆட்சி காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் 5 மடங்காக அதிகரிக்கப்பட்டது. சிறந்த முறையில் மேம்படுத்தப்பட்டிருந்த கல்வி துறை 2006 இன் பின்னர் முழுமையாக சீரழிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நிலைமைகள் முற்றாக மாற்றமடைந்துள்ளன. இந்த நாட்டில் சிறந்த எதிர்காலமொன்று இருப்பதாக எனக்கு தெரியவில்லை என்றார்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பலவந்தமாக வீட்டிற்குள் நுழைந்த பொலிஸார் சி.சி.டி.வி பதிவுகளை எடுத்துச்சென்றனர்




## கைக்குண்டு விவகாரத்தில் கைதுசெய்யப்பட்ட மருத்துவரின் மகன் தெரிவிப்பு

பொரளை கிறிஸ்தவ தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற மருத்துவரின் மகன் பொலிஸார் நடந்துகொண்ட விதம் குறித்து கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

பலவந்தமாகவீட்டிற்குள் நுழைந்த கிருலப்பனை பொலிஸார் சிசிடிவியில் பதியப்பட்டிருந்த தரவுகளை வலுக்கட்டாயமாக கொண்டு சென்றனர் என அவர் தெரிவித்துள்ளார். ஓய்வுபெற்ற மருத்துவர் வீட்டில் துப்பாக்கிகளையும் வாள்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு கைத்துப்பாக்கிகளையும் ஒருரிவோல்வரையும் இரண்டுவாள்களையும், ஒரு கத்தியையும் துப்பாக்கியொன்றையும் பிலியந்தலையில் உள்ள வீட்டிலிருந்து மீட்டதாக பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இது குறித்து தெரிவித்துள்ள மருத்துவரின்மகன் ஒஸ்கலா ஹேரத் திங்கட்கிழமை வீட்டிற்குள்நுழைந்தபொலிஸார் அங்கிருந்த அனைவரினதும் கையடக்க தொலைபேசிகளை பறித்தனர் என தெரிவித்துள்ளார். எங்களை எங்கள் அறைக்குள் செல்லுமாறு கேட்டனர்,எனது தந்தை ஓய்வுபெற்ற மருத்துவர்என்னிடம் இரண்டு பென் டிரைவ்கள் காணப்பட்டன - பொலிஸார் வங்கிக்கணக்குகள் குறித்தஅனைத்துவிபரங்களையும்பதிவுசெய்தனர்.

எனது கணினி யின் கடவுச் சொற்களைபெற்றுக்கொண்டனர் என அவர்தெரிவித்துள்ளார். கையடக்க தொலைபேசிகளையும் ஏனைய விபரங்களையும் பெற்றமைக்கான ஆவணங்களை அவர்கள் வழங்கவில்லை என அவர்தெரிவித்துள்ளார்.

எங்கள் வீட்டில் ஆயுதங்கள் துப்பாக்கிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என ஊடகங்களில் வெளியான தகவல்களை நான் பார்த்தேன் ஆனால் எனது வீட்டில் எனது சிறுவயது விளையாட்டு துப்பாக்கிகளே காணப்பட்டன.

சில எயர் ரைபில் துப்பாக்கிகளும் பரிசாக கிடைத்த வாள்களும் காணப்பட்டன என அவர்தெரிவித்துள்ளார். நடந்தது அனைத்தும் சிசிடிவியில் பதிவு செய்யப்பட்டிருந்தது, ஆனால் கிருலப்பனை பொலிஸ் உத்தியோகத்தர் பலவந்தமாக வீட்டிற்குள் நுழைந்து சிசிடிவிதரவுகளை எடுத்துச்சென்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவர் எனது சகோதரியிடமிருந்து பலவந்தமாக எங்கள் விருப்பத்தின் படி சிசிடிவி பதிவுகளை எடுத்துள்ளதாக வாக்குமூலத்தை பெற்றார்எனவும் வைத்தியரின் மகன் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள தந்தையை பார்ப்பதற்கு எங்கள் சட்டத்தரணிகளை பொலிஸார் அனுமதிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். மனித-உரிமை ஆணைக்குழுவிற்குஇது குறித்துமுறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார்.



# தங்கப் பதக்கம் வென்ற இலங்கை விளையாட்டு வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத்திற்கு வீடு அன்பளிப்பு

டோக்கியோவில் நடைபெற்ற பராலிம்பில் 2020 ஈட்டி எறிதல் போட்டியில் புதிய உலக சாதனையை நிலைநாட்டி இலங்கைக்கு தங்கப் பதக்கம் வென்று கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத் திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் புதன்கிழமை (19) புதிய வீடொன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களின் தலையீட்டின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட இவ்வீட்டிற்கான "அன்பளிப்பு பத்திரம்" பிரதமரினால் தங்கப் பதக்கம் வென்ற வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத் திற்கு அலரி மாளிகையில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

உலக சாதனையை நிலைநாட்டி இலங்கைக்கு தங்கப் பதக்கம் வென்று கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத் திற்கு புதிய வீடொன்றை பெற்றுக் கொடுக்குமாறு கடந்த ஆண்டு செப்டம்பர் 08 ஆம் திகதி கௌரவ பிரதமர் குறிப்பிட்டிருந்ததற்கு அமைய நேற்று அந்த வாக்குறுதி நிறை வேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய கொழும்பு 02 கொம்பனித் தெருவில் அமைந்துள்ள மெட்ரோ ஹோம்ஸ் வீடமைப்பு திட்டத்தின் 40 ஏ 4/10 இலக்க வீடு தினேஷ் பிரியந்த ஹேரத் திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தற்போது இலங்கையில் பரா வீர வீராங்கனைகளின் திறமை உயர் மட்டத்தில் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள், எதிர்காலத்தில் தேசிய விளையாட்டு போட்டியில் பரா விளையாட்டுகளையும் சேர்க்கும் யோசனை குறித்து பிரதமருக்கு விளக்கமளித்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோன், விளையாட்டு மேம்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரி சூரிய, பராலிம்பிக் குழுவின் தலைவர் லெப்டினன் கேர்னல் தீபால் ஹேரத், பராலிம்பிக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் அம்பேமொஹொட்டி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் (காணி) அனுர பிரசன்ன, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் (வீடு) ரத்ன குமார மற்றும் தேசிய விளையாட்டு சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தில் 7 பேர் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டவர்கள் கைது

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்தி புரத்தில் பெண் ஒருவரின் உறவினர் மீது மேற்கொண்ட வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் வாள்வெட்டு குழுவை சேர்ந்த 7 பேரை வாள் கத்தியுடன் புதன்கிழமை (19) இரவு கைது செய்துள்ளதாக தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள சேர்ந்த பெண் ஒருவரை இளைஞர் ஒருவர் ஒரு பக்க காதலித்து வந்துள்ளதாகவும் அப்பெண்ணுக்கு விருப்பமில்லாத நிலையில் அவரை இளைஞன் பின் தொடர்ந்து தொந்தரவு கொடுத்து வந்துள்ளதாகவும். பெண்ணின் உறவினருக்கும் குறித்த இளைஞனுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறித்த பெண்ணை காதலித்து வரும் இளைஞர் அவரது குழுவினருடன் பெண்ணின் உறவினர் மீது மேற்கொண்ட வாள்வெட்டு தாக்குதல் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட 7 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் அங்கிருந்து தப்பி ஓடி தலைமறைவாகி இருந்த 7 பேர் நேற்று புதன்கிழமை இரவு பொலிசார் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து வாள் மற்றும் கத்திகளை மீட்டுள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை கடற்படையின் கப்பல் மோதியதில் இராமேஸ்வர மீனவர்களின் மீன்பிடி படகு மூழ்கியது – 7 மீனவர்கள் பாதுகாப்புடன் மீட்பு

நடுக்கடலில் தமிழக படகு மீது இலங்கை கடற்படை ரோந்து கப்பல் மோதி விபத்துக்கு உள்ளாகிய நிலையில் குறித்த படகில் உயிருக்கு போராடிய 7 ராமேஸ்வரம் மீனவர்களை சக மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், இராமேஸ்வரத்தில் இருந்து புதன்கிழமை (19) 500க்கும் மேற்பட்ட படகுகளில் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மீன்பிடித் தொழிலாளர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் புதன்கிழமை இரவு கச்சை தீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே மீன் பிடித்து விட்டு வியாழக்கிழமை (20) அதிகாலை 2 மணியளவில் கரை திரும்பும் போது கச்சை தீவு அருகே கடல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் இராமேஸ்வர மீனவர்களின் படகுகளை சுற்றி வளைத்தது மீனவர்களை கைது செய்யும் நோக்கில் அச்சுறுத்தியதாக தெரிவித்துள்ளனர்.

இதன் போது உயிருக்குப் பயந்து படகு பறிமுதல் செய்யப்படும் என்ற அச்சத்தால் மீனவர்கள் தப்பியோடிய நிலையில் மீனவர்களின் படகுகள் மீது ரோந்து கப்பல் கற்களை வீசி தாக்குதல் நடத்தியும் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த மீன்பிடி சாதனங்களை சேதப்படுத்தியும் விரட்டியடித்துள்ளனர்.

இதன் போது மீனவர் வஸ்தியான் என்பவர் படகு மீது கடற்படையின் கண்காணிப்பு கப்பல் மோதிய நிலையில் குறித்த படகு நடுக்கடலில் மூழ்கியது.

குறித்த படகில் இருந்த சுரேந்திரன், ஜெயபால், ஆகாஷ் டேனியல்,ராஜா, ஜெபஸ்தியான் உள்ளிட்ட ஏழு மீனவர்கள் உயிருக்கு போராடி வந்த நிலையில் சக மீனவர்கள் அவர்களை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

நடுக்கடலில் இலங்கை கடற்படை கப்பல் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் படகு ஒன்றுக்கு சுமார் 50 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரை சேதம் ஏற்பட்டுள்ளது. இலங்கை கடற்படையின் தொடர் தாக்குதல் குறித்தும், எதிர்வரும் 21ஆம் திகதி (நாளை) மீனவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை அறிவித்திருந்த நிலையில் இன்று தமிழக முதல்வர் உடனடியாக மீனவ அமைப்புக்களை சந்திக்க விரும்புவதாக கூறியதை அடுத்து மீனவர் சங்க பொறுப்பாளர்கள் சென்னைக்கு விஜயம் செய்துள்ளனர்.

- மன்னார் நிருபர்

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் தமிழ் பேசும் இளம் உதைபந்தாட்ட வீராங்கனைக்கு கிடைத்த அரிய கௌரவம்



12 ஆம் வகுப்பில் படிக்கும் மெலனி சுரேஷ்குமார், வாட்டர்லூ பல்கலைக்கழகத்தின் பெண்கள் உதைபந்தாட்ட அணிக்கு (2022/23) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வட அமெரிக்காவில் உள்ள எல்லா பல்கலை கழகங்களும் தங்களது பல்கலைக்கழக விளையாட்டு அணிக்கு திறமையான வீரர்களை வடிகட்டி எடுப்பது வழமை.

பல்கலைக்கழகங்களிலே கல்வி பயிலும் மாணவர்களில் இருந்து விளையாட்டு வீரர்களை தெரிவு செய்வது பொதுவான நடைமுறை. ஆனால் இங்குள்ள பல்கலை கழகங்கள் திறமையான சில உயர்வகுப்பு மாணவர்களை உயர்கல்வி படிக்கும்போதே தெரிவு செய்வது இங்குள்ள இன்னுமொரு சிறப்பு.

விளையாட்டில் மாகாண, தேசிய ரீதியான திறமையான உயர் வகுப்பு மாணவர்களை பல்கலைக்கழகம் செல்லுமுன்னர், உயர் வகுப்பிலேயே பல பல்கலைக்கழகங்கள் உள்வாங்கி விடும். அவர்களுக்கு புலமைப்பரிசில் கிடைக்கும் சந்தர்ப்பமும் உண்டு.

இந்த வகையில் கனடாவின் உயர் தராதரம் கொண்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றான வாட்டர்லூ பல்கலை கழகத்தின் பெண்கள் உதைபந்தாட்ட அணியில் இடம் பெறும் வீராங்கனையாக ஒரு தமிழிச்சி, மெலனி சுரேஸ்குமார் இடம் பிடித்துள்ளார்.






அவர் உதைபந்தாட்டத்தில் மென்மேலும் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

# மொன்றியால் "வெஸ்ட் ஐலண்ட் தமிழ்க் கலாச்சாரச் சங்கம்" நடத்திய "தைப்பூசமும் வேலின் பெருமையும்" என்னும் தலைப்பிலான இணையவழி கருத்தரங்கம்







கனடாவின் மொன்றியால் மாநகரில் கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் "வெஸ்ட் ஐலண்ட் தமிழ்க் கலாச்சாரச் சங்கம்" நடத்திய "தைப்பூசமும் வேலின் பெருமையும்" என்னும் தலைப்பிலான இணையவழி கருத்தரங்கம் கடந்த 16-01-2022 ஞாயிற்றுக்கிழமையன்று இணையவழி ஊடாக சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி இணையவழி கருத்தரங்கில் "இலக்கியத்தில் முருக வழிபாடு" என்னும் தலைப்பில் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களும் "வேலின் மகத்துவம்" என்னும் தலைப்பில் ஈழத்திலிருந்து சமயப் பேச்சாளர் பிரம்மஸ்ரீ பி. சிவானந்த சர்மா அவர்களும் ஈழத்திலிருந்து யோகக் கலை விரிவுரையாளர் ஸ்ரீ வியாச கல்யாணசுந்தரம் அவர்கள் "வரலாற்றில் முருகன்" என்னும் தலைப்பிலும் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார்கள்.


கருத்தரங்கை தொகுதது வழங்கும் பொறுப்பை திருமதி சுபாங்கி சிவா ஏற்று சிறப்பாகச் செய்திருந்தார். முதலில் பண்ணிசையோடு கருத்தரங்கம் ஆரம்பமாகியது. இணையவழி கருத்தரங்கின் தொடக்கத்தில் "வெஸ்ட் ஐலண்ட் தமிழ்க் கலாச்சாரச் சங்கம்" அமைப்பின் தலைவர் திரு. வாகீசன் நடராசா வரவேற்புரையாற்றினார்.

அங்கு உரையாற்றிய சமயப் பேச்சாளர் பிரம்மஸ்ரீ பி. சிவானந்த சர்மா அவர்கள் "வேலின் மகத்துவம்" என்ற தலைப்பில் உரையாற்றுகையில் பல அரிய கருத்துக்களை தகுந்த ஆதாரங்களுடன் எடுத்து விளக்கினார். உதாரணமாக வேலின் உருவ அமைப்பான தீபத்தைப் போன்று இருப்பது தொடர்பான விளக்கங்களை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினார். அத்துடன் முருகன் கையில் உள்ள "வேல்" தமிழில் உள்ள எழுத்துக்களோடு எவ்விதம் தொடர்புடையாக உள்ளது என்பதைக் கூறி வேலானது எந்தளவிற்கு எமது மொழியோடும் எமது வாழ்வியலோடும் தொடர்புடையதாக இருக்கின்றது என்பதை அற்புதமாக விளக்கினார்.

அவருடைய உரையின் ஊடாக பல அர்த்தமுள்ள கருத்துக்கள் வெளிப்பட்டன என கலந்து கொண்ட பல அன்பர்கள் தங்கள் கலந்துரையாடல்களின் போது பகிர்ந்து கொண்டனர். அங்கு உரையாற்றிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களும் யோகக் கலை விரிவுரையாளர் ஸ்ரீ வியாச கல்யாணசுந்தரம் அவர்களும் தங்கள் உரை நேரத்தின் போது தங்களுக்குத் தரப்பட்ட தலைப்புக்களில் சிறப்பாகவும் தகவல்களோடும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இறுதியில் அமைப்பின் தலைவர் திரு. வாகீசன் நடராசா நன்றியுரையையும் ஆற்றினார்.







MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா




கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

கனடிய செய்திகள்
Canadian News

# TAMIL HERITAGE MONTH CELEBRATIONS HOSTED BY MPP HON. RAYMOND CHO

# மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் றேமண்ட் சோ அவர்கள் நடத்திய தமிழர் மரபுரிமை மாத கொண்டாட்டம்



ஒன்றாரியோ மாகாண அரசின் மூத்த பிரஜைகளின் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும். ஸ்காபுறோ வடக்கு தொகுதியின் உறுப்பினருமான கௌரவ றேமண்ட் சோ அவர்களின் தொகுதி அலுவலகம் ஏற்பாடு செய்த "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்ட நிகழ்வு கடந்த பொங்கல் தினமான 14ம் திகதி வெள்ளிக்கிழமையன்று. இணையவழி ஊடாக இடம்பெற்றது.

கௌரவ றேமண்ட் சோ அவர்களின் தொகுதி அலுவலகத்தின் ஊழியர்களின் உதவியுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் அரிஸ் பாபிகியன், லோகன் கணபதி, மற்றும் விஜேய் தணிகாசலம் ஆகியோரும் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அவர்களில் லோகன் கணபதி அவர்களும் விஜேய் தணிகாசலம் அவர்களும் தமிழிலும் ஆங்கிலத்திலும் தங்கள் உரைகளை நிகழ்த்தினர்.


பல்வேறு கலை மற்றும் சமூக சேவையாற்றும் அமைப்புக்களும் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தன. அமைச்சரும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ றேமண்ட் சோ அவர்கள் தனது உரையில் தனது தொகுதியில் வாழும அனைத்து தமிழ் மக்களுக்கும் மற்றும் ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் ஏனைய தமிழ் மக்களுக்கும் தனது வாழ்ததுக்களைத் தெரிவித்த பின்னர் மிகவும் தொன்மையான பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கொண்ட தமிழ்மொழி பேசும் மக்களோடு இணைந்து பணியாற்றுவதில் தான் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் அவர்கள் பல்வேறு வகையான தேவைகளை அமைச்சர் என்ற வகையிலும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் வழங்குவதில் தான் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டதாகும்.



# ஒன்றாரியோவில் பாடசாலைகளை மீளத்திறப்பது தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழுவே தீர்மானித்தது என்கிறார் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே

ஒன்றாரியோவில் பாடசாலைகளை மீளத்திறப்பது தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழுவே தீர்மானித்தது என்கிறார் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே தற்போது ஒன்றாரியோவில் அமுல் செய்யப்பட்டுள்ள பாடசாலைகளை மீளத்திறப்பதும் வகுப்பறைகளில் மாணவர்கள் நேரடியாக கல்வி கற்பது தொடர்பாக எமது கல்வி அமைச்சு தனியாக முடிவுகளை எடுக்கவில்லை. சுகாதார அமைச்சு அதன் கீழ் வரும் மாகாண தலைமை சுகாதார அதிகாரி மற்றும் பல அறிஞர்கள் கொண்ட பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் அதிகாரிகள் கொண்ட குழுவே தீர்மானித்தது என்கிறார் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே.



நேற்று வியாழக்கிழமையன்று மதியம் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி ஊடகங்களின் ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்கள் ஆகியோரை இணையவழி ஊடாக சந்தித்து உரையாடியபோதே அமைச்சர் அவ்வாறு தெரிவித்தார். ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த தமிழ் ஊடக நிறுவனங்கள் உடனான பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது மார்க்கம் தொகுதி மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் கலந்து கொண்டு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

ஆங்கு ஆரம்ப உரையாற்றிய கல்வி அமைச்சர் அவர்கள் முதலில் தனது சகாக்களான மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்த பின்னர். ஒன்றாறியோ மாணவர்கள் பள்ளிக்குத் திரும்பும்போது இரண்டு விரைவான ஆன்டிஜென் சோதனைகளைப் பெறறுக்கொள்ளும் வகையில் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், ஆனால் அது தவிர, கோவிட்-19 தொற்றுநோய்களின் ஓமிக்ரான் தொற்று பரவலுக்கு மும்த்தியில் பாடசாலைகளை பாதுகாப்பாக வைத்திருக்க தமது அமைச்சு முன்னர் அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகளை தீவிரமாக அறிமுகம் செய்துள்ளது என்றும் உறுதியாகத் தெரிவித்தார்.

அமைச்சர் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், "ஒன்றாரியோ மாகாண சுகாதார தலைமை அதிகாரியின் அலுவலகத்தின் வழி நடத்தலும் எமது அமைச்சின் பாடசாலை மீள் திறப்பு நடவடிக்கைகளுக்கு நன்கு ஊக்கமளிக்கின்றன. அவர்களின் நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் எமக்கு நம்பிக்கைகளை ஊட்டி நின்றன. எமது முதல்வர் அவர்களும் போதிய நிதியை ஒதுக்கித் தந்துள்ளார். எனவே தற்போது ஒன்றாரியோ மாகாணப் பாடசாலைகளில் நடைபெறும் வகுப்பறை கற்றல் நடவடிக்கைகள் தகுந்த பலனைப் பெற்றுத் தரும் என்று நம்புகின்றேன்" என்றார்.

தொடர்ந்து தமிழ் ஊடகப் பிரதிநிதிகள் மற்றும் பிரதம ஆசிரியர்கள் ஆகியோரின் கேள்விகளுக்கும் உற்சாகமாக பதிலளித்தார் மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே அவர்கள் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ், மாகாணத்தில் "வலுவான பாதுகாப்புகள்" உள்ளன, அவை "முழுமையாக ஆதரிக்கப்படுகின்றன" என்று தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் கீரன் மூர் கூறினார்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் தற்போதைய நிலை பற்றி கனடாவிற்கு "பாடம் கற்பிக்க" முயலும் இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகள்

இலங்கையின் தற்போதைய நிலை பற்றி அண்மையில் கனடாவின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையானது தவறானது என்றும் அதில் உள்ள தகவல்கள் தவறான என்பதோடு மட்டுமல்லாது. காலாவதியான தகவல்களையும் உள்ளடக்கியுள்ளன என்றும் மற்றும் இலங்கையின் உண்மையான நிலைமையை பிரதிபலிக்காத வகையில் கனடாவின் 2022 ஜனவரி 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான கனேடிய பயண ஆலோசனை தொடர்பில் இலங்கை அரசும் அதன் வெளிநாட்டு அமைச்சும் கவனம் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும். கனடாவிற்கு "பாடம் கற்பிக்க" முயலும் வகையில் இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் தயாரித்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். கனடிய அரசின் அறிக்கையில் இலங்கை தொடர்பான தவறான விடங்கள் அடங்கியுள்ளன. இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு நிலைமை குறித்த தவறான குறிப்புக்கள், பெண் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டினரைத் துன்புறுத்துதல் தொடர்பான தவறான தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே, இலங்கைமயில் தற்பொழுது நிலவும் உண்மைகளை கனேடிய அதிகாரிகளுக்கு பின்வருமாறு தெரிவிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது: கொவிட்-19 தொற்றுநோயால் முன்வைக்கப்பட்ட சவால்களை இலங்கை வெற்றிகரமாக முறியடித்துள்ளதுடன், கோவிட்-19 தொடர்பான சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க, அனைத்து பொதுச் சேவை, நிறுவன, வணிக மற்றும் கல்விச் செயற்பாடுகள் இடையூறுகளின்றி சாதாரணமாக செயற்படும் வகையில் தற்போது இயல்பு நிலையில் உள்ளது. எமது நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம் உலக சுகாதார நிறுவனத்தால் பாராட்டப்பட்ட அதே வேளை, தகுதியான மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 90% ஆனோர் கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர்.

இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்ட மக்களுக்கு பூஸ்டர் டோஸ் வழங்குவதற்கான பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது. தொற்றுநோய் நிலைமையின் போதிலும், சி.என்.என். இன் "2022 இல் பயணம் செய்ய வேண்டிய இடம்", குளோபல் வெல்னஸ் இன்ஸ்டிட்யூட், கொண்டே நாஸ்ட் டிரவலர் 2021 வாசகர் விருப்பு விருதுகள் மற்றும் லோன்லி பிளேனட் மற்றும் நெஷனல் ஜியோகிராபிக் டிரவல் ஆகியவற்றால் இதற்கு முன்பு பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய அங்கீகாரங்கள் உட்பட சுற்றுலாத் துறையில் பல சர்வதேசப் பாராட்டுகளை இலங்கை பெற்றுள்ளது.

உலகளவில் பயணத்தை படிப்படியாக இயல்பாக்குவதன் மூலம் கனடா மற்றும் ஏனைய இடங்களில் இருந்து இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் விஜயம் செய்வதனை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இலங்கையின் பொருளாதாரம் கோவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், விவேகமான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இந்த ஆண்டு தனது பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் இலங்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவை அரசாங்கத்தின் முதன்மையான முன்னுரிமைகளாகும் அதே வேளை, அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் செயற்பாடுகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படுகின்றது. அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொதுமக்களுக்கு எல்லா நேரத்திலும் தொடர்ந்தும் கிடைப்பதையும், போதுமான அளவு உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருப்பதையும் உறுதி செய்வதற்கு அதிகமான முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. பாதுகாப்பு நிலைமையைப் பொறுத்தமட்டில், இலங்கை அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்காக குறைந்தபட்ச இராணுவப் பிரசன்னத்தைப் பேணி வருகின்றது.

இலங்கையில் தற்பொழுது பொலிஸ் அல்லது பாதுகாப்புப் படையினரால் தன்னிச்சையாகக் கைது செய்து, தடுத்து வைக்கப்படும் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறுவதில்லை. 2009 இல் பயங்கரவாத மோதல் முடிவுக்கு வந்ததிலிருந்து, பல வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆதரவுடன், வடக்கு மற்றும் கிழக்கில் விரிவான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.



இலங்கையில்டிசம்பர் 2014 நிலவரப்படி, கண்ணிவெடி அகற்றும் பணி 94% நிறைவடைந்திருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 98.7% ஆக உயர்வடைந்துள்ளது. "பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளது" என்றும், "மேலதிக தாக்குதல்கள் இடம்பெறுவதை நிராகரிக்க முடியாது" என்றும் அறிவுரை கூறப்பட்டுள்ளது. 2019 நவம்பரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதைத் தடுப்பதற்காக, நாடு முழுவதும் பொதுமக்கள் பாதுகாப்பையும், தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் மேம்பட்ட விழிப்புணர்வு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக, இக்காலப்பகுதியில் இலங்கையில் பயங்கரவாதம் தொடர்பான ஒரு சம்பவம் கூட நிகழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பல இனங்கள், பல மதங்கள் மற்றும் பல கலாச்சாரங்களைக் கொண்ட நாடான இலங்கை, பல்வேறு சமூகங்கள் பல நூற்றாண்டுகளாக சமாதானமாக இணைந்து வாழ்ந்து வரும் வளமான, பரந்த நோக்குள்ள பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. நாட்டில் உள்நாட்டுக் கலவரங்கள் எதுவும் இடம்பெறுவதில்லை.

வலுவான அமைப்புக்கள் மற்றும் துடிப்பான சிவில் சமூகத்துடன் கூடிய நீண்ட ஜனநாயகப் பாரம்பரியத்தை இலங்கை கொண்டுள்ளது. தாராளவாத ஜனநாயக நெறிமுறைகள் மற்றும் மரபுகள் நிலவும் ஏனைய எந்தவொரு நாட்டையும் போலவே இலங்கையிலும் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதன் மூலம் ஒன்றுகூடல் சுதந்திரம் பாதுகாக்கப்படுகின்றது. இதுபோன்ற அமைதியான போராட்டங்கள் தடையின்றி நடைபெறுவதற்கு பொலிஸார் அனுமதி அளித்ததுடன், தொடர்ந்தும் அனுமதி அளித்தும் வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் சுற்றுலாப் பயணிகளின் வசதி, நடமாட்டம், பாதுகாப்பு அல்லது செயற்பாடுகளுக்கு எந்த வகையிலும் தடையாக இருக்காது. நாடளாவிய ரீதியில் அனைத்து பிரதேசங்களிலும் சுற்றுலா சார்ந்த பொலிஸார் உட்பட பொலிஸாரின் பிரசன்னத்தைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் பெண் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ், பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம், நாட்டின் அனைத்து பிரபலமான சுற்றுலாத் தலங்களிலும் பொலிஸாரின் இருப்பு அதிகரிக்கப்படுகின்றது. இலங்கைக்கு விஜயம் செய்யும் பயணிகள் இலகுவாக அணுகிக் கொள்ளும் வகையில், சுற்றுலா சார்ந்த பொலிஸ் பிராந்தியப் பிரிவுகள், உள்ளூர் பொலிஸ் மற்றும் மருத்துவமனைகள் போன்ற ஏனைய அவசரகாலப் பிரிவுகளின் அவசரத் தொடர்பு இலக்கங்கள் இணையவழியில் காணப்படுகின்றன.

உயர்தரமான கல்வி, ஆங்கில அறிவு மற்றும் கல்வியறிவு கொண்ட நட்புறவான மக்களைக் கொண்ட ஒரு தீவு நாடான இலங்கையில், சுற்றுலாப் பயணிகள் அல்லது வெளிநாட்டவர்களுக்கு எதிரான துன்புறுத்தல் அல்லது வன்முறைச் சம்பவங்கள் மிகவும் அரிதானதாகக் காணப்படுகின்றன என இலங்கை தரப்பில் விளக்கம் கூறப்பட்டு, இது தொடர்பாக கனடிய அரசின் உடனடியாக நடவடிக்கைகளை தான் எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் இலங்கை அரசின் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.



# "கல்கி தாசன்" எனும் திருக்கோவிலூர் கனகசபாபதி கனடாவில் காலமானார்



எஸ்.பி கனக்ஸ் என்றும் "காப்புறுதி" கனக்ஸ் என்றும் மொன்றியல் வாழ் தமிழர் சமூகத்தில் நன்கு அறியப்பட்டவரும், - கிழக்கிலங்கை திருக்கோவிலூர் பதியில் உதித்தவரும், சுவாமி விபுலானந்தர் ஆவர்களின் புகழ் பரப்பியவரும். தமிழ் இலக்கியச் சிந்தனையாளரும், "கல்கிதாஸன்" எனும் புனைப்பெயரில் கவிதை எழுதி களிப்பூட்டியவரும் அருமை சினேகிதருமான கனகசபாபதி அவர்கள் கனடா மொன்றியால் நகரில் அமரத்துவம் எய்திவிட்டார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் சில நிமிடங்கள் நிலைகுலைந்து போனேன்.

"காலா வாடா" சற்று உன்னை காலால் உதைப் பேனடா" என பாரதியை வழிமொழிந்து தைரியம் தந்த " கனக்ஸ்" காலமாகி விட்டார் என்ற தகவல் நிஜம் என்றதும், நாங்கள் இருவரும் இணைந்து பயணப்படுவதற்கு இன்னும் சில ஆண்டுகள் திட்டங்கள் தீட்டியிருந்தோம்? இன்னும் கொஞ்சக் காலம் அவர் வாழ்ந்திருக்கலாமே? என்ன கொடுமையிது!

"புணர்ச்சி பழகுதல் வேண்டர் உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

வள்ளுவப் பெருந்தகை எழுதிவைத்த இக்குறள் வழி நட்பு தான் எங்களிருவருக்கும்.

"நட்பு பொருந்துவது அடிக்கடி சந்தித்துப் பழகுவதைப் பொறுத்தன்று. ஒத்த உணர்ச்சி இருந்தால் அதுவே நட்பின் உரிமைகளை உண்டாக்கும்."

பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரியான நண்பர் புலமைப்பரிசில் பெற்று சிறிது காலம் அப்போதைய மேற்கு ஜெர்மனி - மியூனிச் நகரத்தில் தொழிற் கல்வியை முடித்து பின்னர் கனடாவுக்கு குடிபெயர்ந்தார். 1980 களின் ஆரம்பத்தில் மொன்றியல் நகரில் வாழத் தொடங்கிய 10 பேரில் நண்பர் கனக்ஸ்-ம் ஒருவராவார். எனவே மொன்றியால் தமிழர்கள் மூத்த குடிமகனும் அவர் எனலாம்.

1992இல் இவருடனான அறிமுகமும் - நட்பும் ஆரம்பித்தது.

அன்பு அறிவிப்பாளர் பி. எச்.அப்துல் ஹமீது அவர்களின் கலைச்சேவையை பாராட்டி எடுக்கப்பட்ட சிறப்பு வைபவத்தில் இருவரும் கை கோர்த்து கொண்டோம்.

எங்களது "கனடா தமிழ் கலாச்சார சங்கம்" எனக்கடுத்து இவரைத் தலைமை தாங்க அழைத்தது. என்னால் அறிமுகப்படுத்தப்பட்ட "கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்" ஆரோக்கியமாக வளர்வதற்கும் பக்கபலமாகத் தோள்தந்தார்.



மொன்றியல் நகரில் நடந்தேறிய உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டில் சிறப்புரை வழங்குவதற்காக சினிமா இயக்குனர் பாரதிராஜாவையும் - பேராசிரியர் கா. சிவத்தம்பி ஐயாவையும் அழைத்து வருவதில் - பெரிதும் பங்கெடுத்து வெற்றிகரமாக உழைத்த செயல்வீரர். இவ்வாறு பல சம்பவங்களை நினைத்துப்பார்க்கிறேன். 2021 நவம்பரில் மொன்றியல் நகரில் நடந்தேறிய "உதயன் வெள்ளி விழா" சிறப்புற நடைபெறுவதற்கும் நல்லாதரவு வழங்கினார்.

ஒரே அலைவரிசையில் சிந்தித்துச் செயலாற்றக் கூடிய நல்ல தோழரை இழந்தது மட்டுமல்ல - நீண்ட காலம் சன் லைவ் காப்புறுதி முகவராகப் பணிபுரிந்து மொன்றியால் வாழ் தமிழ் மக்களின் நன்மதிப்பையும் பெற்றவராவார்.

தமிழர்கள் உள்ளிட்ட கனடிய சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்றே சொல்வேன். நாட்டார் பாடல்களை கூத்துக் கலை வடிவத்தில் புலம்பெயர்ந்த நாடுகளில் மேடையேற்றி அடுத்த தலைமுறைக்கு அறியத் தரவேண்டும் எனும் கலை முயற்சியில் ஈடுபாடுடையவர். கலாநிதி க.தா. செல்வராஜ் கோபால் (ஈழத்துப் பூராடனார்) பிரதம ஆசிரியராகவும், எஸ் பி கனகசபாபதி (B.A) இணை ஆசிரியராகவும் இணைந்து எழுதி வெளியிட்ட "மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச் சுவடுகள்" நூல் வெளியீட்டின் போது என்னை அழைத்து நூல் விமர்சனம் செய்ய வைத்தார்.

நல்ல தமிழ்க் குடிமகனாக வாழ்ந்தவரின் நட்பை இழந்து உடுக்கை இழந்தவனாகிவிட்டேன். 2003-இல் சுவாமி விபுலானந்தர் நினைவு விழா சிறப்பு மலரை தன் கைப்பட "அன்பு நண்பர் திரு. சண்முகராஜா அவர்கட்கு முத்தமிழ் வித்தகர் நினைவுடன் என் இனிய அன்பளிப்பு. எஸ்.பி கனக்ஸ் எழுதிய வரிகளைப் பார்க்கும் போது விழித்திரையை நீர்த்திவலைகள் மறைகின்றன.

சிரித்த முகமும் சீரிய பண்பாடும்
சிந்தும் தமிழ் மொழியும் நிறைந்த விருந்தோம்பலும்
என்றென்றும் என் நினைவில்...!

**- வீணை மைந்தன்**




JRS College of Business and Health Care Inc.

**Start your Second Career with Us**
**Financial Aid available!**

JRS College of Business and Health Care Inc.
4168 Finch Avenue East, Suite330,
Midland & Finch,
Toronto, Ontario M1S 5H6
**(416)-292-2455**

**Are you ready to upgrade your skills and get a high paying job?**

-Personal Support Worker
Starting Jan 31 2022

-Early Childhood Assistant
Starting Feb 14 2022

-Accounting & Payroll Administration
Starting Feb 7 2022

-Health Office Administrator
Starting March 2022

**GET UP TO $28,000 GRANT FROM THE GOVERNMENT**

**SHORT DURATION COURSES**

**FREE CONSULTATION WITH OUR EMPLOYMENT COACH**

Student Accounts:

**Mathu**

"I chose Early Childcare Assistant which is 36 weeks at JRS college and received $34,000 from government"

Limited Seats | Free Consultation

**Thiny**

"I chose 40 weeks of Health Office Administrator diploma at JRS. Due to its long duration, i got a grant of $44,000 through Second Career for my studies, day care, & living allowance"

**(416)-292-2455**

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# உங்கள் கடமைகளையும் பொறுப்புணர்வையும் மறந்து விடாதீர்கள்!

## சனாதிபதி கோட்டாபயவுக்கு பகிரங்கக் கடிதம்

சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களுக்கு,

சனாதிபதியாக உங்கள் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நேர்மையான முறையில் மற்றும் நாட்டின் அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின்படி நிறைவேற்றுவதற்கு நீங்கள் பதவிப் பிரமாணத்தில் உறுதியளித்தீர்கள்.

நீங்கள் பாதுகாப்பதற்கும் பின்பற்றுவதற்கும் ஒப்பவுக்கொண்ட அரசியலமைப்பில், "இலங்கைக் குடியரசில் இறைமை மக்களிடம் உள்ளது. அது பிரிக்க முடியாதது. மேலும் மக்களின் நிறைவேற்று அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவரால் செயல்படுத்தப்படும்" என்றீர்கள். இதன் மூலம் இலங்கையின் அனைத்து மக்களின் நலன்களையும் பாதுகாப்பதும் காத்தலும் உங்களது தவிர்க்க முடியாத கடமையாகும்.

'மக்களை மையப்படுத்தும் பொருளாதாரத்தைப்' பின்பற்றி, 'செயல்திறமிக்க குடிமகன் மற்றும் மகிழ்ச்சியான குடும்பத்தை' உறுதிசெய்வதன் மூலம், 'எதிர்காலத்துடன் கூடிய மறுசீரமைக்கப்பட்ட நாட்டை' வழங்குவதற்காக, மக்களுடன் ஒரு சமூக உடன்பாட்டை உருவாக்கினீர்கள்.

நாட்டுமக்களுக்கு நீங்கள் ஆற்றிய முதல் உரையில், பவுத்த தத்துவம் உங்கள் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கூறியிருந்தீர்கள். நீங்கள் அதைப் பாதுகாத்து வளர்ப்பீர்கள். பவுத்த கோட்பாட்டில் உள்ள "தர்மம்" என்பது எல்லா நேரங்களிலும் அனைவருக்கும் பொதுவான உலகளாவிய உண்மை. அது 'காரணம் மற்றும் விளைவு' (**'cause and effect'**) என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். ஞானம், இரக்கம், பொறுமை, தாராள மனப்பான்மை மற்றும் கருணை ஆகியவை முக்கியமான நற்பண்புகளாகவும், பின்வருவனவற்றால் நிர்வாகம் வழி நடத்தப்படும் எனக் கூறினீர்கள்:

மஹாபரிநிப்பான சூத்திரம் –

'நான் உனக்குக் கற்றுக் கொடுத்த தர்மமும் ஒழுக்கமும் உனக்கு நல்ல ஆசானாக இருக்கட்டும்'

மஹா மங்கள சூத்திரம்

'புத்திசாலி, நன்கு தேர்ச்சி பெற்ற நிபுணர்களுடன் தொடர்புகொள்வது மற்றும் வழிகாட்டுதல்'

சுல்லா ஹட்டி படோபமா சூத்திரம்

(அரஹத் மகிந்தவின் முதல் சொற்பொழிவு) - 'சிக்கலுக்கான காரணத்தைத் தேடி அதைத் தீர்க்கவும், அதன் அறிகுறி அல்லது உணர்வுகளால் வழிநடத்தப் படக்கூடாது'

தேவநம்பியதீசன் மன்னனுக்கு அரஹத் மகிந்தவின் செய்தி - "நிலம் மக்களுக்கும் அனைத்து உயிரினங்களுக்கும் சொந்தமானது நீ தான் அதன் பாதுகாவலன்."

ஆனந்தா, உங்களில் பொதிந்துள்ள விழுமியங்களுக்கு நீங்களும் உறுதி பூண்டிருக்கிறீர்கள் மற்றும் "தாமதமின்றி" என்ற பள்ளி முழக்கத்தைப் பின்பற்றவும் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் சரியானதாகவும் சரியான நேரத்தில் இருப்பதையும் உறுதி செய்யும்.

முதலில் ஒரு அதிகாரி கேட்டதாகவும் பின்னர் இலங்கை இராணுவத்தின் உயர் கட்டளை அதிகாரியாகவும், கஜபா படைப்பிரிவு, நீங்கள் முக்கிய மதிப்புகளுக்கு ஏற்ப வாழ்கிறீர்கள்.

தாய்நாட்டிற்கு அர்ப்பணிப்பு - விசுவாசம், கடமை, மரியாதை, தன்னலமற்ற சேவை, நன்மதிப்பு, நேர்மை மற்றும் தனிப்பட்ட துணிச்சல்.

ஒற்றுமையே பலம் - ஒரு நிபுணராக நீங்கள் முக்கிய மதிப்புகளுக்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

நேர்மை - 'சரியானதை அறிந்து செய்'

மரியாதை - 'நீங்கள் எப்படி நடத்தப்பட வேண்டுமோ அவ்வாறே பிறரை நடத்துதல்'

பொறுப்பு - 'பங்களிப்பதற்கான வாய்ப்புகளைத் தழுவுங்கள்'

விளையாட்டுத்திறன் - 'அனைத்துப் போட்டிகளுக்கும் உங்கள் சிறந்ததைக் கொண்டு வாருங்கள்'

வேலைக்காரத் தலைமை - 'பொது நலனுக்காக பணி செய்'

இலங்கையின் குடிமக்களாகிய நீங்கள் மேற்குறிப்பிட்ட உறுதிமொழிகளின்படி வாழ்வீர்கள் என்றும், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளரின் தவறான வழிகாட்டல் மற்றும் பொறுப்பற்ற தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்க மாட்டீர்கள் என்றும் நம்புகிறோம். குடிமக்கள், விவசாயிகள், மீனவர்கள், சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள், தொழில்கள் மற்றும் வணிகங்களின் முன்னுரிமை, அத்தியாவசிய மற்றும் அவசரத் தேவைகளைப் புறக்கணித்து, 2022 சனவரி 18 ஆம் தேதி 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை அனைத்துலக இறையாண்மை முறியாளர்களுக்குச் செலுத்த வேண்டாம். உணவு, மருந்து, உரம், எரிபொருள், எரிவாயு, மூலப்பொருட்கள், இயந்திரங்கள், போட்டித்தன்மையை உறுதிப்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் மதிப்பு கூட்டு வணிக நிறுவனங்களுக்கான அத்தியாவசிய சேவைகளை இறக்குமதி செய்யுங்கள்.

தற்போதைய முன்மொழிவைச் செயல்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை நீங்கள் முறையாக அடையாளம் காண்பீர்கள் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

சமூக அரசியல் உறுதியற்றதன்மையின் அபாயங்கள்

துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசிய இறக்குமதிகளை அகற்றுவதற்காக குறைந்த அளவிலான அந்நியச் செலாவணி வளங்களை மட்டுமே அரசு அவர்களுக்கு வழங்கியுள்ளது என்பதை பொதுமக்கள் உணரும்போது அவர்கள் கோபத்தில் பதில் நடவடிக்கைகளில் இறங்கக் கூடும். இறக்குமதிப் பொருட்கள் அகற்றப்படாததால் சந்தையில் மாவு, அரிசி, பால்மா, சர்க்கரை, மருந்துகள், எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

குறிப்பாக அதன் தொடர்ச்சியாக மின்வெட்டுகள் விதிக்கப்பட்டு, எரிவாயு தட்டுப்பாடு தொடர்ந்தால், கிடைக்கும் வளங்களில் பெரும்பகுதியை அறியப்படாத வெளிநாட்டு ஊக முதலீட்டாளர்களுக்காக ஒதுக்கியிருந்தால், குறுகிய கால பணப்புழக்கங்களுடன் நீண்ட கால கடன் பொறுப்புகளை தீர்க்கும் முட்டாள்தனம், குறிப்பாக குறுகிய கால அதிக விலையுள்ள ஸ்வாப்ஸ் மற்றும் பின்னர் கட்டாயப்படுத்தப்படும் தற்போதைய பரிமாற்ற வணிகம் **(SWAP)** கடமைகளை மாற்றுவதற்கு குறுகிய காலத்தில் மேலும் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

அனைத்துலக இறையாண்மை முறிகளின் முதிர்வுத் தொகையானது, இந்த ஆண்டு செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தீர்வில் 10**%** மட்டுமே. கடன் மறுசீரமைப்பை நாடாமல், முழு முதிர்வு நிலுவைத் தொகையை தீர்க்கும் எந்த உறுதிமொழிகளும் எதிர்கால பேச்சுவார்த்தைகளை மிகவும் சவாலானதாக மாற்றும். சுற்றுலா தொடர்பான துறை நடவடிக்கைகளில் இருந்து முன்கூட்டியே மாற்றியமைக்கப்படும் பணப்புழக்கங்கள் சாத்தியமில்லை. எப்படிப் பார்த்தாலும் அத்தகைய நிகர பாய்ச்சல்கள் மதிப்பிடப்பட்ட 4 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் பொருந்தாது.

சந்தை நிர்ணயிக்கப்பட்ட உண்மையான மாற்று விகிதங்கள் இல்லாமல், குறுகிய கால ஊக்க ஊதியங்கள் அடிப்படையிலான 'கரட் மற்றும் குச்சி' அணுகுமுறை அடிப்படையிலான மாற்று விகித மேலாண்மை உகந்த ஏற்றுமதி வருமானம், தொழிலாளர் பணம் மற்றும் அயல்நாட்டு நேரடி முதலீடு **(FDI)** ஆகியவற்றைக் கொண்டு வரும்.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒரு இயல்புநிலை தவிர்க்க முடியாதது என்று மதிப்பீட்டு முகவர்கள் கருதினால், முன்மொழியப்பட்ட நடவடிக்கையானது இறையாண்மை மதிப்பீடுகளை மேலும் தரமிறக்கச் செய்யலாம்.

விலையுயர்ந்த தேசிய சொத்துக்களின் விற்பனை வருமானம் மற்றும் நீண்ட கால சலுகைகள் ஆகியவற்றைப் போட்டி வெளிப்படையான ஏலமின்றி அவசரமாகப் பயன்படுத்துதல் மற்றும் சிறந்த நடைமுறை மதிப்பீட்டு முறைகள் பின்பற்றப்படுவது நீண்ட காலத்திற்கு பொருளாதாரத்தை சிதைத்துவிடும்.

அந்நியச் செலாவணி வரவுகளை வலுக்கட்டாயமாக மாற்றுவதன் மூலமும், அனைத்துலக இறைமை முறிகள் **(ISB)** மற்றும் சிறிலங்கா கடன் முறிகள் **(SLDB)** மாற்றுவதன் மூலமும் உள்ளூர் வங்கி மற்றும் நிதிச் சேவைகளின் சர்வதேச வங்கி நிருபர்களால் உறுதித்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளப்படும் அபாயத்தை ஏற்படுத்தும்.

குடிமக்கள், தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு நாணயம் வைத்திருப்பவர்களின் சாத்தியமான எதிர்விளைவுகளை அடையாளப்படுத்தல்.

நிர்ப்பந்தத்தின் கீழ் மறுசீரமைக்க வேண்டிய கட்டாயத் திருப்பிச் செலுத்தப்பட்ட கடனின் தேதியை வேறுபடுத்துவதன் தாக்கங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். அதிக பணவீக்கம் காரணமாக இடைக்காலத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். பணம் அச்சிடுதலின் விளைவாக, அதிக பணம் குறைவான பொருட்கள் மற்றும் சேவைகளை துரத்தும்.

***- சந்திர ஜெயரத்தின***

(11-01-2022 இல் வெளிவந்த *த ஐலண்ட்* ஆங்கில நாளேட்டில் வெளிவந்த ஆக்கத்தின் தமிழ் மொழிப்பெயர்ப்பு.
மொழிப்பெயர்ப்பு: **கனடா நக்கீரன்**
மூலக் கடிதத்தை **https://island.lk/lest-you-forget-your-commitments-and-accountability/** இணையதள முகவரியில் படிக்கலாம்.)


**இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால் பதிக்கும் கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'**

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, ஏப்ரல் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022 மார்ச் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன.

படைப்புக்களை தபால் மூலமாகவோ
அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை (416) 732-1608 என்னும்
WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்பெறும்

தபால் முகவரி: Managing Editor
Uthayan Publishers
4062 Ellesmere Road
Scarborough, Ontario
CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி: uthayannews@yahoo.com



# தை பிறந்துவிட்டது வழி பிறக்கவில்லை?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

நாட்டில் செயற்கை உர இறக்குமதி நிறுத்தப்பட்டதால் பூக்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் திருமணம், பிறந்தநாள் போன்ற சுபகாரியங்களில் வழங்குவதற்கு பூச்செண்டுகளுக்கு தட்டுப்பாடு. மரண வீடுகளில் வைப்பதற்கு மலர் வளையங்களுக்கும் தட்டுப்பாடு. அதே சமயம் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இயங்குவது நிறுத்தப்பட்டதால் மெழுகுதிரிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கிறார்கள். சபுகஸ்கண்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் உப உற்பத்திகளில் ஒன்றாகவே மெழுகுதிரி வார்க்கப்படுவதாகவும் இப்பொழுது அதற்கும் தட்டுப்பாடு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர் நிலைகளில் நீர் குறைவடைந்துள்ளமை ஆகிய காரணங்களினால் 4 மணி நேர மின் வெட்டை எதிர்பார்ப்பதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் எதிர்வு கூறுகின்றது. எனவே மின் வெட்டு நேரத்தில் பயன்படுத்துவதற்கு மெழுகுதிரிகளுக்கும் கட்டுப்பாடு வந்திருக்கிறது. இப்படியாக பூச்செண்டுகளுக்கும் மலர்வளைங்களுக்கும் மெழுகுதிரிகளுக்கும் தட்டுப்பாடான ஓர் அரசியல் பொருளாதாரச் சூழலில் தை பிறந்திருக்கிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். ஆனால் தை பிறந்த பொழுது நாட்டில் பெரும்பாலான வழிகள் மூடப்பட்டிருப்பதாகவே தெரிகிறது. தை பிறந்த கையோடு இந்தியா ஒரு தொகுதி பணத்தை கடனாக வழங்கியிருக்கிறது. அது அரசாங்கத்துக்கு மூச்சு விடும் அவகாசத்தை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா மேலும் கடன் உதவிகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் தமிழ் கட்சிகள் கூட்டாக ஒரு ஆவணத்தை தயாரித்து அதனை இந்திய தூதரகத்திடம் கையளிக்கவிருந்தன. ஆனால் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அவசர அவசரமாக டெல்லிக்கு போக வேண்டி இருந்தபடியால் ஆவணம் கையளிக்கப்படவில்லை. அது பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

தமிழ் கட்சிகளின் கடிதத்தை பெற்றுக்கொள்ளாமல் இலங்கைக்கான இந்திய தூதுவர் ஏன் டெல்லிக்கு பறந்தார் என்று பல்வேறு விதமான ஊகங்கள் எழும்பின. டெல்லிக்கு போன தூதுவர் திரும்பி வந்த கையோடு ஒரு தொகுதி நிதி உதவிக்குரிய ஆவணத்தை தானே நேரடியாக சென்று மத்திய வங்கியின் ஆளுநரிடம் கையளித்திருப்பதாக ஒரு தகவல் கிடைக்கிறது. அப்படி என்றால் அந்த நிதி உதவியை அவசரமாக பெற்றுக்கொடுப்பதற்காகத்தான் அவர் புதுடில்லிக்கு பறந்தாரா? என்ற ஒரு ஊகமும் உண்டு. ஏனெனில் நாடு அதன் படு கடனில் ஒரு பகுதியை அடைப்பதற்கு கடந்த 18ஆம் திகதி வரையிலும் ஒரு காலக்கெடு இருந்தது. அக்காலக்கெடுவுக்குள் இலங்கை அரசாங்கத்திற்கு சீனா அல்லாத வேறு எந்த நாடாவது உதவி வழங்க தவறினால் அரசாங்கம் சீனாவை சரணடைவதே தவிர வேறு வழி கிடையாது என்றிருந்த ஒரு நிலையில் அவ்வாறு அரசாங்கம் சீனாவிடம் உதவி கெட்டுப் போவதை தடுக்கும் நோக்கத்தோடு இந்திய தூதுவர் அவசர அவசரமாக டெல்லி சென்று ஒரு தொகுதி கடனை கொழும்புக்கு வழங்கியதாகவும் ஊகிக்கப்படுகிறது.

அதேசமயம் தமிழ் கட்சிகள் கூட்டாக தயாரித்த ஆவணத்தை பெற்றுக்கொள்வதில் காட்டிய அக்கறையை விடவும் கொழும்பின் கடனை அடைப்பதில்தான் புதுடில்லி அதிகம் கவனம் செலுத்தியது என்றும் ஒரு விமர்சனம் உண்டு. தமிழ் கட்சிகளின் கடிதத்தை கொடுப்பதற்கு கால வரையறை இல்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் அடைக்க வேண்டிய கடன்களுக்கு ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு காலக்கெடு இருந்தது. இரண்டையும் ஒப்பிட்டு வியாக்கியானம் செய்ய முடியாது.

இந்தியாவுக்கு ஆவணத்தைத் தயாரித்த கட்சிகளை விமர்சிக்கும் தரப்புகள் இந்த விடயத்தை வேறுவிதமாக வியாக்கியானம் செய்கின்றன. தமிழ் கட்சிகள் தயாரித்த ஆவணத்தை வைத்து இந்தியா இலங்கையுடனான தனது பேரத்தை அதிகப்படுத்தி விட்டது என்றும், அண்மையில் திருகோணமலையில் உள்ள எண்ணை குதங்களில் ஒரு பகுதி தொடர்பான உடன்படிக்கைக்கு அதுவும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது. அதாவது தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி செல்வதை இந்தியா தனக்கு சாதகமாக கையாண்டு தன்னுடைய காரியங்களை முடித்துக் கொள்கிறது என்பதே அந்த குற்றச்சாட்டாகும்.

ஏற்கனவே இந்திய இலங்கை உடன்படிக்கை அவ்வாறுதான் செய்யப்பட்டது. அமெரிக்க சார்பு ஜெயவர்த்தனவை வழிக்குக் கொண்டுவருவதற்காக சோவியத் சார்பு இந்தியா தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சியையும் ஆயுதங்களையும் பின்தள வசதிகளையும் வழங்கியது. அதன்மூலம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி கொழும்பை வழிக்கு கொண்டு வந்து இலங்கைதீவில் இந்தியா என்றென்றும் தனது மேலாதிக்கத்தை சட்டப்படி நிலைநிறுத்த தேவையான ஒரு ஆவணத்தை -அதுதான் இந்திய-இலங்கை உடன்படிக்கையை- எழுதிக் கொண்டு விட்டது. எனவே இந்தியா எப்பொழுதும் கொழும்பைப் பணிய வைப்பதற்கான அழுத்த பிரயோக சக்தியாகத்தான், கருவியாகத்தான் தமிழ் மக்களை கையாண்டு வருகிறது என்றும் அவர்கள் விமர்சிக்கிறார்கள்.

இந்த இடத்தில் இந்தியாவுக்கு ஒரு பொது ஆவணத்தை வழங்கிய கட்சிகள் தமது செயற்பாடுகளின் மூலம் நிரூபிக்க வேண்டிய ஒரு அம்சம் இருக்கிறது. அது என்னவெனில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இக்கட்சிகள் மீது சுமத்தும் குற்றச்சாட்டில் உண்மைகள் இல்லை என்பதனை செயல் மூலம் நிரூபிப்பதுதான். தமிழ் தேசிய மக்கள் முன்னணி மேற்படி ஆவணத்தை தயாரித்த கட்சிகளை இந்தியாவின் கைக்கூலிகள் என்றும் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின்படி அவர்கள் இயங்குவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது. இந்நிலையில் இந்தியா சொல்லித்தான் அப்படி ஓர் ஆவணத்தை தாங்கள் தயாரிக்கவில்லை என்பதனை நிரூபிக்க வேண்டிய ஒரு கட்டாயம் மேற்படி கட்சிகளுக்கு உண்டு. அதோடு தாங்கள் தயாரித்த ஆவணம் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒற்றையாட்சிக்குள் பெட்டி கட்டி விடவில்லை என்பதையும் நிரூபிப்பதற்காக உழைக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் மேற்படி கட்சிகளுக்கு உண்டு.

கிடைக்கும் தகவல்களின்படி மேற்படி கட்சிகள் மேலும் சில ஆவணங்களை தயாரிக்க இருப்பதாக தெரிகிறது. அதன்படி பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்றவேண்டும் என்று கேட்டு ஒரு கூட்டுக் கோரிக்கையை அவர்கள் வரைந்து வருவதாக தெரிகிறது. குறிப்பாக அடுத்த ஜெனிவா கூட்டத்தொடருக்கு சில மாதங்களே இருக்கும் ஒரு காலப் பின்னணியில் அப்படி ஒரு கோரிக்கையை முன்வைப்பது அவசியம் என்றும் மேற்படி கட்சிகள் கருதுகின்றன. தவிர ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு வழங்குவதாக இருந்தால் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்த வேண்டும் அல்லது அகற்ற வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தது. இது தொடர்பான இறுதி முடிவை பெரும்பாலும் வரும் ஏப்ரல் மாதமளவில் ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கலாம் என்று தெரிகிறது. எனவே பயங்கரவாத தடை சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை எல்லா கட்சிகளும் ஒன்றாகக் கூடி முன்வைப்பதன் மூலம் அரசாங்கத்தின் மீது அதிகரித்த அழுத்தங்களை கொடுக்கலாம் என்று அவை நம்புகின்றன.

அது சரிதான். அப்படி ஒரு கூட்டுக் கோரிக்கை கட்டாயமாக முன்வைக்கப்பட வேண்டும். அதேசமயம், இந்தியாவை நோக்கி முன்வைக்கப்பட்டிருக்கும் அந்தக் கூட்டுக் கோரிக்கை வெறும் கடிதமாக முடியக்கூடாது. அது அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு செயல்பூர்வ வடிவத்தை எடுக்க வேண்டும். கடிதம் எழுதியதோடு மேற்படி கட்சிகளின் பணி முடிந்துவிடவில்லை. கடிதம் எழுதுவது மட்டுமே அரசியல் செயல்பாடாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. கடிதம் எழுதிய கட்சிகளுக்கு அந்த கடிதங்களை நோக்கி உழைக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு இருக்கிறது.


உதாரணமாக, கடந்த மார்ச் மாதம் ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு மூன்று கட்சிகள் ஒன்றாக இணைந்து ஓர் அற்புதமான ஆவணத்தை தயாரித்து ஜெனிவாவுக்கு அனுப்பின. அதன் விளைவாக மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கை ஒப்பீட்டளவில் கடுமையானதாகக் காணப்பட்டது. ஆனால் ஐநா தீர்மானம் வழமை போல இலங்கை அரசாங்கத்துக்கு "என்கேஜ்" பண்ணத் தேவையான இடைவெளிகளை வழங்கியது. கடிதத்தை எழுதிய கட்சிகள் பின்னர் தங்களுக்கிடையே முட்டி மோதிக் கொண்டன.

குறிப்பாக அக்கடிதத்தில் பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே அதாவது, மனித உரிமைகள் ஆணையத்துக்கு வெளியே கொண்டு போக வேண்டும் ஐநா பொதுச்சபை, பாதுகாப்புச் சபை போன்ற ஐநாவின் ஏனைய மன்றங்களை நோக்கி கொண்டு போகவேண்டும் அனைத்துலக நீதிமன்றம் போன்ற கட்டமைப்புக்களை நோக்கி கொண்டு போகவேண்டும் என்ற கோரிக்கையை அதிகம் வலியுறுத்தியது தமிழ் தேசிய மக்கள் முன்னணிதான். ஏனைய கட்சிகளும் அதை ஏற்றுக்கொண்டு அக்கடிதத்தை தயாரித்தன. கடிதம் அனுப்பப்பட்டது கடந்த ஜனவரி 21ஆம் திகதி. இப்பொழுது அடுத்த ஜனவரி வந்துவிட்டது. மறுபடியும் ஒரு மார்ச் கூட்டத்தொடர் வருகிறது. இந்த ஓராண்டு காலகட்டத்துக்குள் மேற்படி கடிதத்தில் தாம் முன்வைத்த கோரிக்கையை செயல்படுத்தும் நோக்கத்தோடு மேற்படி கட்சிகள் குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்னென்ன செய்திருக்கிறது என்பதனை பட்டியலிட்டு காட்ட வேண்டும். அதே போல இந்தியாவுக்கு கடிதம் எழுதிய கட்சிகளும் அதன் அடுத்த கட்டமாக இந்தியாவை எப்படி தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைக்கலாம் என்று திட்டமிட்டு உழைக்க வேண்டும். ஏனெனில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக ஆனந்தசங்கரி கடிதங்களை எழுதியது போலல்ல இது.

### வீணாவின் கவிக்கணை

வேதனைகள் கூடலாம்,
துன்பங்கள் நேரலாம்,
வன்மமும் கூடலாம்,
விரோதங்களும் நேரலாம்,
அதற்காக திசை மாறிப்போவதில்
அர்த்தம் தான் என்ன?
ஆக்கப்பொறுத்தவனுக்கு
ஆறவும் பொறுக்க வேண்டும்,
என்ற உண்மை உணர்கையில்
நீயே சிறந்து விளங்குவாய்
இத்தரணியில் பெருமிதத்துடன்!

# இந்தியாவுக்கு துரோகம் செய்த இலங்கைக்கு ரூ.18,090 கோடி கடன் வழங்கும் இந்திய அரசு விதிக்க வேண்டிய நிபந்தனைகள்: ராமதாஸ் பட்டியல்



"பல்வேறு தருணங்களில் இந்தியாவுக்கு துரோகம் செய்த இலங்கை அரசு, இம்முறையாவது இந்திய அரசின் கடனுதவி வசதியைப் பெற்றுக் கொண்டு ஆதரவாக இருக்குமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை" என்று என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில், "வரலாறு காணாத கடன் மற்றும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு உணவு மற்றும் எரிபொருள் வாங்குவதற்காக ரூ.18,090 கோடி கடன் வசதியை இந்திய அரசு வழங்கியிருக்கிறது. மத்திய அரசின் இம்முடிவு ராஜதந்திர நடவடிக்கை என்றாலும் கூட, இலங்கை அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதற்கான சிறந்த வாய்ப்பாக இதை இந்திய அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சீனா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து வாங்கிய கடனை செலுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கை அரசு, இப்போது கிட்டத்தட்ட திவால் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட பணம் இல்லாமல் தவிக்கும் இலங்கை அரசு, இந்தியாவிடம் கடனுதவியை கோரியது. இலங்கை நிதியமைச்சரும், அதிபர் கோத்தபாயா ராஜபக்சேவின் சகோதரருமான பசில் ராஜபக்சே டெல்லிக்கு வந்து கடனுதவி கோரியதைத் தொடர்ந்து ரூ.18,090 கோடி மதிப்பிலான கடன் வசதித் திட்டத்தை இலங்கைக்கு இந்தியா அறிவித்திருக்கிறது. இது தொடக்கம்தான். வருங்காலத்தில் இலங்கைக்கு இன்னும் கூடுதலான கடனை இந்தியா வழங்கும்.சீனாவின் பக்கம் சாய்ந்து கொண்டிருந்த இலங்கை அரசை இந்தியாவின் பக்கம் திருப்புவதற்கான ராஜதந்திர நடவடிக்கையாகவே இது பார்க்கப்படுகிறது.

ஆனால், கச்சத்தீவு உள்ளிட்ட நிலப்பரப்பையும், கோடிக் கணக்கில் நிதியுதவியையும் பெற்றுக் கொண்டு, பல்வேறு தருணங்களில் இந்தியாவுக்கு துரோகம் செய்த இலங்கை அரசு, இம்முறையாவது நமது உதவியை பெற்றுக் கொண்டு ஆதரவாக இருக்குமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மாறாக, ஈழத்தமிழர்கள் தான் இந்தியாவுக்கு எல்லா தருணங்களிலும் ஆதரவாக இருந்திருக்கிறார்கள்; இனிவரும் காலங்களிலும் ஆதரவாக இருப்பர்.

அதனால்தான் அவர்களை வளைக்கும் முயற்சியில் சீன அரசு அண்மைக்காலமாக ஈடுபட்டு வருகிறது. இந்தியாவின் பாதுகாப்பு சார்ந்த இந்த அம்சத்தைக் கருத்தில் கொண்டு, இலங்கையை சீனாவிடம் இருந்து பிரிக்கும் நோக்குடன் கடனுதவி வழங்கும் அதே நேரத்தில், இந்தியாவுக்கு ஆதரவான இலங்கைத் தமிழர்களை அரசியல்ரீதியாக வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்தியாவிடம் தொடர்ந்து கடன்களையும், பிற உதவிகளையும் வாங்கிக் குவிக்கும் இலங்கை அரசு, 1987ஆம் ஆண்டு இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட அமைதி உடன்பாட்டைத் தொடர்ந்து, இலங்கை அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தின்படி, இலங்கைத் தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால், ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு 35 ஆண்டுகள் ஆகியும் இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரம் எட்டாக்கனியாகவே உள்ளது.இலங்கை போரின்போதும், போருக்குப் பிறகும் இலங்கைத் தமிழர்களுக்கு 13ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதை விட கூடுதலான அதிகாரங்களையும் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக ராஜபக்சே சகோதரர்கள் உறுதியளித்தனர். ஆனால், அதன்பின் 13 ஆண்டுகள் ஆகியும் அந்த வாக்குறுதிகள் வெற்று வார்த்தைகளாகவே உள்ளன. இப்போதும் ராஜபக்சே சகோதரர்கள்தான் இலங்கை அதிபர், பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கியப் பதவிகளை வகிக்கிறார்கள் என்றாலும் கூட, ஒரு காலத்தில் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முன்வரவில்லை.இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான அநீதிகளை இந்தியா வேடிக்கை பார்க்கக்கூடாது. அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதை அண்டை நாட்டின் விவகாரம் என்று கூறி இந்தியா விலகி நிற்க முடியாது. ஏனெனில், இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவதற்கான 13ஆவது அரசியல் சட்டத் திருத்தம் என்பது இந்தியா இலங்கை அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்பட்டது.

அது முழுமையாக நடைமுறைப்படுத்தப் படுவதை உறுதி செய்ய வேண்டிய இந்திய அரசின் கடமையும், பொறுப்பும் ஆகும். உலகம் முழுவதும் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்களுக்கான அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்கவும், இலங்கை இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்கு காரணமானவர்களை தண்டித்து, இறுதிப்போரில் படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை லட்சம் தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத் தரவும் இந்தியாவைத் தான் நம்பியிருக்கின்றனர். அந்த நம்பிக்கைக்கு இந்தியா துரோகம் செய்து விடக் கூடாது; இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வேண்டிய கடமையிலிருந்து இந்தியா விலகி விடக் கூடாது.

எனவே, இலங்கைக்கு முதற்கட்டமாக ரூ.18,090 கோடி கடன் வசதி அறிவித்துள்ள இந்திய அரசு, அதற்கான முதன்மை நிபந்தனையாக இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின்படியான அரசியல் அதிகாரங்களை குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்க வேண்டும்;போர்க்குற்றங்களை இழைத்தவர்களுக்கு எதிரான ஆதாரங்களைத் திரட்டும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைக்கும்படியும் இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும். இந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரத்தையும், நீதியையும் வென்றெடுத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

## மறைந்த கலைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப பராமரிப்பு உதவித் தொகை: தமிழக முதல்வர் வழங்கினார்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் மறைந்த கலை|ர்கள் ஞர்களின் 15 வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.25,000 குடும்பப் பராமரிப்பு உதவித் தொகையை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.இது தொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: 'தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் மறைந்த கலை|ர்கள் ஞர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்பப் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 15 வாரிசுதாரர்களுக்கு ரூ.25,000 உதவித் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.தமிழக பாரம்பரிய கலைகளை போற்றி பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் 1955ஆம் ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கமானது இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க் கலைகளை அங்கீகரிக்கும் வகையில் 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இம்மன்றத்தின் வாயிலாக மாநிலங்களுக்கிடையே




கலைக்குழுக்களை பரிமாற்றம் செய்தல், மாநில அளவில் கலைமாமணி விருது வழங்கும் திட்டம், தொழில்முறை நாடகக் குழுக்கள் மற்றும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி அளித்தல், பல்வேறு கலை விழாக்களை நடத்துதல், தொன்மை வாய்ந்த அரிய கலை வடிவங்களை ஆவணமாக்குதல், நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.அந்த வகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் மறைந்த கலை|ர்கள் ஞர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்பப் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், ச.செல்வி, ஆ.கோமதி, ஈ. நாகம்மாள், க.ராமலட்சுமி, மு.அழகரக்காள், எஸ்.ஸ்ரீகலா, ஆர்.கங்காதேவி, ஆர்.முத்துலெட்சுமி, சா.அந்தோணியம்மாள், ச. மலர்வள்ளி, பா.ஜோதி, ஆர்.மாரியம்மாள், ஆர்.சரஸ்வதி, எம்.தனம், எம்.சங்கீதா ஆகிய 15 வாரிசுதாரர்களுக்கு ரூ.25,000 உதவித்தொகைக்கான காசோலைகளை முதல்வர் வழங்கினார்.இந்த நிகழ்வின்போது, தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இ.ஆ.ப., தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றததின் தலைவர் வாகை சந்திரசேகர், இயக்குநர் எஸ்.ஆர்.காந்தி, உறுப்பினர் செயலர் மு. இராமசாமி மற்றும் அரசு உயர் அலுவல மறைந்த கலை|ர்கள் உடனிருந்தனர்.'

## மௌச்சூர் முருகன் கோயிலில் சசிகலா வழிபாடு: ரூ.35 லட்சம் மதிப்பில் வெள்ளிக் கவசங்கள், தங்க கண் மலர்கள் காணிக்கை



காஞ்சிபுரம் மாவட்டம் மௌச்சூர் முருகன் கோயிலில் நேற்று சசிகலா வழிபாடு நடத்தினார். அப்போது அவர் ரூ.35 லட்சம் மதிப்பில் வெள்ளிக் கவசங்கள் மற்றும் தங்க கண் மலர்களை கோயிலுக்கு காணிக்கையாக வழங்கினார்.காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் அருகே உள்ள மௌச்சூரில் பிரசித்தி பெற்ற வள்ளி,தெய்வானை சமேத சுப்பிரமணியசுவாமி கோயில் அமைந்துள்ளது.

இந்தக் கோயிலில் தைப்பூசதிருவிழா ஆண்டுதோறும் வெகு விமரிசையாக நடைபெறும். கரோனா வழிகாட்டு விதிமுறைகளின்படி தைப்பூச தினமான நேற்று முன்தினம் கோயிலில் பக்தர்கள் அனுமதிக்கப்படாத நிலையில் கோயிலுக்குள் பூஜைகள் நடைபெற்றன. இதையடுத்து தைப்பூசத்துக்கான மேலும் சில சிறப்பு பூஜைகள் நேற்று நடைபெற்றன. இந்த சிறப்பு பூஜையில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான வி.கே.சசிகலா பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் வள்ளி,தெய்வானையுடன் அருள்பாலிக்கும் முருகப் பெருமானுக்கு ரூ.35 லட்சம் மதிப்பில் 4 அடி உயரமும், 35 கிலோ எடையும் கொண்ட வெள்ளி கவசத்தையும், தங்க கண் மலர்களையும் காணிக்கையாக வழங்கினார். அருகில் இருந்த பொன்னியம்மன் கோயிலிலும் தரிசனம் செய்தார். இதன் தொடர்ச்சியாக மௌச்சூரில் பெருமாள் கோயில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டினார். பின்னர் 1,000 பேருக்கு 10 கிலோ அரிசியை நிவாரண உதவியாக வழங்கினார். குழந்தைகளுக்கும் சாக்லேட்கள் வழங்கினார்.இவர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வரும்போதுஅதிமுக கொடி கட்டிய காரில் வந்ததால் இந்தப் பகுதியில் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

# கனடாவில் எழுச்சி பெறும் தமிழ் மரபுத் திங்கள்

- குரு அரவிந்தன்




உலகில் மக்கள் வாழ்வதற்குச் சிறந்த முதல் 10 இடங்களில், 2022 ஆண்டு கனடாவும் ஒன்றாக சி.எஸ். குளோபல் பாட்னேஸ் என்ற நிறுவனம் தெரிவு செய்திருக்கின்றது. கனடாவுக்குத் தமிழ் மக்கள் பெருமளவில் புலம் பெயர்ந்து சுமார் 40 வருடங்கள்தான் ஆகின்றது. ஆனாலும் இந்த 40 வருடங்களில் அடைக்கலம் தந்த கனடிய மண்ணுக்கு நன்றிக்கடனாகத் தமிழ் மக்கள் கொடுத்த பங்களிப்பு அளப்பரியது. கனடாவில் அனேகமாக எல்லாத் துறைகளிலும் தமிழ் மக்கள் காலூன்றி விட்டார்கள். இங்குள்ள தமிழர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் நாடாளுமன்றத்திற்கு இன்னும் பல பிரதிநிதிகளை அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை உண்டு. கோவிட்-19 பேரழிவின் தொடர்ச்சியாக 2022 ஆண்டும் தமிழர்களின் முக்கிய கலாச்சார நிகழ்வுகளான தைப்பொங்கல், மரபுத் திங்கள் நிகழ்வுகளும் பொதுமக்கள் நன்மைகருதி மட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றன.

கனடா நாடானது குடிவரவாளரின் நாடாகும். ஏனைய பல்லின மக்கள் போலவே கனடாவின் பெரும்பான்மைப் பண்பாட்டோடு இணைந்து, எமது அடையாளத்தையும் இழக்காமல், எமது மரபுகளையும் பேணிக் காக்கக்கூடிய வசதிகள் இங்கே இருக்கின்றன. அவ்வகையில் நாமும் எமது மொழியையும், மரபுகளையும் பேணிக் காபப்பதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ் மரபுரிமைத் திங்களாகும். இதன் ஆரம்பத்தைப் பார்போமேயானால், 2003ம் ஆண்டில் கனடாத் தமிழ்க் கல்லூரியால் தமிழ் மொழி வாரம் ஒழுங்கு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து இங்குள்ள சில அமைப்புகள் ஒன்றிணைந்து "தமிழ் மேம்பாட்டுக் கழகம்" என்ற பெயரில் ஒரு சங்கத்தை உருவாக்கினர். இவர்களுடன் இங்குள்ள தமிழ் நிறுவனங்களும் இணைந்து, தமிழ்மொழி மேம்பாடு, சிறுவர்களுக்கான தமிழ்க் கல்வி,
தமிழியல் ஆய்வு போன்ற துறைகளில் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ் மொழி வார நிகழச்சிகளை ஒழுங்கு செய்தனர். பிள்ளைகளுக்கு தமிழ் மொழியைக் கற்பித்தல், அதில் உள்ள குறைபாடுகளை சரிசெய்தல், தொடர்பு சாதனங்களை இதற்காக இணைத்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கனடாவில் தமிழர் வாழும் இடங்களில் தமிழ் மொழியை முன்னிறுத்தி கலை நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள், பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள், இசை, நடன நிகழ்ச்சிகள், போன்றவை நடத்தப்பட்டன. 2009 ஆம் ஆண்டு தமிழ்க் கல்வியை கற்பிக்கும் அறிவகம் மற்றும் சில தமிழர் அமைப்புக்கள் இணைந்து "தமிழ் மரபுத் திங்கள்" அமைப்பை உருவாக்கினர். 2010 ஆம் ஆண்டு முதலாவது தமிழ் மரபுத் திங்கள் விழா பல இடங்களில் கொண்டாடப்பட்டது. இக்கால கட்டத்தில் தற்போது கனடிய தேர்தலில் போட்டியிடும் நீதன் சண் அவர்களும் சங்கங்களை ஒன்றிணைப்பதில் முன்னின்று உழைத்ததையும் இங்கே குறிப்பிட வேண்டும்.



2012 ஆம் ஆண்டு ஒன்ராரியோ மாநிலத்தில் உள்ள மார்க்கம், ஏஜெக்ஸ், பிக்கரிங் நகரங்களும் 2013 ஆம் ஆண்டு பிராம்ரன், ரொரன்ரோ, நகரங்களும், 2014 ஆம் ஆண்டு ஒட்டாவா நகரமும் தை மாதத்தை தமிழரின் மரபுரிமைத் திங்களாக அறிவித்தன. இதே ஆண்டு ஒன்ராரியோ மாநில அரசும் தமிழ் மரபுத் திங்களைச் சட்டவலுவுள்ளதாக நிறைவேற்றியது. ஹரி ஆனந்தசங்கரியின் முயற்சியால் 2016 ஆம் ஆண்டு கனடிய மத்திய அரசு தமிழ் மரபுத் திங்களை சட்டப்படி அங்கீகரித்தது. 2019ஆம் ஆண்டு தமிழ் மரபுத் திங்களை முன்னிட்டு, முதலாவது உலகத் தமிழியல் மாநாடு, ரொரன்ரோவில் நடைந்தேறியது. இம்மாநாட்டுக்கு, பல நாடுகளில் இருந்தும் தமிழ் அறிஞர் வருகை தந்திருந்தனர்.

2004 ஆம் ஆண்டில் இருந்து ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் ரொறன்ரோ கல்விச்சபையோடு இணைந்து ஜனவரி மாதத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு கலை நிகழ்வுகளை கொண்டாடி வருகின்றனர். 2016 ஆம் ஆண்டு தமிழ் மரபுத் திங்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட முன்பாகவே வருடந்தோறும் ரொறன்ரோ கல்விச் சபையால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டுகளில் சுமார் 5000 தமிழ் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக நான் இருந்த போது மிகச் சிறப்பாக மரபுத்திங்கள் நிகழ்வுகளைக் கொண்டாடினோம். ஓவியப்போட்டி, பேச்சுப் போட்டி, மற்றும் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த வருடம் "எமது வரலாறுகள், எமது மரபுகள், எமது தாயகங்கள்" என்ற தலைப்பை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த நிகழ்ச்சிகளின் தொடர்பாக, பீல் பிரதேசத்தில் உள்ள சொப்கா குடும்ப மன்றத்தினர் தமிழர் மரபுத்திங்களை மிகச் சிறப்பாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருகிறார்கள். இதில் கனடாவில் பிறந்து வளர்ந்து தமிழில் பேசும் பிள்ளைகள் பேச்சு, பாடல், நாடகம், நடனம் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி மிகவும் சிறப்பாகச் செய்து தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்த்தனர். இம்முறை கோவிட் பேரிடர் காரணமாக மொய்நிகர் வழியாகவே இந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இது போல, இங்கே உள்ள பல மன்றங்கள் குறிப்பாக ரொரன்ரோ பல்கலைக்கழகத்துடன் இணைந்து கனடா தமிழ் காங்கிரஸ், தமிழ் இருக்கை போன்ற அமைப்புக்கள் தமிழர் மரபுரிமைத் திங்களைக் கொண்டாடுகின்றனர்.

சென்ற வருடம் 2021 தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள் தைமாதம் முழுவதும் இடம்பெற்றன. நிகழ்வின் ஆரம்பத்தில், ரொரன்ரோவில் உள்ள கனடிய தமிழ் கல்லூரியின் வளாகத் திறந்த வெளியில் கனடிய தேசியக் கீதத்துடன் கனடிய கொடியும், தமிழ்த் தாய் வாழ்த்துடன் மரபுத்திங்கள் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டது. இந்தக் கொடியில் உள்ள இலட்சனைகள் தமிழர்களின் மரபைச் சரியான முறையில் பிரதிபலிக்கவில்லை, ஒரு சிலர், ஏனையோருடன் கலந்தாலோசிக்காமல் தங்களை முன்னிலைப் படுத்த அவசரமாகச் செய்த முடிவு இது என்ற ஒரு சாராரின் குற்றச் சாட்டும் அதைத் தொடர்ந்து முன்வைக்கப்பட்டது. மரபுத்திங்கள் மாதத்தினை முன்னிட்டு கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகள் மெய்நிகர் ஊடாக நடைபெற்றன.

இந்த வருடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்க அங்கத்தவர்களும் தங்கள் பணிமனை அலுவலகத்தில் 2022 மரபுத் திங்களை இரண்டு நாட்கள் கொண்டாடினார்கள். நேரடி நிகழ்வுகள் தைப்பொங்கல் தினத்திலும், 15 ஆம் திகதி இணையவழியாகவும் நிகழ்வுகள் இடம் பெற்றன. கனடாத் தமிழ் மரபியல் நடுவம் ஒழுங்கு செய்த தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள் மெய்நிகர் வழியாக நடந்த நிகழ்வில் 9-1-2022 "வரலாற்றுத் தொடர்ச்சியைப் பேணுவதில் வரலாற்றுத் தொன்மையின் பங்கு" என்ற தலைப்பில் புலவர் செந்தலை ந. கௌதமன் அவர்கள் உரையாற்றினார்கள். 16-1-2022 அன்று பேராதனை பல்கலைக் கழக விரிவுரையாளர் க.ஜெகதீஸ்வரன் "தமிழர் வரலாற்றுத் தொன்மையில் தொல்லியல் ஆய்வுகளின் பங்கு" என்ற தலைப்பிலும் 23-1-2022 அன்று "ஈழத்தில் தமிழர் வரலாற்றுத் தொன்மை" என்ற தலைப்பில் யாழ்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரத்தினமும் உரையாற்ற உள்ளார்கள்.

"தைப் பொங்கல் மற்றும் தமிழ் மரபு மாதத்தையும் முன்னிட்டு தமிழர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் தேசிய அடையாளத்தைப் பேணுவதற்கும், வலுக்கட்டாயமாக ஒருங்கிணைக்கப்படுவதையும், இனப்படுகொலையை எதிர்ப்பதற்கும் உங்களின் உறுதிப்பாடு ஊக்கமளிக்கிறது மற்றும் பாராட்டுக்குரியது என்று அரிஸ் பாபிகியன், ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற பிரதிநிதி அரிஸ் பாபிகியன் கனடா உதயன் பத்திகைக்குத் தெரிவித்திருந்தார். ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் தமது தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் தமிழர் மரபுரிமை மாதத்திற்கான வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார். ஒன்ராறியோவின் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழர்களைத் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் பாராட்டியிருந்தார்.

கனடா பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களும் வழமைபோல தைப்பொங்கலை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். "உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தினர் அறுவடைத் திருநாளான தைப்பொங்கலை இவ்வாரம் கொண்டாடுகிறார்கள். இத்தினத்தில் பாரம்பரியமாக தமிழ் குடும்பத்தினரும், நண்பர்களும் ஒன்றுசேர்ந்து அமோகமான விளைச்சலுக்கு நன்றி தெரிவித்து இனிய பொங்கலையும் ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்வார்கள். கனடாவில் ஜனவரி மாதம் தமிழ் மரபுரிமைத் திங்களாகவும் விளங்குவதால், தமிழ்ச் சமூகத்தின் செழிப்பான வரலாறு,



மீண்டெழும் வல்லமை மற்றும் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் வழங்கிவரும் பங்களிப்பை அங்கீகரித்துக் கொண்டாடும் காலமாகவும் இது அமைகிறது. நாம் ஒன்றுபடும் போது, மேம்பட்டதும், அதிக நியாயம் நிலவுவதும், அனைவரையும் அதிகளவு உள்ளடக்கியதுமாகக் கனடாவை மாற்றலாம். கனடாவிலும், உலகெங்கிலும், தைப்பொங்கலைக் கொண்டாடும் அனைவருக்கும் இந்தப் பண்டிகை மகிழ்ச்சியானதாக அமைவதற்கு எனது குடும்பம் சார்பாக சோ.ஃ.பியும் நானும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்".


## இட்லி குக்கர் விற்பனைக்கு உண்டு



ஒரே நேரத்தில் 100 இட்லி செய்யக்குடிய இட்லி குக்கர் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
(905) 472-9601

# 'பெரியம்மாவிற்கு' அரச மரியாதை

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)



அம்மா காலமானவுடன் சுற்றத்தார் அழுது புலம்புவது, அவரை குடும்பத்தார் சிறப்பான முறையில் நல்லடக்கம் அல்லது தகனம் செய்வது என்பது புதிய விஷயமல்ல. அவர் எவ்வளவு அன்பானவராக இருந்தாலும் சரி, அல்லது ஆக்ரோஷத்துடன் கூடிய கோபக்காரராக இருந்தாலும் சரி குறைந்தபட்சம் எளிமையான முறையிலாவது இறுதிக் கிரியைகள் நடைபெறும். ஆனால் இந்த அம்மா காலமான போது ஊர் மட்டும் அழவில்லை உலகமே அழுதது. ஏனென்றால் அம்மாவின் ஆளுமை அப்படி.

அதற்குக் காரணம் அம்மா ஒரு பெரிய குடும்பி என்பதே. தான் வாழ்ந்த குறுகிய காலத்தில் 29 பிள்ளைகளை ஈன்ற மகராசி அவர். அவரது வழித்தோன்றல்கள் தமது இனத்தின் வரலாற்றை முன்னெடுத்துச் செல்கின்றனர். தனது இனம் அழிந்துவிடாது, அதை தமது சந்ததியினர் காப்பாற்றுவார் என்ற ஆழமான நம்பிக்கையில் அவள் கண்களை மூடினாள்.

பெரும் கம்பீரமும் ஆளுமையும் செலுத்திய அந்த "பெரிய அம்மாவின்" இறுதி நிகழ்விற்கு அவர் பெற்றெடுத்த ஆண், பெண் உட்பட குடும்பத்தினர் யாரும் வரவில்லை. அவர்களுக்கு அம்மா காலமானது கூட தெரியுமா என்று தெரியவில்லை. இது இயற்கையின் நீதியா அல்லது விதியின் சதியா என்பதும் புலப்படவில்லை. எனினும் மிகுந்த மரியாதையுடன் அதுவும் அரச மரியாதையுடன் அவரது இறுதிச் சடங்கு நடைபெற்றது. தற்போதைய சமூக ஊடக காலத்தில் அந்த நிகழ்வை "பெரியம்மாவை" நேசித்த பலர் நேரடி ஒளிபரப்பும் செய்தனர்.

பெரியம்மா தனது வாழ்நாள் முழுவதும் இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தின் சிண்ட்வாரா மாவட்டத்தில் தான் வாழ்ந்தார். அங்கிருந்தவர்கள் அவரை "சூப்பர் மாம்" என்று அழைத்தனர்.

அவருக்கு இயற்பெயர் என்று ஏதுமில்லை ஆனால் "காலர்வாலி" என்ற பெயருடன் அந்த புலி அழைக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது.



அவ்வகையில் இந்த கட்டுரை நான்கு கால் புலியைப் பற்றியது.

புலி என்றால் ஆளுமை என்பது உலகம் அறிந்தது. துணிச்சல், சாகசம், அதிரடி தாக்குதல், மண்டியிடாத வீரம், தன்மானத்தை இழக்காத தன்மை என்று பல சிறப்பு குணாம்சங்களைக் கொண்டது புலி. "புலி பசித்தாலும் புல்லை உண்ணாது" என்ற செலவடையை தன்மானத்திற்கு உதாரணமாக கூறும் வழக்கம் இன்றும் உள்ளது. மோதல் என்று வந்தால் புலியை வெல்வது மிகவும் கடினம். புலி மிகவும் இனமான உணர்வு கொண்டது. தனது இனத்தைக் காக்க எப்பேற்பட்ட போராட்டத்தையும் சந்திக்கும் தன்மையும் வல்லமையும் கொண்டது புலி என்று ஆய்வாளர்கள் தொடர்ந்து கூறிவந்துள்ளனர்.

உலகளவில் மிகவும் ஆளுமை செலுத்தி நன்கு அறியப்பட்ட டி-15 அல்லது "காலர்வாலி" என்று அன்புடன் அழைக்கப்பட்ட புலி சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்தது பொதுமக்கள், வனவிலங்கு ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள் என்று பரந்துபட்ட அளவில் கோடிக்கணக்கான மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

"அந்த புலி வயது முதிர்ச்சி காரணமாக உயிரிழந்தது. அது கடைசியாக ஜனவரி 14 ஆம் திகதி (தைப்பொங்கலன்று) பென்ச் புலிகள் சரணாலயத்திலுள்ள புரா தேவ் ஓடைக்கு அருகே நடக்க முடியாத நிலையில் படுத்திருந்தது காணப்பட்டது. கால்நடை மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பிலிருந்த "காலர்வாலி" அன்று மாலை 6.15 மணிக்கு உயிரிழந்தது" என்று அந்த சரணாலயத்தின் கள இயக்குநர் அலோக் மிஸ்ரா அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டார். இந்த அறிவிப்பே ஒரு முக்கிய நபரின் மரண அறிவித்தல் போலிருந்தது.



கடந்த 2008 தொடக்கம் 2018 வரையிலான 11 ஆண்டு காலப்பகுதியில் எட்டு பிரசவங்களில் "காலர்வாலி" 29 குட்டிகளை ஈன்றாள். அவற்றில் உயிர் பிழைத்த 26 புலிக்குட்டிகள் இன்று அந்த வனப்பகுதியில் ஆரோக்கியமாகச் சுற்றி திரிகின்றன. 2005 ஆம் ஆண்டு பிறந்த அந்த புலிக்கு மூன்றாண்டுகளுக்குப் பிறகு 2008 ஆம் ஆண்டு- இருப்பிடத்தை அறிந்துகொள்ள உதவும் "ரேடியோ காலர்" பொருத்தப்பட்டது. அது சிறிது காலத்திற்குப் பிறகு செயலிழந்து போகவே மீண்டும் ஜனவரி 2010 இல் அதற்கு "ரேடியோ கம்மல்" பொருத்தப்பட்டது. அன்று முதல் அந்த புலிக்கு "காலர்வாலி" என்ற பட்டப்பெயர் ஒட்டிக்கொண்டது. பின்னர் காட்டு முறைப்படி அது கருத்தரித்தது. முதல் முறையாக அக்டோபர் 2008 இல் மூன்று குட்டிகளை ஈன்றது, ஆனால் துரதிஷ்டவசமாக அவை உயிர் பிழைக்கவில்லை. எனினும் அவள் துவண்டு போகவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 2010 இல் ஐந்து குட்டிகளைப் பெற்றெடுத்தது. இது வனவிலங்கு ஆர்வலர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. பரந்து விரிந்த அந்த புலிகள் சரணாலயத்தில் 16 ஆண்டுகாலம் வாழ்ந்தது "காலர்வாலி". அதுவே ஒரு சாதனை ஏனென்றால் புலிகளின் ஆயுட்காலம் பொதுவாக 10-12 ஆண்டுகள் என்று கூறப்படுகிறது.

காலர்வாலிக்கு இரண்டு ஆண் மற்றும் ஒரு பெண் உடன்பிறப்புகளும் உண்டு. அவர்களும் அதே பென்ச் புலிகள் சரணாலயத்தில் வாழ்ந்து உயிரிழந்தனர். தனது ஏழாவது பிரசவத்திலும் 4 குட்டிகளை "பெரியம்மா" பெற்றெடுத்தது. புலிகளின் கர்ப்பகாலம் சுமார் 3 மாதங்கள். புலிக்குட்டிகளின் தந்தையை அடையாளம் காண்பது இயலும் என்றாலும் அது எளிதானதல்ல. மேலும் ஒரு புலி கர்ப்பமாக உள்ளதா என்பதைக் கண்டறிவதும் சற்று சிரமமானது ஏனென்றால் பேறுகாலத்திற்கு சுமார் 15-20 நாட்களுக்கு முன்னரே அது கர்ப்பிணி என்பதற்கான தோற்றம் தெரியவரும் என்று வனவிலங்கு மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். "காலர்வாலியின்" அம்மாவும் நல்ல வீரியமிக்கது. அதுவும் தனது 12 ஆண்டுக்கால வாழ்க்கையில் 19 குட்டிகளை ஈன்றது.



புலிகள் பொதுவாக ஒரு முறை கர்ப்பம் தரித்தால் சாதாரணமாக 3 மூன்று குட்டிகளும் அரிதாக நான்கு குட்டிகளையும் பெற்றெடுக்கும். ஆனால் இந்த "பெரியம்மாவோ" கடந்த 2010 ஆம் ஆண்டில் ஐந்து குட்டிகளைப் பெற்றெடுத்த போது உலகளவில் பேசப்பட்டுப் பிரபலமடைந்தது. குட்டிகளைப் பெற்றெடுப்பதோடு மட்டுமின்றி "காலர்வாலி-பெரியம்மா" அவைகளுக்குச் சிறந்த உணவு மற்றும் ஊட்டச்சத்தை அளித்து, "வயதிற்கு வரும் வரை" அலைந்து திரியும் ஆண் புலிகளிடமிருந்து பாதுகாத்து ஒரு தாயின் கடமையை முழுமையாக நிறைவேற்றியது. உலகளவில் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி மற்றும் சரணாலயங்களில் இருக்கும் புலிகளில் இந்த புலியே அதிகளவுக்கு குட்டிகளை ஈன்றுள்ளது. அதற்குப் பிறந்து இன்றளவும் ஆரோக்கியமாகவுள்ள 26 புலிக்குட்டிகளும் வளர்ந்து அவைகளும் குட்டிகளைப் பெற்றெடுக்க ஆரம்பித்துள்ளன. அவ்வகையில் "காலர்வாலி-பெரியம்மாவின்" வழித்தோன்றல்கள் ஆரோக்கியமாக இருந்து அதே மரபணுவுடன் மேலும் மேலும் புலிகளின் எண்ணிக்கையைப் பெருக்கும் என்கிற நம்பிக்கை இப்போது ஏற்பட்டுள்ளது. புலிகள் பொதுவாக மூன்று வயதைக் கடந்த பிறகு முதல் முறையாகக் கர்ப்பம் தரிக்கும். அதன் பிறகு குறைந்தது இரண்டு ஆண்டுகள் இடைவெளி இருக்கும். புலிகள் கர்ப்பம் தரிப்பதும் குட்டிகளைப் பெற்றெடுப்பதும் இயற்கையாக நடக்கக்கூடியது என்றாலும், "பெரியம்மா" போன்று வீரியம் மிக்க புலிகளைப் பார்ப்பது மிகவும் அரிதானது. குட்டிகள் வளர்ந்து பெரியவை ஆனதும் அவற்றைச் சற்று சுதந்திரமக அலயவிட்டு, "காலர்வாலி" தொடர்ச்சியான தனது இனப்பெருக்க நடவடிக்கையை முன்னெடுத்தது. அது அறிவார்ந்த செயல் என்று வனவிலங்கு ஆர்வலர் சங்கத் சென்குப்தா என்னிடம் தெரிவித்தார்.

அந்த சரணாலயத்தின் தலைமை அதிகாரி இந்த "பெரியம்மா" விளம்பர பிரியர் என்று என்னுடன் உரையாடிய போது கூறினார்.

"ஏன் அப்படி?"-நான் வினவினேன்!

"ஓ....அதுவா.....இந்த சரணாலயத்தைச் சுற்றிப்பார்க்க வரும் அனைவரும் இந்தப் புலியை காண விரும்புவார்கள். அப்படி அதிர்ஷ்டவசமாக அவர்கள் கண்ணில் தென்பட்டால், அருகில் வந்து அவர்கள் பாதுகாப்பாக படம் எடுத்துக் கொள்வதற்கு அனுமதிக்கும். மேலும் தனது குட்டிகளை காட்சிப்படுத்தவும் அது தயங்காது. தனது ஆற்றல் பறைசாற்றப்பட வேண்டும் என்பதில் "காலர்வாலிக்கு" எப்போதும் ஆர்வம் உண்டு. புலிகளுக்குத் திறமை இருக்கும் போது அதை வெளிப்படுத்துவதில் தவறில்லையே".



மிகவும் அற்புதமாக பூரண வாழ்வு வாழ்ந்த அந்த புலிக்கு மத்தியப் பிரதேச மாநில அரசும், இந்திய அரசும் அஞ்சலி செலுத்தின. "காலர்வாலி" நாட்டின் பெருமை என்று கூறி அஞ்சலி செலுத்தினார் பிரதமர் மோதி.

"காட்டு ராஜா" என்று சிங்கம் அழைக்கப்பட்டாலும், ஆளுமை, அறிவு, திறமை, வீரம், தீரம் பாதுகாத்தல், எதிரிகளை அலறவிடுதல் போன்றவற்றில் சிங்கத்தைவிட புலியே மேம்பட்டது என்று விலங்கியல் ஆய்வாளர்களும் வல்லுநர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர். எனவே தான் பெரும்பூனைக் குடும்பத்தில் தலையாயமானது புலி என்றும் அவர்கள் கூறுகின்றனர். சிங்கத்தைக் காட்டிலும் புலிகளுக்கு இனமான உணர்வு அதிகம் என்பது அறியப்பட்ட ஒன்று. உதாரணமாக ஒரு சிங்கம் வேட்டையாடிக் கொன்ற இறையை புலிகள் உண்ணாது. மிகவும் தன்மானம் கொண்ட புலிகள் இருக்கும் இடத்தில் சுற்றுச்சூழல் சமநிலை பேணப்படும் மேலும் அது பல்லுயிர் பெருக்கத்திற்கு பெரும் பங்களிப்பைச் செய்கிறது.

புலி இருக்கும் நாடும் காடும் பாதுகாப்பானது.





# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**




## எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# மிசிசாகாவில் வாகனத்தால் மோதப்பட்டு உயிரிழந்த தமிழர் ஒருவரின் மரணம் தொடர்பாக பொலிசார் விசாரணை



கனடா-மிசிசாகாவில் வாகனத்தால் மோதப்பட்டு உயிரிழந்த தமிழர் ஒருவரின் மரணம் தொடர்பாக பொலிகார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

35 வயதுடையவரும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழரான இவரின் மரணத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை அடையாளம் காண உதவுமாறு, மிசிசாகா பிராந்திய பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 17ஆம் திகதி, மிசிசாகா நகரில் இடம்பெற்ற விபத்தில் 35 வயதுடைய சுரே' தர்மகுலசிங்கம் என்பவர்உயிரிழந்தார். கனடாவின் மார்க்கம் நகரில் வசித்து வந்த சேர்ந்த இவர் வீதியை கடந்து தனது வாகனத்திற்கு சென்ற போது வாகனம் ஒன்றினால் மோதப்பட்டு, படுகாயமடைந்தார்.

விபத்தில் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், சிகிச்சை பலனின்றி, டிசெம்பர் 24ஆம் திகதி மரணமானார். இந்நிலையில் அவரை மோதிய வாகனத்தின் சாரதி, அந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மோதிய வாகனத்தின் சாரதியை அடையாளம் காணும் முயற்சியில் சந்தேகத்தின் பேரில் வாகனம் ஒன்றின் படம் பொலிசாரால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான தகவல், பாதுகாப்பு கெமரா அல்லது வேறேதும் காணொளி பதிவுகள் இருப்பவர்கள், பொலிஸ் அல்லது குற்றத் தடுப்பாளர்களைத் தொடர்பு கொள்ளுமாமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

உயிரிழந்த சுரேஸ் தர்மகுலசிங்கம் யாழ்ப்பாணம் நுணாவில் மேற்கை சொந்த இடமாக கொண்டவர் எனவும் , கடந்த 2010ஆம் ஆண்டு கனடாவுக்கு குடிபெயர்ந்ததுடன், கனடாவில் சரக்குகளை ஏற்றும் 'ட்ரக்' சாரதியாகவும் பணியாற்றி வந்தார் எனவும் பொலிசார் அறிவித்துள்ளனர்

மேலும் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், இலங்கைக்குச் சென்று திருமணம் செய்து கொண்ட சுரேஸ் தர்மகுலசிங்கம், டிசம்பர் 11ஆம் திகதி கனடாவுக்குத் திரும்பிய நிலையில், சில நாட்களில் அவர் விபத்தில் உயிரிழந்துள்ளமை அவரது நண்பர்களுக்கும் மற்றும் ஊடகங்களுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் பூஸ்டர் தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.

கோவிட்-19 -இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நமது பாதுகாப்பு நம் அனைவரின் கையில்.



ontario.ca/covid19 -ஐ சென்று பாருங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.
Ontario

# பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
03-10-1986

இறப்பு:
31-01-2012



## செல்வி டனித்தா விக்கினேஸ்வரபாலன்

(கொக்குவில்-தலையாழி)

ஈழத்தில் கொக்குவில் தலையாழி. வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபுறோவை வசிப்பிடமாகவும் கொண்டு ஸ்காபுறோ பல்கலைக் கழகத்தில் (UofT 4th Year) பயின்றுகொண்டிருந்தவமான எமது அன்புச் செல்வி டனித்தா விக்கினேஸ்வரபாலன் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி.

உமை நாம் இழந்து பத்தாவது ஆண்டு கடக்கின்றபோதிலும்
எம் பதைப்பு இன்னும் அடங்கவில்லை அம்மா டனித்தா
கண் இமைக்கும் நேரத்தில் உமைக் காவு கொண்டான் காலன்
கதறியே அழுதோம் காலங்கள் கடந்தாலும் எம் சோகம் ஆறாது
எண்ணியே இருந்தோம் நாமும் நீயும் இம் மண்ணில் இன்பமாய்
எந்நாளும் வாழ்வோம் என்று ஆனால் நீ இல்லா உலகம் இருளே
எந்நாளும் எம்மோடு கூட வருவது கொடிதான நிசப்தம் தான்
உமை வளர்ப்பதிலும் உம்மோடு வாழ்வதிலும் இணையே இல்லாமல்
உம் பணிகள் தொடர கல்வியிலும் கடமையிலும் கண்ணாகி நின்றீர்
எதிர்பாரா இழப்பு அனைவரையும் வீழ்த்தியது விதி என்று சொல்லி
உம் இழப்பை ஏற்று மறந்து வாழ எம் இதயங்கள் மறுக்கின்றன
என்றும் உமக்காய் காத்திருப்போம் என்றோ ஒரு நாள் அருகில் வர...



இங்ஙனம்,
உந்தன் பிரிவால் இன்னும் வாடும் அப்பா, அம்மா,
அண்ணா, அண்ணி, மருமக்கள், தம்பிமார்
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

# மரண அறிவித்தல்



தோற்றம்:
31 - 10 - 1932

மறைவு:
12 - 01 - 2022

# திரு. துரையப்பா நவரட்னம்

**(அத்தியடி Sri Lanka)**

**யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெமட்டகொடையில் வசித்து வந்தவரும், தற்போது கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட திரு. துரையப்பா நவரட்னம் அவர்கள் 12-01-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா–பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சுப்பையா–முத்துப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி அவர்களின் அன்பு கணவரும், ராஜ்குமார், செல்வகுமாரி, சாந்தகுமாரி, நளினகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், Princey, கீர்த்தி, Kilbert ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகபூசணி, மற்றும் கனகாம்பிகை (பேபி), கமலாதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகபூசணி கனகசபாபதி, கனகசபாபதி, வாமதேவன் பார்வதி, கருணைக்கடாச்சி சிதரம்பரநாதன், மற்றும் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனரும், Stephen, Shaun, Adrian, அருணன், Dr. அனுஷ்கா – பிரகலாதன், அஸ்வின், சரண்யா, அபிலாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 23-01-2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி தொடக்கம் 9:00 மணி வரை Chapel Ridge Funeral Home (8911 Woodbine Ave, Markham, ON, L3R 5G1) இல் வைக்கப்பட்டு, மறுநாள் 24-01-2022 திங்கட்கிழமை காலை 9:00 மணி தொடக்கம் 11:00 மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் காலை 11:45 மணி தொடக்கம் பி.ப. 12:15 மணி வரை Forest Lawn Crematorium (4570 Yonge Street, Toronto M2N 5L6) இல் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: செல்வி – மகள் (UK): 078 2503 1116
நளினி – மகள் (UK): 079 4919 3977
பாஸ்கர் - மருமகன் (கனடா): (416) 569-3099

# தடைகளை படிக்கற்களாக மாற்றிய சாதனை பெண்கள்

**பெ**ண்கள் தங்களது வாழ்வில் சாதனை படைக்க பல்வேறு தடைகளை எதிர்கொள்கின்றனர். ஒரு சிலர் அதில் உடைந்து போவதுமுண்டு ஆனால் மற்றும் ஒரு சிலர் எத்தனை தடைகள் வந்தாலும் அதை தகர்த்தெறிந்து முன்னேறி செல்வதும் உண்டு. அவ்வாறு சோதனைகளையும் சாதனைகளாக மாற்றிய சில இரும்பு பெண்மணிகளை பற்றி பார்ப்போம்.




**1. மாரி கியூரி** உலகின் மிகப் பெரிய விருதுகளில் ஒன்றாக கருதப்படும் நோபல் பரிசை ஒரு முறை வெல்வதே அரிது. முதன்முறையாக நோபல் பரிசை இரண்டு முறை வென்றது, மாரி கியூரி தான். புற்று நோய்க்கு சிகிச்சைக்கு மாரியின் கண்டுபிடிப்புகள் தான் ஆரம்பம். தன் வாழ்வை அறிவியலுக்காகவே அர்ப்பணித்த மாரி கியூரி, வரலாறு காணாத விஞ்ஞானி என்று போற்றப்படுகிறார்.



**2. ஜே. கே. ரவுலிங்** ஹாரி பாட்டர் நாவலையோ அல்லது அதனை தழுவி எடுக்கப்பட்ட திரைப்படத்தையோ கேள்விப்படாதோர் இருக்க மாட்டார்கள். இதனை படைத்தவர் ஜே. கே. ரவுலிங் ஆவார். வறுமையின் சூழலில் சிக்கி தவித்து, எழுதுவதற்கு ஒழுங்கான இடம் கூட கிடைக்காமல் சிரமப்பட்ட ஜே. கே. ரவுலிங், எண்ணற்ற நிராகரிப்புகளை தாண்டியே வெற்றிக் கொடியை நாட்டியுள்ளார்.

**3. ஸ்டெ∴பி கிரா∴ப்** "நன்றி ஸ்டெ∴பி! - அழகான, அற்புதமான டென்னிஸ் நாட்களை வழங்கியதற்கு நன்றி" - இது தான் டென்னிஸ் வீராங்கனை ஸ்டெ∴பி கிரா∴ப் ஒய்வு பெற்ற போது, உலகெங்கும் உள்ள பல பத்திரிக்கைகளின் தலையங்கமும். 22 கிராண்ட் ஸ்லாம்கள், ஒரு ஒலிம்பிக் தங்கப் பதக்கம், பல கிராண்ட் பிரீ பட்டங்கள் என்று எண்ணற்ற சாதனைகளை படைத்த ஸ்டெ∴பி, ஒய்வு பெற்ற பின் போர்களால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உதவி வருகிறார்.






**4. அகதா கிறிஸ்டி** மர்ம நாவல் எழுத்தாளார்கள் பலர் இருந்தாலும், அகதா கிறிஸ்டிக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. அகதாவின் மேடை நாடகமான "தி மௌஸ் டிராப்" (The Mousetrap) பல ஆண்டுகளாக அரங்கேற்றப்பட்டு சாதனை புரிந்து வருகிறது.

**5. அன்னை தெரஸா** கருணையின் மறு உருவம் என்று பலராலும் அழைக்கப்படுபவர் அன்னை தெரஸா. அமைதிக்கான நோபல் பரிசு மற்றும் இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா ஆகியவற்றை பெற்றவர். இவர் ரோமன் கதோலிக்கத் திருச்சபையால் புனிதராக்கப்பட்டவர்.



**6. மார்லின் மன்றோ** ஹாலிவுட் திரைப்பட நடிகைகளில் மறக்க முடியாதவர் மார்லின் மன்றோ. என்றும் ரசிகர்களின் கனவுக்கு கன்னியாக விளங்கும் மார்லின் மன்றோ தனது துயரங்களையும், ஏமாற்றங்களையும் புறந்தள்ளி ரசிகர்களை தனது நடிப்பு மற்றும் பாடல்களால் பரவசப்படுத்தினார். அவரது வாழ்க்கையை போலவே புதிராக அமைந்தது அவரது மரணமும்.





**7. ∴பிளாரன்ஸ் ஜாய்னர்** மூன்று ஒலிம்பிக் தங்கப்பதக்கங்கள், இரண்டு உலக சாம்பியன்ஷிப் தங்கப்பதக்கங்கள் என பல பதக்கங்களை குவித்துள்ள ∴பிளாரன்ஸ் ஜாய்னர், "தடகள ராணி" என்று புகழப்பட்டவர். தனக்கென்று தனி பாணி அமைத்துக் கொண்ட ∴பிளாரன்ஸ், 38 வயதிலேயே காலமாகி விளையாட்டு ரசிகர்களை வருத்தத்தில் ஆழ்த்தியவர்.



**8. ஹெலன் கெல்லர்** கண்பார்வையற்ற மற்றும் கேட்கவும், பேசவும் இயலாத ஒரு மாற்றுத் திறனாளியான ஹெலன் கெல்லர், புகழ்பெற்ற எழுத்தாளராக, பேச்சாளராராக பின்னாட்களில் மாறியதன் காரணம் தன்னம்பிக்கை, விடாமுயற்சி மற்றும் கற்றுக் கொள்ளும் ஆர்வம் ஆகிய பண்புகளை கொண்டிருந்தது தான். பெண்களுக்கு மட்டுமல்ல, இந்த உலகில் சாதிக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் ஹெலனின் வாழ்க்கை வரலாற்றை படிப்பது புத்துணர்வைத் தரும்.



**9. கல்பனா சாவ்லா** இவர் ஒரு அமெரிக்க விண்வெளி வீராங்கனை மற்றும் பொறியாளர் ஆவார், இவர் விண்வெளிக்குச் சென்ற முதல் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண்மணி ஆவார். இந்தியா மற்றும் அமெரிக்காவில் உயர்கல்வியை முடித்த இவர் நாசா அமெஸ் ஆராய்ச்சி மையத்தில் பணிபுரியத் தொடங்கினார். மிகவும் திறமையான மற்றும் தைரி-யமான பெண் எனவும் அழைக்கப்பட்டார். பெப்ரவரி 1, 2003 அன்று, ஸ்பேஸ் ஷட்டில் கொலம்பியா பேரழிவில், மற்ற ஆறு பணியாளர்களுடன் சாவ்லா மரணமடைந்தார். மறைவின் பின்னரும் அவரது புகழ் உலகெங்கும் பரவி காணப்படுகிறது.



**10. ஆங் சான் சூ சி** மியான்மரின் நடைமுறைத் தலைவரான ஆங் சான் சூ சி, தனது பொது வாழ்க்கையில் சந்தித்த போராட்டங்களுக்கு அளவே இல்லை. மிகவும் கடும்போக்குடன் செயல்பட்ட மியான்மர் ராணுவ அரசை எதிர்த்த ஆங் சான் சூ சி, எண்ணற்ற ஆண்டுகள் வீட்டுச்சிறையில் கழிக்க நேரிட்டது. இரும்புப் பெண்மணியான சூ சி, தனது கொள்கையால் சற்றும் பின்வாங்காமல் சாதித்து காட்டினார்.

"உலகில் இது போன்ற சாதனை பெண்கள் பலர் உள்ளனர். இவர்களை போன்று திறமையாகவும் தன்னம்பிக்கையுடனும் முன்னேறினால் அனைத்தும் வெற்றியாக அமையும்".

**- இரா. சஹானா**




# எண் ஜோதிடப்படி 2022 உங்களுக்கு எப்படி?



கலாநிதி துன்னாலையூர் ராம் தேவலோகேஸ்வரக்குரு
(சாரதாபீடம் சோதிடநிலையம்)

மலரும் புதிய ஆண்டு 2022 உங்களின் பிறப்புத் திகதிகளின்படி எப்படி அமையப் போகின்றது. பொதுவாக ஆண்டு எண் 6ம் எண்ணிலும், கூட்டு எண் 8ம் எண்ணிலும், வார எண் 8ம் எண்ணிலும் என அமைகின்றது. பொதுவாக 6ம்,8ம்,1ம்,5ம் எண்களில் பிறந்தவர்கட்கு அதிகமான சிறப்புகள் அமையும். 2ம்,4ம்,3ம்,7ம்,9ம் எண்களில் பிறந்தவர்கட்கு ஓரளவிற்கு அனுகூலமான நற்பலனும் அமையும். இந்த ஆண்டில், நீங்கள் புதிய முயற்சிகள் தொடங்கும்போது, 6ம்,8ம்,5ம்,7ம் எண்களில் தொடர்பில் ஆரம்பித்தால் நல்ல வெற்றிகளைப் பெறமுடியும். நீளம், வெண்மை, நிறங்களும் அனுகூலமான பலன்தரும். சுக்கிரன், சனி, கிரஹ சேர்க்கை எண்ஜோதிடப்படி வியாபாரம் சிறக்கும். சுகபோக பொருட்கள் மலிவுறும் இடையிடையே இயற்கை அனர்த்தம் அமையும். எனவே, எல்லோரும் நல்லதை நினைந்து, செய்து, செயல் ஆற்றி அன்பு, அறம், அமைதி கொண்டு வாழ்வுறுங்கள்.

**எண் 1** (1ஆம்,10ஆம்,19ஆம் திகதிகளில் பிறந்தோர்)

சூரியனின் ஆதிபத்தியம் கொண்ட முதலாம் எண் அன்பர்களே!

உங்களுக்கு 2022ஆம் ஆண்டு மிகவும் அனுகூலமானதாக அமையும். எதையும் திட்டம் இட்டு செயல்படக் கூடிய ஆளுமை அமையும். சுபகாரியங்கள் அனுகூலமானதாக அமையும். பிறக்கும் ஆண்டில் எண் 6, கூட்டு எண் 8, வார எண் 8 என அமைகின்றது. இவை உங்களுக்கு அனுகூலமானதாகவே இருக்கும். உங்களின் முயற்சிகளும், வெற்றியை தரும் நிலையாகவே இருக்கும். பொதுவாக 6ஆம், 8ஆம் எண் நண்பர்களின் மூலமாக இந்த ஆண்டில் நன்மை அமையும். எதையும் முதன்மையாகவும், தைரியமாகவும் செய்து வெற்றி காணும் உங்களுக்கு மற்றவர்களின் வளர்ச்சி இன்னும் உங்களை வேகப்படுத்தி செயற்பட வைக்கும். நல்ல எண்ணங்களோடு செயலாற்றி 2022இல் பல நன்மை பெறுங்கள்.

**எண் 2** (2ம்,11ம்,20ம்,29ம் திகதிகளில் பிறந்தவர்கள்)

சந்திரனின் பூரணமான ஆட்சியை கொண்ட இரண்டாம் எண் அன்பர்களே!

2022ஆம் ஆண்டில் நீங்கள் ஓரளவிற்கு அனுகூலங்கள் பெற்று கொள்ளும் நிலை அமையும். தொழில் நிலைகளில் சிறு சிறு சிக்கல் பிரச்சினைகள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறி தாமத நிலை இருக்கும். சற்று பொறுமை, நிதானமுடன் செயற்படுவதே மிகவும் நல்லது. மனநிலையில், குழப்பங்கள், சற்று அதிகமாக இருக்கும். எதையும் திட்டம் இட்டு செயற்பட முடியாத நிலைகள் அமையும். ஆண்டு எண் 2022 என அமைவது, 6ஆம் எண்ணின் அனுகூலம். திடீர் நன்மைகள், நற்பலன்கள் கொடுக்கும். பணவரவு சற்று மத்திமமாகவே அமையும். குடும்ப நிலையில் எதிர்பாராத திடீர் பிரச்சினைகள், இடையிடையே அமையும் நிலை இருக்கும். சற்று பொறுமை, நிதானமுடன் செயற்பட வேண்டும். எதிலும் சிறு போராட்ட நிலையைக் கண்டே வெற்றி பெற முடியும். பொதுவாகவே எந்த விடயத்திலும் அதிகமான ஆராச்சியம், சந்தேக நிலையும் கொண்ட நீங்கள், அடிக்கடி மனக்குழப்பம் காணுவீர்கள். அதற்கு ஏற்ப உங்கள் செயல் திடமாக நிதானத்தோடு அமைந்தால் நல்ல அனுகூலம் அமையும் நிலை உண்டு.

**எண் 3** (3ம், 12ம், 21ம், 30ம் திகதிகளில் பிறந்தவர்கள்)

குருவின் பூரண ஆதிபத்தியம் கொண்ட மூன்றாம் எண் அன்பர்களே!

உங்களின் எண்ணிற்கு 2022ஆம் ஆண்டு சிறு சிறு நன்மைகள் அனுகூல பலன்கள் கொடுக்கும். ஆண்டு எண் 6, வாரஎண் 8, கூட்டு எண் 8 என அமைகின்றன. சுக்கிரன், சனீஸ்வரன், ஆட்சிமை கொண்ட இந்த ஆண்டு உங்களுக்கு மத்திமமான பலனே கொடுக்கும். எடுக்கும் முயற்சிகளில் சற்று பொறுமை, நிதானமுடன் செயற்பட வேண்டும். தொழில் சார்ந்த வேலைப்பளு அதிகமாக அமையும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலைகள் இருக்கும். முயற்சிகளில் ஏதோ ஒரு வகையில் தடைகளும்,இழுபறி நிலைகளும் இருக்கும். எனவே அதற்கு அமைய நிதானத்துடன் செயலாற்றுவது மிகவும் நன்மை தரும். குடும்ப நிலையில் சிறு சிறு குழப்ப நிலைகள் இருக்கும். பணவரவு சற்று மத்திமமானதாகவே அமையும். வழக்கு விவகாரங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைகள் அமையும். புதிய நண்பர்களுடன் நட்புறவு அமையும் நிலை இருக்கும். அதற்கு ஏற்ப உங்களின் செயற்பாட்டை தொடர்வது மிகவும் நல்லது. பொதுவாகவே உங்களின் அத்தனை விடயங்களையும் மிக, மிக கச்சிதமாக செயற்படுத்தி வெற்றி காணும் திறன் கொண்ட நீங்கள், உங்கள் தேவைக்கு ஏற்ப மற்றவர்களைப் பயன்படுத்தி கொள்வீர்கள். 2022இல் ஓரளவு அனுகூலம் பெறலாம்.

**எண் 4** (4ம், 13ம்,22ம்,31ம் திகதிகளில் பிறந்தவர்கள்)

ராகுவின் ஆதிபத்தியம் கொண்ட நான்காம் எண் அன்பர்களே!

உங்களின் எண்ணிற்கு 2022 நல்ல அனுகூலங்களை கொடுக்கும் நிலையுண்டு. தொழில் சார்ந்த வேலைப்பளு அதிகமாக அமைந்திருக்கும். தேவையற்ற அலைச்சல் நிலைகளும் அமையும். உறவினர்களுடன் மனச்சஞ்சல நிலைகள் ஏற்படும். குடும்ப நிலையில் திடீர் செலவீனங்கள் இருக்கும். எண் 6 வருட எண்ணாக அமைவது எதிர்பார்ப்பு நிலைகளுக்கு உரிய பலன்களை கொடுக்கும் பலன் உண்டு. கடன் பிரச்சினைகளில் சிறு சிறு இழுபறி நிலைகள் இருக்கும். புதிய முயற்சிகளில் சற்று நிதானத்தோடு செயற்படுவது மிகவும் நல்லது. பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் ஏற்படும். சுபகாரியங்கள் சற்று இழுபறி நிலையைக் கொடுக்கும். உறவினர்களின் மூலமாகவும், சற்று சிக்கல் இழுபறி நிலைகள் இருக்கும். எனவே எல்லா வகையிலும் மிகவும் பொறுமையுடன் நிதானமுடன் செயற்படுவதே மிகவும் நன்மையாகும். சற்று எதிர்பாராத வகை திடீர் நன்மைகளும், அமைய பலன் உண்டு. பொதுவாகவே மற்றவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் எனும் நல்ல எண்ணம் அதிகமாகவே கொண்டவர்கள் நீங்கள். எல்லோருக்கும் உதவுகின்ற குண இயல்பும் கொண்டவர்கள் தெய்வ பக்தி அதிகம் இருக்கும். எந்த நிலையிலும் பெரும் வீழ்ச்சி காணமாட்டீர்கள். 2022 அனுகூலம் கிடைக்க முயற்சியோடு செயற்படுங்கள்.

**எண் 5** (5ம், 14ம், 23ம் திகதிகளில் பிறந்தவர்கள்)

புதனின் ஆதிபத்தியம், நிறைவாக கொண்ட ஐந்தாம் எண் அன்பர்களே! உங்களின் எண்ணிற்கு 2022ஆம் ஆண்டு மிகவும் நன்மைகள் தரும் ஆண்டாக இருக்கும். புதிய முயற்சிகள் கைகூடிவரும். எதையும் வெற்றி கொள்ளக் கூடிய ஆளுமை அமையும். தொழில் நிலை சார்ந்த முன்னேற்றம் மிகவும் சிறப்பானதாக இருக்கும். பணவரவு தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையிருக்கும். குடும்பத்தில் மகிழ்வும், நன்மைகளும் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் இருக்கும். வெளிநாட்டு பிரயாணம் எதிர்கொள்வோர்க்கு அப்பலன் நிறைவானதாக அமையும் நிலையுண்டு. ஆண்டு எண் 6, கூட்டு எண் 8, வார எண் 8, என அமைவது எல்லா வகையிலும் உங்களுக்கு மிகவும் நற்பலன்கள் அமைய இடமுண்டு. நீண்டகாலம் தடைப்பட்ட விடயங்கள் எல்லாம் உங்களை நாடிவரும். எதையும் சமாளித்து வெற்றி பெறும் நிலை அமையும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் அமையும் நிலையிருக்கும். தொழில் சார்ந்த பதவி உயர்வுகளும் ஏற்படும். வழக்கு விவகாரங்களில் வெற்றிகள் ஏற்படும். நீண்டகால பிரச்சனைகளுக்கு சுமகமான தீர்வுகள் அமையும். பொதுவாகவே எல்லோரையும் வசீகரித்து சமாளித்து செயற்படும் திறன் கொண்டவர்கள் நீங்கள். செல்லும் இடங்களில் செல்வாக்கு தேடி வரும். மனமாற்றம் அடிக்கடி இருக்கும். 2022ஆம் ஆண்டு எல்லா வகையிலும் நன்மையுண்டு.

**எண் 6** (6ம், 15ம், 24ம் திகதிகளில் பிறந்தவர்கள்)

சுக்கிரனின் ஆதிபத்தியம் நிறைவாக கொண்ட 6ம் எண் அன்பர்களே! உங்களுக்கு 2022ம் ஆண்டு மிகவும் நன்மைகளும், திருப்திகரமான நிலையும் கொடுக்கும். புதிய முயற்சிகளில் நல்ல வெற்றிகள் இருக்கும். குடும்ப நிலை சார்ந்த நன்மைகள் அமையும். தொழில் நிலையில் பதவி உயர்வுகளும் வெளிநாட்டு பிரயாண அனுகூலங்களும் அமையும். உங்களில் நீண்டகால சிக்கல், இழுபறி நிலைகள் சுலபமாக தீரும் நிலை அமையும். கொடுக்கல், வாங்கலில் சுமக நிலை இருக்கும். எதையும் வெற்றி கொள்ளும் நிலைகள் அமையும். எதிர்பாராத திடீர் நன்மைகளும் அமையும். பூர்வீக சொத்துக்கள் சேரும் நிலை அமையும். வண்டி, வாகன யோகம் இருக்கும். புதிய வாகனம், வீடு, வாங்கும் நிலை அமையும். கூட்டு எண் 8, வார எண் 8, என்பன திடீர் சிக்கல், பிரச்சினை நிலைகளையும் கொடுக்கின்ற பலன் அமையும். எனவே எந்த விடயம் என்றாலும், சற்றுப் பொறுமை, நிதானத்துடன் செயற்படுவது மிக மிக நல்லது. தேவையற்ற வீண், விடயங்களில் தலையீட்டை தவிர்ப்பது மிகவும் நல்லது. பொதுவாகவே மிகவும் சாணக்கியமாக செயற்பட்டு உங்களின் வெற்றியை எப்போதும் தக்க வைத்துக் கொள்ளும் திறன் கொண்ட உங்களுக்கு 2022 மிகவும் அனுகூலமானதாக அமையும்.

**எண் 7** (7ம், 16ம், 25ம் திகதிகளில் பிறந்தவர்கள்)

கேதுவின் நிறைவான ஆதிபத்தியம் கொண்ட ஏழாம் எண் அன்பர்களே! உங்களுக்கு 2022ம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூலமானதாக அமையும் நிலை உண்டு. இடையிடையே சிறு சிறு குழப்பங்கள் போராட்ட நிலைகள் அமையும். சற்று நிதானமுடன் செயற்படுவது மிகவும் நன்மை தரும். தொழில் நிலைகளில் சிறு சிறு குழப்ப நிலைகள் இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறி குழப்ப நிலைகள் தொடரும். அதற்கு ஏற்பவே செயற்திறன் கொண்டு காரியங்கள் நகர்த்த வேண்டும். குடும்ப நிலையில் மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சினைகள் என்பன அமையும் நிலை இருக்கும். அதற்கு ஏற்ப மிகவும் பொறுமை கொண்டு செயற்படுங்கள். கடன் நிலைகளில் சிக்கல் நிலை இருக்கும். உறவினர்களுடன் மனச்சஞ்சல நிலை அமையும். சுபகாரியங்களில் சற்று இழுபறியான நிலைகள் அமையும். வெளிநாட்டு பிரயாணங்களில் இழுபறிகள் தாமத நிலைகள் இருக்கும். எனவே எல்லாவகை நிலைகளிலும், உங்களின் அமைதியான செயற்பாட்டின் மூலமாக நன்மையிருக்கும். பொதுவாகவே நீங்கள் எல்லோருக்கும் உதவி, நன்மை செய்து செயற்பட்டாலும் உங்கள் வாழ்வில் ஏதோ ஒரு சோகம் சூழ்ந்து இருக்கும். அதை புரிந்து, தெரிந்து செயலாற்றி நற்பலன் 2022இல் பெற்று மகிழ்வுறுக.

**எண் 8** (8, 17ம், 26ம் திகதிகளில் பிறந்தவர்கள்)

சனீஸ்வரனின் பூரண ஆதிபத்தியம் கொண்ட எட்டாம் எண் அன்பர்களே! உங்களுக்கு 2022ம் ஆண்டு மிகவும் சிறப்பானதாக அமையும் நிலையிருக்கும். தொழில் சார்ந்த முன்னேற்றம் மிகச்சிறப்பாக அமையும். பணவரவு திருப்திகரமானதாக அமையும் நிலை உண்டு. தொழில் சார்ந்த பதவி உயர்வுகள், வெளிநாட்டு பிரயாணம் என்பன அமைகின்ற பலனிருக்கும். குடும்ப நிலையில் மகிழ்வான நற்பலன்கள் அமையும் நிலைகள் இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் அமையும். கடன் பிரச்சினைகளில் சுமகமான நிலை அமையும். சுபகாரியங்களை எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் நல்ல நிறைவாக அமையும். எதிர்பாராத திடீர் நன்மைகள் அதிஷ்ட பலன்கள் அமையும் நிலையுண்டு. நீண்ட நாட்களாக இழுபறியாக அமைந்த வழக்கு விவகாரங்களில் சுமகமான தீர்வுகள் அமையும். எதையும் சமாளித்து வெற்றி காணும் மனத்தைரியம் அமையும். பொதுவாகவே தன்போக்கான முடிவும் செயலும் கொண்டவர்கள் நீங்கள் யாரிடமும் அறிவுரை கேட்பதை விரும்ப மாட்டீர்கள். உங்கள் முடிவை நிறைவேற்ற எதையும் செய்வீர்கள். எனவே நல்ல சிந்தனை, செயல் கொண்டு காரியங்களை நகர்த்தி 2022ம் ஆண்டு பலவித சிறப்பும் பெறுங்கள்.

**எண் 9** (9ம், 18ம், 27ம் திகதிகளில் பிறந்தவர்கள்)

செவ்வாய் கிரஹத்தின் பூரண ஆதிபத்தியம் கொண்ட ஒன்பதாம் எண் அன்பர்களே!

உங்களுக்கு 2022ம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூலமான பலன்களைக் கொடுக்கும். தொழிற் சார்ந்த திடீர் நன்மைகள் அமையும் சற்று அலைச்சலான நிலைகள் அமையும். மனநிலையில் யோசனை, சஞ்சலம் என்பன அமையும். குடும்ப நிலையில் சிறுசிறு குழப்ப நிலைகள் இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் சற்றுப் போராட்ட நிலை இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலை அமையும். திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்பார்ப்பவர்கட்கு சற்று இழுபறிகள், தடை, தாமத நிலைகள் இருக்கும். சற்று அதிகமான முயற்சி எடுக்க வேண்டும். புதிய சொத்துக்கள் திடீரென சேரும் நிலைகள் அமையும். வாகன அனுகூலம் மிகவும் சிறப்பாக இருக்கும். தொழில் சார்ந்த அலைச்சல் நிலை அதிகமாக அமையும். பொதுவாகவே எந்த விடயம் என்றாலும் போராடியே ஜெயிக்கும், இயல்பு கொண்ட உங்களுக்கு தைரியமான செயல் செய்யும் குணமுண்டு. நியாயமாக செயற்பட்டு மற்றவர்கள் மனதில் இடம் கொள்வீர்கள். 2022 உங்களுக்கு அனுகூலமானதாக இருக்கும்.

(அத்தியாயம் 40)





## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

கல்கி தன் கதையின் ஆரம்பத்தில் எம் வாணர் குலத்து வந்தியத்தேவன் தன் நண்பன் ஆதித்தகரிகாலனிடமிருந்து ஓலைகளைப் பெற்றுக் கொண்டு தஞ்சை நோக்கிப் பயணமானான். இடையே தன் நண்பனைக் கண்டு கொள்ள கடம்பூர் சென்றிருந்தான். அங்கு சோழ குலத்தாரிற்கு எதிராக திட்டமிடும் சூழ்ச்சியை தன் காதுகளில் வாங்கிக் கொண்டு மனம் சோர்ந்தவனாக தஞ்சை சென்று சக்கரவர்த்தியைப் பார்த்து ஓலை கொடுத்து சோழர் குலத்துக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தையும் சொல்ல முயன்றான். பின்னர் பழையாறை சென்று இளைய பிராட்டி குந்தவையிடம் ஓலை சமர்ப்பித்து சூழ்ச்சியின் விபரங்களைக் கூறினான். மீண்டும் அவன் பயணம் இலங்கை வரை தொடர்ந்தது அங்கும் அருள்மொழிவர்மரை சந்தித்து ஓலை கொடுத்து சோழ குலத்தினைக் காக்க முயன்றான். அதன் பின்னர் குந்தவையின் ஓலையுடனும், அநிருத்தரின் ஓலையுடனும் காஞ்சி நோக்கிப் புறப்படுகிறான். எதிர் பாராத விதமாக மீண்டும் அவன் பயணம் கடம்பூர் நோக்கித் திரும்புகின்றது. இவன் தன் பயணத்தில் சந்திக்கும் நண்பர்கள் பகைவர்கள் இடையூறுகள், எதிர்ப்புக்கள், துன்பங்கள் அனைத்தையும் எம் கண்ணிற்குள் பார்ப்போம்.

'ஐயா என் தமையனைக் காக்கும் இரும்புக் கவசம் போல் நீர் உதவ வேண்டும் அவசியமானால் நந்தினி யார் என்பதை என் சகோதரனிடம் சொல்லிவிட வேண்டும். இதை நம்பும் படியாக சொல்வது உம் பொறுப்பு' என்றாள் குந்தவை வந்தியத்தேவனிடம். இந்தப் பொறுப்பினைச் சுமந்தபடி முதல் மந்திரி அநிருத்தரின் ஒலையைக் கையில் எடுத்தபடி அரிசிலாற்றங்கரையில் குதிரையின் மீது ஏறி குடந்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தான். இந்த ஆற்றங்கரை ஓரத்தில் கொஞ்சும் பசுமையும், இளையபிராட்டியின் இனிய நேசமும் அவன் மனதிற்கு இதமாக இருந்தது. அந்த இனிய பொழுதில் ஆழ்வார்க்கடியானும் அங்கு வந்தான். 'வருக வைகூஷ்ணவரே புறப்படலாமா?' என்றான் வந்தியத்தேவன். அந்த நேரத்தில் பல்லக்கு ஒன்று அவர்களைக் கடந்து சென்றது. அதில் ஒரு பெண்மணி இருப்பது தெரிந்தது. அதன் அருகில் தாதிப் பெண் ஒருத்தி சென்று கொண்டிருந்தாள். வந்தியத்தேவன், இந்தப் பல்லக்கில் இருப்பது யார் என ஆழ்வார்க்கடியானிடம் வினாவினான். 'தம்பி நான் சொல்வதைக் கேள் உனக்கு சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுக் கொள்ளாதே தொல்லைகள் உனக்கு எதற்கு குதிரை மீது ஏறிப் போ கொள்ளிடக் கரையில் நான் உன்னைச் சந்திக்கிறேன்' என்றான் ஆழ்வார்க்கடியான். 'ஓ தாங்கள் ஏதோ ஒரு காரியத்தில் ஈடுபட்டுள்ளீர்கள் நான் புறப்படுகிறேன்' என்றபடி குதிரையைத் தட்டி விட்டான் குதிரையும் அவன் எண்ணம் அறிந்து பாய்ந்து சென்றது. பல்லக்கைத் தாண்டிச் சென்ற போது அது வானதி என்று கண்டு கொண்டான். பூங்குழலி பெற வேண்டிய இடத்தை வானதி பெற்றுக் கொள்ளப் பார்க்கிறாள் என்ற கோபம் வந்தியத்தேவனின் உள்ளத்தில் இருந்தது அதனால் நின்று நலம் விசாரிக்காது குதிரையை ஓடவிட்டான். வழியில் குடந்தை சோதிடர் வீடு கடந்து போக வேண்டி இருந்தது. அப்பொழுது, தான் குடந்தை சோதிடரிடம் போய் இராஜ குல அதிஸ்டங்களைக் கேட்டுவிட்டு போவோம் என்று அவன் மனம் சொல்லியது. வானதி கூட இங்கு வருகிறாள் போல் என்றபடி வந்தியத்தேவன் குடந்தை சோதிடர் வீட்டுக்குச் சென்றான். 'முதல் முதல் குந்தவை தேவியை இங்கே பார்த்தேன்' என்ற எண்ணம் அவனுக்கு உதித்து இனிய தருணங்களாக மாறியது புன்னகைப் பொலிவுடன் சோதிடரைப் பார்த்தான் அவரும் அவனை வரவேற்றார். 'நான் கூறிய சோதிடம் உனக்குப் பலித்தது இல்லையா' என்றார் சோதிடர். அதற்கு வந்தியத்தேவன் 'ஆம் ஆம் பலித்தது ஆனால் பலிக்கவில்லை' என்றான். 'பொன்னியின் செல்வர் துருவ நட்சத்திரம் என்றீரே இப்போது நாடே அவர் கடலில் மூழ்கிவிட்டார் என்றல்லவா சொல்கிறது' என்றான். 'ஆமாம் நீ தான் அதற்கு பதில் சொல்ல வேண்டும்' என்று சோதிடர் கேட்டார். 'ஏனெனில் நீதான் அவருடன் கடைசியாக கடலில் குதித்தாய் நான் உன்னிடம் அல்லவா கேட்க வேண்டும்' என்றார் சோதிடர்.

அப்போது வந்தியத்தேவன் சோதிடரிடம் வால் நட்சத்திரம் எப்படி இருக்கிறது என்று கேட்க, 'அது நீளமாக இருக்கிறது ஆனால் அதன் நீளம் குன்றப் போகிறதே! கடவுளே இராஜ குலத்தில் யாருக்கு என்ன நேரிடுமோ' என்றார். வந்தியத்தேவன் உள்ளம் கலங்கியது. படுக்கையாக படுத்திருக்கும் சுந்தர சோழ சக்கரவர்த்தி, நாக பட்டினத்தில் நடுங்கும் சுரம் கொண்டிருக்கும் பொன்னியின் செல்வர், கடம்பூர் மாளிகைக்குப் போய் நந்தினியை சந்திக்க இருக்கும் இளவரசர் ஆதித்தகரிகாலர், இராஜாங்கத்திற்கு ஆசைப்பட்டு மக்கள் கோபத்திற்கு ஆளாகியிருக்கும் இளவரசர் மதுராந்தகர், கொலை வாளை வைத்துக் கொஞ்சும் நந்தினி என எல்லோரும் அவன் உள்ளத்தில் வலம் வந்தனர். யாருக்கு என்ன நேரப் போகிறதோ என்று சோகத்தில் மூழ்கினான். அந்த நேரத்தில் வானதி அங்கு வந்து சேர்ந்தாள். வந்தியத்தேவனிடம் 'ஐயா வணக்கம் நான் சோதிடம் கேட்க வரவில்லை உம்மிடம் ஓர் உதவி கேட்க வந்தேன் நான் புத்த மதத்தில் சேர்ந்து பிக்குணி ஆகப் போவதாக தீர்மானித்து நாக பட்டினம் சென்று கொண்டிருக்கிறேன். வழியில் ஆபத்துகள் காத்திருக்கின்றன போல் தெரிகிறது என்னுடன் உம்மை அழைத்து போகலாமா' என்று கேட்டாள். அதற்கு வந்தியத்தேவன் 'இது என்ன யாருடைய தீர்மானம் உலகம் பொறுக்காதே நடக்கக் கூடாத காரியம் இது' என்று வார்த்தைகளை அடுக்கினான். வானதியோ, 'ஐயா இது என் தீர்மானம் இது முடிவாகி விட்டது உமது உதவியைக் கோருகிறேன்' என்றாள். வந்தியத்தேவன், நானும் இளைய பிராட்டியும் பேசிக் கொண்டதை மயக்கமானவள் போல் இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறாள் பயந்தவளாக இருந்தவளுக்கு எப்படி இப்படித் தைரியம் வந்தது? எதனால் வந்தது பொன்னியின் செல்வரைக் கடல் கொண்டு விட்ட செய்தி கேட்டதாலா? பொன்னியின் செல்வர் நாக பட்டினத்தில் இருக்கிறார் என்ற செய்தியாலா? அல்லது பூங்குழலி இளவரசரை எப்படி அன்பு செய்கிறாள் என்ற செய்தியாலா? எந்தச் செய்தி என்று தெரியாமல் தன்னைக் குழப்பியபடி, 'தாயே என்னை மன்னியுங்கள் நான் அவசரமாக காஞ்சி புறப்பட வேண்டும் என்னால் உங்களுக்கு உதவ முடியாது' என்றான் வந்தியத்தேவன். வானதியும் 'ஆம் ஐயா ஓர் அனாதைக்கு ஆதரவு யாருமில்லை என்பது உண்மை நான் போய் வருகிறேன்' என்றாள். வந்தியத்தேவன் 'தேவி யார் நீங்கள் எப்படி உங்களை அனாதை என்பீர்கள் கொடும்பனார் பராந்தக சிறிய வேளாளரின் செல்வப் புதல்வி தென் திசை சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரியின் வளர்ப்புக் குமாரி பழையாறை இளைய பிராட்டியின் அந்தரங்கத் தோழி இத்தகைய பெருமையுடைய உங்களை யார் அனாதை என்று ஏற்றுக் கொள்வார்கள் தங்களிற்கு இப்போது உதவ முடியவில்லை என்று வருத்தமாக இருக்கிறது' என்று விடை கொடுத்தான் வந்தியத்தேவன். பின்னர் வானதி தனியாகப் புறப்பட்டாள் பல்லக்கு முன்னே சென்றது வந்தியத்தேவன் பின்னே சென்றான். அவன் குதிரை கொள்ளிடக் கரை நோக்கிப் பயணமானது. பயணமான சிறிது நேரத்தில் திடீர் என ஒரு அபயக் குரல் கேட்டது. உடனே திரும்பிப் பார்த்தான் வானதி போய்க் கொண்டிருந்த பல்லக்கைக் காணவில்லை. குரல் கேட்ட திசையில் வந்தியத்தேவனின் குதிரை பாய்ந்து சென்றது. அங்கே வானதியுடன் வந்த பெண் மரத்தில் கட்டப்பட்டிருந்தாள். அவள் வாயில் துணியை அடைத்து வைத்திருந்தார்கள். அதை எடுத்து வந்தியத்தேவன் 'பல்லக்கு எங்கே என்ன நடந்தது' என்று கேட்டான். அதற்கு அந்தப் பெண் 'பல்லக்கு முடக்கில் திரும்பிய போது மரத்தில் இருந்து பலர் வந்து என்னைக் கட்டிப் போட்டு விட்டனர். பல்லக்கு தூக்கிகளைத் தாக்கிவிட்டு பல்லக்கை எடுத்துச் சென்று விட்டனர்' என்றாள். அதற்கு வந்தியத்தேவன் 'சரி நீ போய் சோதிடர் வீட்டில் இரு நான் உன் எஜமானியை தேடுகிறேன்' என்றான். கரிய காரிருள் அமாவாசை இரவு வந்தியத்தேவன் பல்லக்கைத் தேடினான். அந்த நேரம் ஓர் குதிரைச் சத்தம் கேட்கவே அந்தக் குதிரை போகும் திசையைப் பார்த்தான்.




அப்போது மகாராஜா என்ற குரலுடன் ஒருவன் வெளிச்சத்துடன் வந்தான் குதிரையில் இருப்பவர் மதுராந்தகன் என்று அறிந்து கொண்டான் வந்தியத்தேவன். இவர் எப்படி இந்த இருட்டில் இங்கே? என்று நினைத்த போது மதுராந்தகரின் குதிரை வெளிச்சத்தைக் கண்டு மிரண்டு ஓடியது. வந்தியத்தேவனோ ஐயோ! மதுராந்தகர் குதிரை ஓட்டுவதில் திறமை சாலி அல்ல அவருக்கு நான் உதவ வேண்டும் என்றபடி அவரைக் காப்பாற்ற முயன்றான் தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான். நாலாபுறமும் தேடினான் மழை கொட்டியபடி இருந்தது மதுராந்தகரையோ வானதியையோ கண்டு பிடிக்க முடியவில்லை. அவ்வேளை ஒரு குழந்தை அம்மா அம்மா என்று அழும் சத்தம் கேட்டது. வந்தியத்தேவன் அவ்விடம் சென்றான். அங்கு சிறிய குழந்தை ஒன்று கத்தியுடன் நின்றது உன் அம்மா எங்கே என்று கேட்க குழந்தையும் 'அவர் பால் வாங்கப் போய் விட்டார் எனக்கு பல்லக்கு வரும் என்று அம்மா சொன்னார் நீ குதிரையைக் கொண்டு வந்திருக்கிறாய்' என்றது வந்தியத்தேவன் யார் இந்தக் குழந்தை எதற்காக இங்கு நிற்கிறது? யார் பல்லக்கில் வரப் போகிறார்கள் என்று எண்ணியபடி குழந்தையைப் பார்த்தான். அப்போது ஒரு கூட்டம் ஓடிவந்து குழந்தையைச் சூழ்ந்து கொண்டது. வந்தியத்தேவனால் அங்கிருந்து ஓட முடியவில்லை அந்தக் கூட்டத்தில் சதிகாரர் ரவிதாசன், சோம்பன் சாம்பவன், இடும்பன்காரி, தேவராளன் இவர்களுடன் ஒரு பெண்ணும் இருந்தாள். இவர்கள் வந்தியத்வேனைப் பார்த்து 'அடப்பாவி நீயா? எங்கள் இரகசியங்கள் எல்லாம் தெரிந்து கொண்டாய் இன்று உன்னை உயிருடன் விடமாட்டோம் எங்கள் பளுவூர் ராணியும் இங்கே வருகிறார் எங்களுடன் சேர்ந்துவிடு வா போகலாம்' என்றார்கள். பின்னர் எல்லோரும் திருப்புறம்பயத்துக்கு புறப்பட்டனர். அங்கு சென்றதும் அடர்ந்த காட்டில் பாழடைந்த பள்ளிப் படைக் கோயில் சுவர் அருகே வந்தியத்தேவனையும், அவன் குதிரையையும் கட்டிவிட்டு 'தப்பியோட நினைத்தால் உன் உயிரை இழக்க நேரிடும்' என்றனர். பின்னர் சதிகாரர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்தனர். வந்தியத்தேவன் நூறு வருடங்களுக்கு முன்னர் நடந்த மாபெரும் போரின் வரலாற்றை நினைவுபடுத்திப் பார்த்தான். வரகுண பாண்டியருக்கும், அபராஜித பல்லவனிற்கும் மூன்று நாட்கள் கொடிய யுத்தம் நடந்தது கங்க மன்னனும் பல லட்சம் வீரரும் இறந்து போயினர். அவனுடைய ஞாபகார்த்தமாகக் கட்டியது இந்தப் பள்ளிப்படைக் கோயில். கங்கமன்னன் இறந்ததும் பல்லவர் படை சிதறி ஓடியது இச் சமயம் சோழர் படை பல்லவருக்கு உதவியாக வந்தது அப்படைக்கு தலைமை வகித்தவர் தன் திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழன். இவர் கால்கள் செயலிழக்க நான்கு பேர் அவரைத் தூக்கி வந்தனர். இரண்டு கைகளிலும் வாள்கள் சக்கரமாகச் சுழன்றது. இருபுறமும் பாண்டிய வீரர்கள் உடல்கள் மலையாகக் குவிந்தது. பல்லவர் படை திரும்பி வந்தது இரத்த வெள்ளம் ஆறாக ஓடியது. பெரும் வெற்றி கண்டார் விஜயாலய சோழர். பின்னர் வந்தியத்தேவன் நினைவுகள் கலைந்தன. அவன் கண் எதிரே பல்லக்கு தெரிந்தது. யார் இந்தப் பல்லக்கில் என்று பார்த்தான் பளுவூர் ராணி நந்தினி அங்கிருந்த சிறுவனைக் கட்டி அணைத்தாள். அப்போது அந்தச் சிறுவன் 'அம்மா ஏன் என்னை இந்த மலைக் குகையில் ஒளித்து வைத்திருக்கிறீர்கள்' என்றான். அதற்கு நந்தினி 'உன் தந்தையைக் கொன்றவனை பழிக்குப் பழி வாங்கவே' என்றாள். தன் வாளை எடுத்தாள் எங்கள் சபதம் நிறைவேறும் நாள் நெருங்கி விட்டது அது எங்கே எப்படி யார் மூலமாக நிறைவேறப் போகிறது என்று கூறவே 'இங்கு வந்தேன்' என்றாள் நந்தினி. மேலும் நான் செய்த சபதத்தை மறந்து விட்டேன் என்று எண்ணினீர்கள் நாம் மறக்கவில்லை இப்பொழுது சந்தர்ப்பம் கை கூடி வந்திருக்கிறது சோழ நாட்டு சிற்றரசர்களும் பெரிய அதிகாரிகளும் இரு பிரிவாகப் பிரிகின்றனர். பழுவேட்டரையர் சம்புவரையர் முதலியோர் மதுராந்தகருக்கு பட்டம் கட்ட முடிவு செய்துவிட்டனர். கொடும்பானார் பூதிவிக்கிரம கேசரி தென்தஞ்சைப் படையுடன் தஞ்சை நோக்கி வருகிறார் திருகோவலூர் மலையமான் படை திரட்டி வருவதாகவும் அறிகிறேன் எந்த நிமிடமும் யுத்தம் மூளலாம் அதை சமரசப் பேச்சு மூலம் தடுக்க நான் ஏற்பாடு செய்வதாக அறிந்திருக்கிறேன் அது எதற்காக என்பது உங்களுக்க விளங்கவில்லை உள்நாட்டு சண்டை மூண்டால் அதை சுந்தரசோழரும் அன்பின் அநிருத்தரும் சேர்ந்து அடக்கிவிடுவார்கள் சமாதானப் பேச்சு வார்த்தை என்ற பேரில் எங்கள் முதற் பகைவனை கடம்பூருக்கு அழைக்கிறேன் அவனும் கட்டாயம் அங்கு வருவான். அங்கு தான் எம் சபதத்தை முடிக்கிறோம். இதோ வீரபாண்டியனின் கத்தி இதை அவன் மகன் யாரிடம் கொடுக்கிறானோ அவர் பழி முடிக்க வேண்டும் கடம்பூர் மாளிகையில் நான் இருப்பேன். இடும்பன்காரி கோட்டைக் காவலனாக இருப்பான். நாம் பழி முடிக்க உதவி செய்வோம் பழி முடிக்கும் பொறுப்பு யாரிற்கு கிடைக்குமோ அவர் சொல்கிறபடி யாவரும் கேட்க வேண்டும் என்றபடி சிறுவனை அழைத்து 'இந்தக் கத்தியை உனக்கு யாரிடம் கொடுக்க வேண்டும் என்று தோன்றுகிறதோ அவரிடம் கொடு' என்றாள். சிறுவன் அதை எடுத்தான் எல்லோரும் நான் தான் வீரன் பலசாலி என்னிடம் தா என்று கேட்டனர். சிறுவனோ எல்லோரையும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். கடைசியில் 'அம்மா நான் உன்னிடம் தருகிறேன்' என்று நந்தினியிடம் வாளைக் கொடுத்தான். அப்பொழுது 'வீர பாண்டியனைக் கொன்றவனைப் பழி வாங்கும் பொறுப்பு என்னிடம் வந்துள்ளது' என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் நந்தினி. 'தேவி ஆதித்த கரிகாலர் கடம்பூர் வருவார் என்பது என்ன நிச்சயம் அவரை வர வேண்டாம் என்று தடுத்து குந்தவையும் அநிருத்தரும் ஓலை கொடுத்து அனுப்பியுள்ளார்களே!' என்றான் ரவிதாசன். நந்தினியோ, 'எதைச் செய்யவேண்டாம் என்று தடுக்கிறார்களோ அதைத்தான் ஆதித்தன் செய்வான்' என்றாள். அதற்கு ரவிதாசன் 'அவர்கள் ஓலையை கொடுத்தனுப்பிய ஒற்றனை நாம் பிடித்துக் கொண்டோம் அதனால் அந்த ஓலை அவனுக்குப் போய்ச் சேராது' என்றான். பின்னர் நந்தினியிடம் வந்தியத்தேவனை அழைத்து வந்தார்கள். நந்தினியை அம்மா என்று அழைக்கும் சிறுவன் யார் என்பதை கல்கி தெளிவுபடுத்தவில்லை. ஆனால் அச்சிறுவன் பாண்டியனின் மகன் என்று கருதும் படி கதை சொல்கிறார் வீர பாண்டியனை ஆதித்தன் கொல்லும் போது நந்தினி அருகில் இருந்தாள். அதனால் அவன் மகனை அவளிடம் ஒப்படைத்திருக்கலாம் எனலாம் அந்தச் சிறுவன் யார்? என்று கல்கி ஊகிக்க விட்டார். அவன் பாண்டியனின் மகன் என்று ஊகிக்கும் படி நந்தினியும், பாண்டியன் ஆபத்துவிகளும் அச்சிறுவனுக்கு முடி சூட்டி வைத்ததை எம்மால் கண்டு கொள்ள முடிந்தது. வந்தியத்தேவனைக் கண்ட நந்தினி 'இது என்ன நீர் வேண்டும் என்று இங்கு வந்தீரா? தற்செயலாக வந்தீரா?' என்றாள். அதற்கு வந்தியத்தேவன், 'நீங்கள் ஒரு புறம் அந்தக் கிழவரிடமும் (பழுவேட்டரையர்) மறுபக்கம் இந்த மந்திரவாதியிடமும் அகப்பட்டு இருக்கிறீர்கள்! எனக்கு அனுமதி தாருங்கள் உங்களை மீட்டு உங்கள் அன்னை மந்தாகினி இலங்கைக் காட்டில் சுற்றித் திரிகிறவரிடம் அழைத்துச் சென்று சேர்க்கிறேன்' என்றான். அதற்கு நந்தினி ஏமாற்றம் கொண்டவளாய், 'என்னை மீட்டு நீ மணந்து கொண்டால் உனக்கு அனுமதி கொடுக்கலாம் நீ என்னைப் பிச்சை எடுக்க காட்டுக்குள் திரும்பிப் போகச் சொல்கிறாய்' என்று தன் மனதிற்குள் எண்ணியபடி, 'வந்தியத்தேவரே என் சித்தம் யாதெனில் இதோ இந்தக் குழந்தையை பாண்டிய சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து பட்டம் கட்டி துங்கபத்திரையில் இருந்து இலங்கை வரை பரந்து கிடக்கும் சோழ சாம்ராஜ்ஜியத்தின் சிம்மாசனத்தில் அமர்த்தி முடி சூட்டுவதே அதற்கு நீ உதவி செய்வாயா?' என்றாள்.

(தொடரும்...)

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 982



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

*“ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.”*

மருதமர வேர்க்குமிழில் தான்தோன்றியாகத் தோன்றிய விநாயகப்பெருமானின் ஆலயம், அன்பர்களின் தொண்டினாலும், பக்தியாலும் படிமுறை வளர்ச்சியைக் கண்டது. வர்த்தலைவிளானைப் பிறப்பிடமாகக்கொண்டு மலாயா சென்று பின், வேர்க்குமிழ் விநாயகனுக்குப் பணிசெய்யும் நோக்குடன் நாடு திரும்பிய முருகேசு பொன்னம்பலம் அவர்கள், தினமும் மருதடி விநாயகனுடைய எழுந்தருளித் திருக்கோலத்தினையும், அவர் வீதிஉலா வரும்காட்சியையும் மனக்கண்ணில் எண்ணி மகிழ்ந்தவாறிருந்தார்.

அவர் எண்ணம் விரைவில் நிறைவேற மருதமரத்தடியானுடைய அருள் முருகேசு பொன்னம்பலம் அவர்களுக்குக் கிடைத்தது. 1929 ஆம் ஆண்டு வேர்க்குமிழில் குடியிருந்த விநாயகனுக்கு எழுந்தருளிப் பிள்ளையார் செய்வித்ததோடு, அதற்கு அழகொளிரத் தங்கக்குடையும், கிரீடமும் செய்தளித்தார். அத்தோடு விநாயக விரதங்களுள் முக்கியவிரதமாகக் கருதப்படும் விநாயகசதுர்த்தி விரதமும் இதே ஆண்டு ஆவணிமாதத்தில் இக்கோவிலில் ஆரம்பிக்கப்பெற்றது. இதன்பின்னர் இவ்வாலயத்திலே ஆவணிச்சதுர்த்தித் திருநாள் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது.

கந்தர் என்னும் அன்பர் தமக்கு ஏற்பட்ட இன்னல்களை ஆனைமுகன் அருளால் விலக்கி, அர்த்தமண்டபத்தைக் கட்டி முடித்தார். இத்தனை சிறப்புக்களோடு அமைந்த கோவிலுக்கு மகாமண்டபமொன்றையும் கட்டவேண்டுமென முருகேசு பொன்னம்பலம் அவர்கள் மனம் விரும்பியது. 1929 ஆம் ஆண்டு மகாமண்டபத்தையும் கட்டி முடித்தார். இம்மண்டபம் பெயருக்கேற்றமுறையில் மிகப்பெரிதாகவே அமைக்கப்பட்டது. இவ்வாறான ஆலயஅமைப்பிற்குரிய பணிகள் இடம்பெற்றாலும் எதிர்காலத்தில் இவற்றின் பராமரிப்பு எவ்வித இடையூறும் இன்றித் தொடரவேண்டுமென்ற எண்ணம் முருகேசு பொன்னம்பலம் அவர்களுடைய மனதில் உருக்கொண்டது. இதன்விளைவாக ஆலயப்பராமரிப்பிற்கென ஒரு காணியை மருதடிப்பிள்ளையாருக்கு மானியமாக அளித்தார். இவ்வாறான பணிகளைச் செய்து திருப்திகொண்ட முருகேசு பொன்னம்பலம் அவர்கள் மீண்டும் மலாயா சென்றார்.

மலாயா சென்றபோதிலும் இவர் மனம் அமைதியின்றித் தவித்தது. மருதடியானுக்குப் பணிசெய்யும் நிலையைத் தவிர்த்து வந்துவிட்டோமே என்ற ஆதங்கம் அவர் மனதை வாட்டியது. மருதடியான் புகழ்பாடாது, அவன் தொண்டு செய்யாது மலாயா வந்தது தவறென உணர்ந்து மீண்டு, அவன் சேவடியே தஞ்சமெனச் சேவித்தார்.

*“நீயே சரணம் நின தருளே சரணம் சரணம்*
*நாயேன் பலபிழை செய்து களைத்துனை நாடிவந்தேன்*
*வாயே திறவாத மௌனத் திருந்துன் மலரடிக்கு”*

என மனமுருகி வருந்தினார். தஞ்சமென வருவோர்க்கு அஞ்சேல் என அபயகரம் காட்டி ஆதரிக்கும் குஞ்சரமுகத்தான், பொன்னம்பலத்தாரை மீண்டும் வர்த்தலைவிளான் வர அருள்புரிந்து, ஆதரித்து ஆறுதல் அளித்தார்.

தலம், தீர்த்தம், விருட்சம் என்பன இயற்கையாக மருதடிப்பிள்ளையாருக்கு அமைந்தது அவனின் அருளை எடுத்தியம்புவதாகவே காணப்படுகின்றது. பரப்பிரம்ம சொரூபரான ஓங்காரர், ஓங்காரவடிவான யானை முகங் கொண்ட விநாயகராக, தான்தோன்றியாக எழுந்தருளியது இச்சேத்திரத்தின் முதன்மையை உணர்த்துகின்றது. அன்பர் உள்ளம் அமைதிபெற மௌனம் நிறைந்த சூழல் முக்கியமானது. இந்நிலையை எய்த வர்த்தலைவிளான் வெளிநடுவே, மௌனம் நிலவும் நிழல்மிகுந்த பகுதியைத் தேர்ந்தெடுத்தது, இவ்வாலயச் சிறப்பை மேலும் எடுத்தியம்புகின்றது.

ஆடுகள் நீர்பருகும்பொருட்டு கம்மிக்குளத்தை நாடிவந்த இடையரால் இவ்விடத்திலே கணபதி எழுந்தருளியமை இவ்வாலயத்தின் தீர்த்தமகிமையை எடுத்துக்காட்டுகின்றது. அனைத்திற்கும் மேலாக விண்ணளாவிய பந்தலிட்டு யாவரையும் வரவேற்கத்தக்க வகையில், வர்த்தலைவிளான் ஏகாந்தவெளியில் வேர்கொண்ட மருது, விநாயகர் விரும்பிக் குடியிருக்கத்தக்க பெருவிருட்சமாக நின்றமை, இக்கோவிலின் விருட்சப்பெருமையைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறான வகையிலே மருதடிப்பிள்ளையாரின் மான்மியம் காணப்படுகின்றது.

பிள்ளையாரின் மகிமைகளைத் திரட்டித் தருவது பெருங்கதையாகிய பிள்ளையார் காப்பாகும். காப்பு- காத்தல் இரண்டும் ஒன்றே. காப்பு என்பது இடர் அணுகாது தடுப்பது. மனிதனை நோய், நொடி அணுகாது காப்பதற்காகக் கையில் கட்டப்பெற்றகாப்பே, காரண இடுகுறி பெற்று, காப்பு எனப்பட்டது. தன்னை நாடிவரும் அன்பர்களுக்குக் காப்பு அளிப்பதே விநாயகனின் பணியாக இருப்பதால், விநாயகனின் கதை பெருங்கதையாக விளங்குகின்றது. இக்காரணத்தினால் காப்பும், பெருங்கதையும் பிள்ளையார்க்குரியன என்பது புலனாகின்றது. பிள்ளையார் காப்பைப் பெருங்கதை என அழைத்துவருவது குறிப்பிடத்தக்கது.

*வளரும்...*

**சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில்**
**தைப்பூச திருவிழா அழைப்பிதழ்**

பவுர்ணமி 18-01-2022 செவ்வாய்க்கிழமை தைபூசத்தை முன்னிட்டு சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு 1000 நபர்களுக்கு வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னம் பாலிக்கும் தில்லை சிற்றம்பலம், அனைவரும் சாப்பிடவாருங்கள் தர்மத்தினை நீங்கள் காப்பாற்றுங்கள் தர்மம் உங்களை காப்பாற்றும் 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூபாய் 50000/= ஆகின்றது இது சமயம் தங்களால் முடிந்த நன் கொடைகளை செலுத்தி இந்த தர்மத்தின் சிறந்த பலன்களை அடைய அன்போடு அழைகின்றோம்.





நன்கொடைகளை செலுத்தவேண்டிய முகவரி:

சி. நவதாண்டவதீக்ஷிதர்
22/10, கிழக்கு சன்னதி
சிதம்பரம் 608001, 9345512976 gookulpay omganesh.
THIRUCHITRAMBALAM ANNADHANA TRUST
STATE BANK OF INDIA CHIDAMBARAM
BRANCH A/C. NO 30263863248.IFSC. SBIN0000823..MO,DD,CHEK

இந்த வழியாகவும் அனுப்பலாம். உடன் ரசீது பிரசாதங்கள் முறையாக அனுப்பி வைக்கப்படும். நன்றி.
சி. நவதாண்டவதீக்ஷிதர்

# கடந்தவையும் கடப்பவையும் (19)

- உமா மோகன் -

நிலைமையை அறிந்தவராய் நீட்டுக்குப் போகின்றோம் - இனி
பழைமையான வரலாற்றுப் பெயர் கொண்ட

அவ்வூரையும் தாண்டித்தான் போகவேண்டும் - அன்று
நல்லூர் இராசதானி காலத்தில் அரசர்

அண்டையிலே சிறு கோட்டைகளைக் கட்டினராம் - அங்கு
வேண்டும் போது பாய்ந்துபோகச் சுரங்கப்

பாதைகளும் அமைத்தனராம் - அரசர்
பாய்ந்து போன ஊர் ஆதலால் - இது

கோப்பாய் என்று ஆனதாம் - இதை
ஆய்ந்து தான் சொன்னார்களாம் - அரசர்

அங்கு இருந்ததாலும் இப்பெயர் வந்ததாக
இன்றும் பலர் சொல்கின்றார்கள்

சிங்கபுரம், நல்லை நகர் என்ற பெயர்கொண்ட
யாழ் நகரிற்கு அண்மையிலே இருப்பதனால் - நல்ல

வணிகப் பகுதியாக விளங்கும் இப்பூமி
விவசாயத்திற்கு உகந்த நல்ல சிறந்த மண்ணைக்
கொண்டதுவாம் - இங்கு

வாழைச் செய்கைக்கும் தனி மவுசாம் - பிற
சிறு பயிர்களும் நன்கு வளர்வதுண்டாம் - அந்நாள்

மேட்டுநிலப் பகுதியதில் மாரிமழை பெய்ய
கூட்டாகப் பெண்கள் அங்கு போய்

நீட்டுக்கு நின்று நாற்றுக்கள் நடுவராம்
நீர் நிரம்பிய வயல்களில் - அன்று

இயற்கையோடு இசைந்து இன்பமாய் வாழ்ந்தவர் - பின்னர்
இடப் பெயர்வினால் இயல்பு திரிந்தோராய்

அங்கும் இருந்தனர் - நாம்

போகும் பாதையில் ஆங்காங்கு மக்கள்
வேகம் குறைந்தோராய் வீதியில் நின்றனர் - அங்கு

நாளும் புதினம் இராச பாதையிலே - நின்மதியாய்
யாரும் போக இயலாது - அங்கு

போர் வேண்டாப் பதுமைகள் பதுங்கி உள்ளன
யார் வருவார் மாறு வேடத்தில் என்று - தம்

ஒட்டகக் கழுத்துக்களை நீட்டிக்கொண்டு - அளவில்லா
அட்டகாச அழிப்பை முடித்து விட்டு.

நாமும் தான் போகவேண்டும் அவ்வழியால் - ஆனாலும்
உரும்பிராய்ப் பாதைவழி போகவும் வசதியுண்டு

வரிந்து கட்டி நிற்பார் எனத்
தெரிந்த பின்பும் வம்புக்குப் போவானேன்?

கோப்பாய்க்கு மேற்கு எல்லை உரும்பிராய் - அதனால்
மேற்குப் பக்கப் பாதையால் திரும்புகின்றோம்...

(தொடரும்)

# மொன்றியால் வாழ் இளம் பாடகர் கெளரீஸ் சுப்பிரமணியம் தனது பிறந்தநாளை முன்னிட்டு தாயகத்தில் பாடசாலை மாணவர்களிற்கும் விழிப்புலனற்ற மூவருக்கும் உதவிகள் வழங்கினார்



கனடா மொன்றியால் வாழ் இளம் பாடகர் கெளரீஸ் சுப்பிரமணியம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 16ம் திகதி தனது 19வது பிறந்தநாளை முன்னிட்டு தாயகத்தில் தனது தாயார் பிறந்த கிராமத்தில் 10 பாடசாலை மாணவர்களிற்கு துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபாய் 10000 வீதமும் விழிப்புலனற்ற மூவருக்கு தலா ரூ50000 வீதம் வாழ்வாதார உதவிகள் வழங்கினார். மேற்படி அன்பளிப்புக்களை கோப்பாய் பிரதேச செயலர் திருமதி. சுபாஜினி மதியழகன் அவர்கள் வழங்கி வைத்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



கனடாவின் மொன்றியால் மாநகரில் தனது தாயாருடன் வசித்துவரும் செல்வன் கெளரீஸ் சுப்பிரமணியம் விழிப்புலன் அற்ற பாடசாலையில் சிறப்புக் கல்வி பெறுகின்றார். அத்துடன் தான் எதிர்காலத்தில் ஒரு சட்டவல்லுனராக வருவதற்குரிய உயர் கல்வியை தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. கடந்த காலங்களில் கனடாவின் மொன்றியால் மற்றும் ரொறன்ரோ நகரங்களில் மேடைகளில் பாடுவதையும் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதிலும் நன்கு அறிமுகமானவர்.



இதன் மூலம் கிடைக்கும் நிதியை தாயகத்தில் விழிப்புலன் அற்றவர்களுக்கு அனுப்பிவைத்து தனது தாயாரின் வழிகாட்டலில் இருவரும் மன நிறைவு அடைந்து வருகின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



செய்தி: அர்சுன் - Arjune



மொன்றியால்
வீணைமைந்தன்
எழுதுகின்றார்




# 'மஹாகவி' பாரதி பாடல்கள்

*அத்தியாயம் - 07*

"பாரதி" என்ற பெயரை நீங்களே உங்களுக்குச் சூட்டிக் கொண்டீர்களா? அல்லது யார் உங்களுக்கு "பாரதி" என நாமம் சூட்டினார்கள்?"
(பிரபல) நாடறிந்த உலகறிந்த பட்டிமன்றப் பேச்சாளர் - எழுத்தாளர் பாரதியின் கவிதை வழி சிந்தனைகளை தனது சொற்பொழிவுகளுக் கூடாக மக்களுக்கு எடுத்துரைக்கும் திருமதி பாரதி பாஸ்கர் அவர்களை ஒரு தொலைக்காட்சி ஊடக-வியலாளர் நேர்காணல் செய்த வேலை எழுப்பிய சந்தேக வினாவே இதுவாகும்!

"எனது தாயார் எனக்கு சூட்டிய பெயர் இது. மூத்தவளான எனது சகோதரிக்கு "ஹேமா" என அதாவது உமாதேவியாரைக் குறிக்கும் நாமம் அது, பெயர் சூட்டியிருந்தார்கள். இயல்பிலே எனது அம்மா "மகாகவி"யின் தீவிர ரசிகை பக்தை என்றே கூறலாம்.

கல்வித்தெய்வம் சரஸ்வதியையும் "பாரதி" என்றே போற்றி வணங்குவதால், என்னுடைய பெயரும் ஒரு தேவதையை நினைவூட்டுவதாக இருக்கட்டுமென எனக்கு என் தாயாரால் இடம்பெற்ற பெயரே "பாரதி"!

பெயருக்கேற்றார் போல் "பாரதி"யை பின்னாளில் காதலுடன் வாசிக்கத் தொடங்கி விட்டேன். ஒவ்வொரு காலத்திலும் பாரதி பாடல் வரிகள் புது புது விளக்கங்களையும், சிந்தனை வெளிப்பாடுகளையும் தோற்றுவித்தது. அவ்வப்போது கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி எனது பேச்சுகளுக்கிடையே "பாரதி"யின் சத்திய வரிகளை மக்களிடம் எடுத்துச் செல்கிறேன்! அவ்வளவு தான்! வேணுமென்றால் என்னை அந்த தெய்வீக பாரதியின் மகள்களில் ஒருவராக வைத்துக் கொள்ளுங்கள்!

இவ்வாறு "பாரதி"யை நன்கு வாசித்து உணர்ந்தவர்கள் பெருகிக் கொண்டே இருக்க வேண்டும்! இளைய தலைமுறையினர் "பாரதி"யின் தலைமுறை கடந்த கருத்துகளையும் - சிந்தனைகளையும் உணர வைப்பதே சான்றோர்களின் கடமையாக தொடர வேண்டும் என்பதே எனது பேரவா ஆகும்!

"தமிழ் சினிமாவில் "மகாகவி" பாரதி பாடல்கள், என தலைப்பிட்டிருந்தாலும் பாரதியின் நினைவு நூற்றாண்டைக் கொண்டாடும் இக்காலத்தில் பாரதி ஐயா பற்றிய தமிழ் கவிஞர்கள் எழுதி வைத்ததையும் அவ்வப்போது நினைவூட்டி மகிழவிரும்புகிறேன்.

இதோ பாரதியின் வாரிசென வந்தவர்களில் ஒருவரான நமது "கவியரசு" கண்ணதாசன் எழுதி வைத்த சில புகழ் வரிகள்...

"வான வீதியிலே
பாரதியை கண்டேன்
வைத்த விழி வாங்காமல்
வார்த்தபடி நின்றேன்
மோனவெளி வீதியிலே
மூச்சடங்கி நின்றான்
மூன்று தமிழ் ஆய்ந்த கவி
முன் நடந்து சென்றேன்

கூனலிளம் வெண்ணிலவின்
குளிர் முகத்து நடுவே
குத்துகிற மீசையையும்
கூர் விழியும் கண்டேன்
தேனமுதப் பாவலனின்
சிந்தையிடை யாதோ
தீராத துன்பநிலை
சிந்துவதை கண்டேன்!



படித்தேன் ரசித்தேன் என கவியரசர் பாரதியை உங்கள் கண்முன் நிறுத்தியுள்ளேன். இனி "மங்கியதோர் நிலவினிலே" உலா போவோம் வாருங்கள்.

"அழகு தெய்வம்" எனும் தலைப்பில் பாரதி ஐயாவினால் எழுதப்பட்டு பாடப்பெற்ற 24 வரிகளுள் அமைந்த பாடல் வரிகளுள் முதல் 8 வரிகளை மட்டும் முதன்முதலாக 1959 ஆம் ஆண்டு வெளியான "திருமணம்" படத்தில் ஏழிசை வேந்தர் அமரர் ரி.எம் சௌந்தரராஜன் அவர்கள் படத்தின் நாயகன் திரு ஜெமினி கணேசன் அவர்களுக்காக அழகாக பாடியிருந்தார்கள். படத்தில் இடம் பெற்ற பாடல் மெட்டு போட்டு இசையமைத்தவர் இசை மேதை ஜி ராமநாதன் ஐயர் ஆவார்!

இதே பாடல் அடுத்த ஆண்டு வெளியான "பாவை விளக்கு" படத்திலும் இடம்பெற்றிருந்தது. (1960) புகழ்பெற்ற நாவலாசிரியரான அமரர் அகிலன், "கல்கி" வார இதழில் எழுதிய "பாவைவிளக்கு" நாவலை திரைக்கதை வசனம் எழுதி இயக்கியவர் "புராண இதிகாச அருட்செல்வர்" அமரர் ஏபி நாகராஜன் ஐயா அவர்களாகும்.

"திரை இசைத் திலகம்" கேவி மகாதேவன் இசையில் "இசை சித்தர்" சி எஸ் ஜெயராமன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஐயாவிற்காக பாடியிருந்தார்.

ஒரே பாடலில் இரு வெவ்வேறு பாடாகர்களால் வேறு வேறு இராகங்களில் பாடப் பெற்றிருந்தது. இருவரது குரல் வளமும் எங்களையும் முணுமுணுக்க வைத்தது.

மூன்றாவது திருமதி சிவசங்கரி அவர்களது நாவலான "ஒரு மனிதனின் கதை" தொலைக்காட்சி தொடராகவும் "தியாகு" என்னும் பெயரில் ஏவிஎம் தயாரிப்பில் வெளிவந்த படத்திலும் "மங்கியதோர் நிலவினிலே" பாடல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இசையமைத்தவர்கள் சங்கர் - கணேஷ் ஆகியோராவர்.

இதோ மூன்று திரைப்படங்களிலும் இடம்பெற்ற "பாரதி" ஐயாவின் "மங்கியதோர் நிலவினிலே.." வரிகளாவன..

பல்லவி

"மங்கியதோர் நிலவினிலே
கனவிலிது கண்டேன்"

சரணங்கள்
வயது பதினாறிருக்கும்
இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு
போன்றவொளி முகமும்
புன்னகையின் புது நிலவும்
போற்ற வரும் தோற்றம். (மங்கியதோர்)

துங்கமணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதே எழுந்தென்னை(ப்)
பாரென்று சொன்னாள்!
அங்கதனின் கண்விழித்தேன்
அடடா.. வோ அடடா.. !
அழகென்னும் தெய்வந்தான்
அதுவென்றே அறிந்தேன். (மங்கியதோர்)

இவ்வாறு பாடல் வரிகள் அவரவது இசை குரலில் கேட்கும்போது உங்களால் விரும்பப்படும் அல்லது காதலிக்கப்படும் அழகு மகள் உங்களது மனத்திரையில் வந்து நடனமாடுவாள்!

"மகாகவி" பாரதி ஐயா எழுதிய பாடல்களில் அவர் கண்ணனிடத்து பக்தியும் - பிரேமையும் கொண்டு பாடிய பாடல்கள் யாவும் தெய்வீக பாசுரங்களாகும்.

"கண்ணன் பாட்டு" என்றே தனி அத்தியாயம் அவரது பாடல் தொகுப்பில் காணலாம்.

கண்ணன் என் தோழன் — என் தாய்
என் தந்தை
என் சேவகன்
என் அரசன்
என் சீடன்

எனது சற்குரு, என பலவாறு கண்ணனை கொண்டாடியிருப்பார் "மகாகவி". இவ்வளவு தலைப்புகளில் இடம்பெற்ற சில வரிகளை மட்டும் தங்களது நாயகனது குணாதிசியத்திற்குப் பொருத்தமாக தேர்ந்தெடுத்து காலத்தால் அழியாத ஒரு கம்பீர இசைக் கோர்வையை இசையமைக்க வைத்து பிரமாதப்படுத்தியிருப்பார்கள். அந்த இசை மேதையும், இயக்குனரும்! யாரென்று அறிவதற்கு அடுத்த இதழ் வரை காத்திருங்கள்!

*- வீணை மைந்தன்*

**"மக்கள் திலகம்" - "பொன்மனச் செம்மல்"**
**அமரர். எம் ஜி ராமச்சந்திரன் அவர்களது**
**105 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

# நான் கண்டன் ராமபிரான்

சூரியக் கதிரொன்று
வீரியம் மிகவே கொண்டு
கரியமால் அம்சமொடு
ஆரிய ராமன் போன்று - ஆங்கே
வாய்மையின் வடிவமான
சத்யாதாய் உதரத்தில்
உதித்தனன் தேவமைந்தன்!
பதித்த நல் நாமமோ ராமச்சந்திரன்,

பாரிலே உதித்த மைந்தன்
பாரிபோல் குணமே கொண்டான்
யாரிவன் தேரோட்டி மகனேயான
பாரத கர்ணனோ! மாரி போல் வழங்கி நின்றான்!

யாருமே இவனைப் போன்று
இறந்தபின் வாழ்ந்ததில்லை!

இறவாத புகழுடைய "ராமச்சந்திரன்"
நீடூழி வாழ்க மாதோ!

**- வீணை மைந்தன்**

பின் குறிப்பு 2017 மக்கள் திலகம் 100வது ஆண்டு பிறந்தநாள் விழா மொன்றியல் நகரில் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு கொண்டாடப்பட்டது வரலாறாகும்.

# அன்பின் தொனி - 638

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

A. **பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**பரிசுதம் என்றால் என்னத்தைக் கருதுகிறோம்?**
**இந்த இரத்தம் பிசாசானவனை எதிர்த்து நிற்கிறது**

இந்த கடைசி நாட்களில் பிசாசானன் தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக சகோதரரைக் குற்றஞ்சாட்டுவதே அவனுடைய முக்கிய கிரிகையாக இருக்கிறது. கிறிஸ்து தனக்காகச் சிந்திய இரத்தத்தின் கிரியையை ஏற்றுக்கொண்ட எவருக்கும் எதிராக குற்றஞ்சாட்ட பிசாசானவனுக்கு எந்தவித ஆதாரமுமில்லை. ஆண்டவர் தமது சொந்த இரத்தத் தினால், பிரதான ஆசாரியன் எனும் தமது சிறப்பான ஊழியத்தின்மூலம் அவனை எதிர்த்து நிற்கிறார்.

அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது, இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட் டுப்போனான். **- வெளிப்படுத்தல் 12: 10**

கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். **- எபிரேயர் 9: 11-12**

இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்ற ஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே. **- ரோமர் 8: 31-34**

B. **கிறிஸ்துவின் இரத்தம் எமக்கு அளிப்பவை:**

- இருதயத்தில் பரிசுத்தம்
- நித்திய ஜீவன்
- தேவனை அணுகும் சிலாக்கியம்

அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். **- 1 யோவான் 1: 7**

அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்த த்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு, நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். **- யோவான் 6: 53-56**

**பரிசுத்தம் அடைவதற்கான வழி**
**மனந்திரும்புதல்**

மனிதன் தேவனண்டை கிட்டிச்சேர பரிசுத்தம வேண்டும் என்பதையும், அந்த பரிசுத்தத்தை ஆண்டவராகிய இயேசு மூலமாகவே அடைய முடியும் என்பதையும், அதற்கான சகல நியமங்களையும் இயேசுதாமே கல்வாரி சிலுவையிலே நமக்காக இரத்தம் சிந்தி மரித்ததின் மூலம் செய்து முடித்துவிட்டார் என்பதையும், வேத வசனங்களுக்கூடாக மேலே வாசித்த பகுதிகளிலிருந்து அறிந்து கற்றுக்கொண்டவர்கள் அந்தப் பரிசுத்தத்தை பெறுவதற்கான நடைமுறைகளை மேலும் பரிசுத்த வேதாகமத்திறகூடாக தெரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இசே கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு அருளும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான முதற்படி, மனந்திரும்புதல்.

ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதய த்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். **- அப்போஸ்தலர் 2: 36-38**

அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். **- அப்போஸ்தலர் 17: 30**

தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண் டாக்குகிறது, லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. **- 2 கொரிந்தியர் 7: 10**

*தொடரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோவில்
கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
பொங்கல் பொதி
PONGAL POTHI
Tasty Tamila புதிதாக அறிமுகம்
செய்துள்ள
பொங்கல் பொதிகள்
சங்கர் அன் கோ வில் கிடைக்கும்
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# இவ்வார ராசிபலன்

## 21-01-2022 வெள்ளி தொடக்கம் 27-01-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** யோகமும், தியாகமும் கலந்த வாரம். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். சந்தோ‘ம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடி தீரும். வீண் செலவு கூடும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. கல்வியால் செலவு ஏற்படும். குதூகலம் தழைத்தோங்கும். வாகனச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நற்செய்திகள் நாடி வரும். விவாதம் தவிர்ப்பது நல்லது. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையும். நிதி நிறுவனம் லாபம் தரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வேண்டாத நட்பு விலகும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். புத்திரரால் பூரிப்பு உண்டு. காரியத் தடை அகலும். கட்டிடத்தொழில் லாபம் உண்டு. தந்தை நலன் கூடும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 5,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: யானைநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**ரிஷபம்:** திட்டமிட்ட காரியத்தில் வெற்றி பெறும் வாரம். வேலைப்பளு அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். எண்ணங்கள் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விளையாட்டுத்துறை வெகுமானம் தரும். கலைத்தொழில் கௌரவம் கூடும். குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டு பயணம் உண்டு. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பணிவு அவசியம். பணவரவு உண்டு. முயற்சி பலன் தரும். பொருளாதாரம் உயரும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். கல்வியில் கவனம் குறையும். வாழ்வு நிலை உயரும். மன வேதனை குறையும். கணவன், மனைவி கல்கலப்பு ஏற்படும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். பங்குச்சந்தை மாற்றம் தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய கடன் தீரும். திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. நல்லோர்கள் நட்பு கிட்டும். ஸ்திர சொத்துக்கள் சேரும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். பணியில் பாராட்டு கிட்டும். காதல் பிரிவு ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். புதிய வாகனம் வாங்குவீர்கள். நிர்வாகத் திறன் கூடும். கலைத்தொழில் திருப்பம் தரும். கால்நடைகளால் சிரமம் உண்டு. இழுபறி நிலை நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,U




**மிதுனம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். மன வேதனை அதிகரிக்கும். பழிச்சொல் தேடி வரும். சுபகாரியம் தடைப்படும். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். பேச்சில் இனிமை தரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆரோக்கியம் கூடும். அடிப்படை தேவைகள் நிறைவேறும். அரசியலில் புகழ் சேரும். திடீர் வரவு உண்டு. விவசாயிகள் பயன்பெறுவர். கல்வியில் மேன்மை உண்டு. நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. இடமாற்றம் தடைப்படும். பழைய நண்பர் உதவி கிட்டும். நிம்மதி பெருகும். தொழில் சிக்கல் மறையும். சோதனைகள் நீங்கும். பயணம் அனுகூலம் கூடும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவி சச்சரவுகள் தீரும். அரசு வாய்ப்புகள் உண்டாகும். செயல் திறமை அதிகரிக்கும். சகோதரியால் அனுகூலம் உண்டு. மனம் மகிழும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,1,2,3
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**கடகம்:** கண்ணியமான புண்ணியங்கள் சேரும் வாரம். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். அரசு உதவிகள் கிட்டும். விவசாய விளைச்சல் அதிகமாகும். வில்லங்கம் விலகும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். காரிய அனுகூலம் கிட்டும். கேட்ட கடன் கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். சுப விரயம் ஏற்படும். புத்தாடை ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புகள் கூடும். மருத்துவச் செலவு கூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். திண்டாட்டங்கள் குறையும். பெருமைகள் கூடி வரும். வறுமை நிலை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்ப்பேச்சில் கவனம் தேவை. உடல்நலத்தில் அக்கறை வேண்டும். நிர்வாக அலைச்சல் கூடும். வெளியூர் பயணம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. வியாபாரம் லாபம் தரும். சொத்துச் சேர்க்கையுண்டு. வீண் வம்பு விலகும். நிதி நிலைமை சீராகும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y




**சிம்மம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். வரவுகள் அதிகரிக்கும். உறவினரால் தொல்லைகள் நேரும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். கொள்கையில் பிடிப்பு சேரும். உடல் உபாதை தீரும். நிர்வாக பொறுப்பு கூடும். மனைவியால் ஆறுதல் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைதூர பயணம் உண்டு. பணிச்சுமைகள் குறையும். வியாபார மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். தொழிலில் மாற்றம் ஏற்படும். குடும்ப அமைதி கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கைகொடுக்கும். புதிய வாய்ப்பு தேடி வரும். பெருமை கூடும். இல்லத்தில் நல்லவை நடக்கும். பழைய நட்பு தொல்லைத் தரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். சுபகாரியம் கூடி வரும். பொதுபணியில் ஆர்வம் கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 5,1,2,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கன்னி:** ஆரோக்கிய திருப்தி அதிகரிக்கும் வாரம். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக மாற்றம் உண்டு. பயணம் தடைப்படும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல் உபாதை ஏற்படும். அமைதியாக இருப்பது நல்லது. இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர்களின் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். கல்வியில் தடை ஏற்படும். உடல் சோர்வு நீங்கும். காதல் எண்ணம் உருவாகும். காரிய வெற்றி கிட்டும். எதிலும் நிதானம் தேவை. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். வெளியூர் பயணம் நன்மைகள் தரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். நற்செய்திகள் வரும். நல்லோர்களின் வாழ்த்து உண்டு. எண்ணங்கள் நிறைவேறும். தடைகள் விலகும். நாவடக்கம் தேவை. சந்தோஷம் அதிகரிக்கும். பண நெருக்கடிகள் தீரும். உடல்வலிகளிலிருந்து விடுதலை பெறுவீர்கள். பூர்வீக சொத்து சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 9,7,2,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,J




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
‘ராஜயோகம்’
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**துலாம்:** உதவியும், பதவியும் தேடி வரும் வாரம். அலைச்சல் அதிகரிக்கும். மனதெளிவு கூடும். மனைவியின் அன்பு கிட்டும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கூடும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விவசாயம் விளைச்சல் தரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை ஏற்படும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்று உபாதை வந்து சேரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. தொழில்போட்டிகள் மறையும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். பிள்ளைகளால் பெருமை சேரும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். குதூகலம் தாண்டவமாடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 3,6,9,2
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,A




**விருச்சிகம்:** சாமர்த்தியமாக செயல்படும் வாரம். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். முயற்சி பலன் தரும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பணவரவு உண்டு. பதவி வாய்ப்பு வரும். வருமானம் கைகூடி வரும். நண்பர்களால் நன்மை உண்டு. பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். பொன்னான நேரங்களாக அமையும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். தாய் நலனில் கவனம் தேவை. வழக்குகள் சாதகமாகும். உலோகத்தொழில் லாபம் தரும். கடன் பிரச்சனை தீரும். வம்பு தும்புகள் ஒழியும். ஆடம்பர எண்ணம் உருவாகும். வளமான வாழ்வு அமையும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**தனுசு:** ஆசைப்பட்ட பொருள் சேரும் வாரம். காரியங்கள் கை கூடும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். பணப்புழக்கம் சரளமாகும். கடன் சுமை குறையும். நலமே விளையும் இனிய வாரமாகும். பெண்களின் விருப்பம் ஈடேறும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பிரார்த்தனையால் பலன் உண்டு. புதிய வாய்ப்புக்கள் வரும். குலதெய்வ வழிபாடு மேன்மை தரும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். பணநடமாட்டம் கூடும். செய்த்தொழில் சிறப்படையும். ஆன்மீகவாதிகள் முன்னேற்றம் அடைவார்கள். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். இடமாற்றம் நன்மை தரும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். உணவுப் பிரியம் அதிகரிக்கும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு ஏற்படும். வெளிநாட்டு நபருடன் பேச்சு நடக்கும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடுங்கள். தொலைதூர தொடர்பு லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y




**மகரம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். கிருபைகள் சேரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்பட்டு மறையும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பகைவர் பணிந்து நிற்பர். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். ஏற்றுமதி தொழில் லாபம் கிடைக்கும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களில் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். சுபிட்ஷங்கள் பெருகும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சேமிப்பு பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுபணிகளில் ஆர்வம் கூடும். பங்குச்சந்தை லாபம் தரும். வீண் வம்பு விலகும். இடமாற்றம் ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். விருந்தினர் வருகை உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 7,1,5,3
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,D




**கும்பம்:** மனதில் மகிழ்ச்சி பெருகும் வாரம். பாராட்டுக்கள் கூடும். தொழில் வளர்ச்சி கூடும். சுபச்செய்தி கூடி வரும். குடும்ப ஒற்றுமைக் கூடும். நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். விவாத முயற்சி வெற்றி தரும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் விளைச்சல் தரும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். கனவுத் தொல்லையுண்டு. செல்வாக்கு பெருகும். இனிதான காரியங்களை நினைத்து செயல்படுவீர்கள். பொன், பொருள் சேரும். செலவுகள் குறையும். குழப்பங்கள் அகன்று போகும். குதூகலம் அதிகமாகும். மனோ பயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். வியாபாரத்தில் நன்மை உண்டு. மனதில் உள்ள பயம் நீங்கிவிடும். மனிதாபிமானம் உண்டாகும். சமூகசீர்நிலை உண்டாகும். மனதில் குழப்பங்கள் தீரும். மன அமைதி உண்டாகும். வீட்டில் சந்தோஷம் நிலவும். சமுதாய பிரச்சனைகள் அகலும். கலை ஆர்வம் கூடும். உங்களால் நிறைய ஆத்துமாக்கள் வாழ வேண்டி வரும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். எதிர்மறை எண்ணம் உருவாகும். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். திருமண முடிவுகள் நல்லதாக அமையும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர்கள். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 9,5,1,3
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X




**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்பு கிடைக்கும் வாரம். கலை ஆர்வம் பெருகும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உடல்நிலையில் கவனம் தேவை. பிள்ளைகளிடம் அன்புடன் நடந்துக்கொள்வீர்கள். புதுத்தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். மற்றவர்களிடம் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லா பயங்கள் நீங்கும். மன தைரியம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச்சந்தை தொழில் பணம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். நன்மைகள் பெருகும். போட்டி பொறாமைகள் விலகும். புதிய சிந்தனை உருவாகும். விவசாய விளைச்சல் மூலம் நற்பலன் உண்டாகும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. போட்டிகள் மறையும். தொல்லைகள் அகலும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியுண்டு. கல்வியில் ஆர்வம் கூடும். புகழும், பொருளும் பெருகும். வெற்றிக்கான வழி பிறக்கும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca








25 வெள்ளி விழா 2021

# உதயன் UTHAYAN




உதயம் 1346 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 21, 2022



## இலங்கையில் ஆட்சியில் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் தவறுகள் செய்தாலும் நல்லவர்களாகவே சித்தரிக்க முயலுகின்றார்கள் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

இலங்கையில் தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் தவறுகள் செய்தாலும் தங்களை நல்லவர்களாகவே சித்தரிக்க முயலுகின்றார்கள். அத்துடன் அவர்கள் செய்யும் தவறுகளை விமர்சிப்பவர்களை தவறானவர்களாக காண்பிப்பதோடு. அவர்களை கைது செய்யவும் பொலிஸ் அதிகாரிகளை நிர்ப்பந்தம் செய்கின்றார்கள். அத்துடன் உண்மையாக விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸ் அதிகாரிகளையும் கைது செய்யும் படி தமது சகாக்களான சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றார்கள். *(தொடர்ச்சி உள்ளே 3 ம் பக்கத்தில்)*

## புலி இருக்கும் நாடும் காடும் மிகவும் பாதுகாப்பானவை



அம்மா காலமானவுடன் சுற்றத்தார் அழுது புலம்புவது, அவரை குடும்பத்தார் சிறப்பான முறையில் நல்லடக்கம் அல்லது தகனம் செய்வது என்பது புதிய விஷயமல்ல. அவர் எவ்வளவு அன்பானவராக இருந்தாலும் சரி, அல்லது ஆக்ரோஷத்துடன் கூடிய கோபக்காரராக இருந்தாலும் சரி குறைந்தபட்சம் எளிமையான முறையிலாவது இறுதிக் கிரியைகள் நடைபெறும். ஆனால் இந்த அம்மா காலமான போது ஊர் மட்டும் அழவில்லை உலகமே அழுதது. ஏனென்றால் அம்மாவின் ஆளுமை அப்படி.
*(தொடர்ச்சி உள்ளே 13ம் பக்கத்தில* *மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன், சிவா பரமேஸ்வரன் அவர்களின் கட்டுரை)*

## கனடா "விழித்தெழு பெண்ணே"அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெறும் "உலகளாவிய பெண் ஆளுமைகளை கௌரவிக்கும் பெருவிழா




கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் கனடா "விழித்தெழு பெண்ணே"அமைபபின் ஏற்பாட்டில் இன்று 21ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு **GLOBAL TOWERS LOUNGE HALL** மண்டபத்தில் இடம்பெறும் "உலகளாவிய பெண் ஆளுமைகளை கௌரவிக்கும் பெருவிழாவில் எண்பது பெண்மணிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இலங்கையில் பல்வேறு மாகாணங்களில் வாழும் பெண்மணிகளுள் கலை இலக்கியம் சமூக சேவை. நாடகம். சினிமா. சமயப் பணி போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்காற்றி வரும் வெற்றியாளர்கள் இந்த விழாவில் கௌரவிக்கப்பட வுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுகள் வழங்கும் விழாவையும் யூன் மாதத்தில் கனடாவில் நடைபெறவுள்ள தமிழ் பிரபஞ்ச அழகி-2022 - **MISS TAMIL UNIVERSE-**2022-இற்கான போட்டியாளர்களை தேர்ந்தெடுக்கும் நிகழ்விற்காகவும் தற்போது கொழும்பிற்குச் சென்றுள்ள நிறுவனத்தின் ஸ்தாபகரும் "விழித்தெழு பெண்ணே" அமைப்பின் தலைவி திருமதி சசிகலா நரேன் மற்றும் அவரது குழுவினர் ஆகியோர் இரண்டு நிகழ்வுகள் தொடர்பாக தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

மேற்படி இரண்டு பெரு நிகழ்வுகளுக்கும் இலங்கையின் வீரகேசரி நாளிதழ். சக்தி தொலைக்காட்சி. கனடாவின் உதயன் வார இதழ் மற்றும் கனடா சங்கர் நல்லதம்பி அவர்களின் நிறுவனம் ஆகியவை பிரதான அனுசரணையாளர்களாக உள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மொன்றியால் "வெஸ்ட் ஐலண்ட் தமிழ்க் கலாச்சாரச் சங்கம்" நடத்திய "தைப்பூசமும் வேலின் பெருமையும்" தலைப்பிலான இணையவழி கருத்தரங்கம்




கனடாவின் மொன்றியால் மாநகரில் கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் "வெஸ்ட் ஐலண்ட் தமிழ்க் கலாச்சாரச் சங்கம்" நடத்திய"தைப்பூசமும் வேலின் பெருமையும்" என்னும் தலைப்பிலான இணையவழி கருத்தரங்கம் கடந்த 16-01-2022 ஞாயிற்றுக்கிழமையன்று இணையவழி ஊடாக சிறப்பாக நடைபெற்றது.
*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

## TAMIL HERITAGE MONTH CELEBRATIONS HOSTED BY MPP HON. RAYMOND CHO
## மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் றேமண்ட் சோ அவர்கள் நடத்திய தமிழர் மரபுரிமை மாத கொண்டாட்டம்



ஒன்றாரியோ மாகாண அரசின் மூத்த பிரஜைகளின் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும். ஸ்காபுறோ வடக்கு தொகுதியின் உறுப்பினருமான கௌரவ றேமண்ட் சோ அவர்களின் தொகுதி அலுவலகம் ஏற்பாடு செய்த " தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்ட நிகழ்வு கடந்த பொங்கல் தினமான 14ம் திகதி வெள்ளிக்கிழமையன்று. இணையவழி ஊடாக இடம்பெற்றது. *(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*

## கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நடத்தும் பொங்கல் விழா




23.01.2022 அன்று, காலை 10.30 மணிக்கு எமது கழகத்தால் நடத்தப்படவிருக்கும் பொங்கல் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**Zoom I.D : 893 9779 6624**
**Passcode: Poets**

அன்புடன்,
கந்த ஸ்ரீ பஞ்சநாதன் (தலைவர்)
பவானி தர்மகுலசிங்கம் (செயலாளர்) குமரகுரு கணபதிப்பிள்ளை.(பொருளாளர்)

